பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 04 செவ்வாய்க்கிழமை (20.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 236

20 JUL 2010

## சர்வகட்சிக் குழுவின் ஆலோசனைகள் சில

கொழும்பு, ஜூலை 20

சர்வகட்சி குழுவின் ஆசோனைகளை அக்குழுவில் இடம்பெற்ற இருகட்சிகளைச் சேர்ந்த ஆர். யோகராஜன், நிசாம் காரியப்பர் ஆகிய இருவரும் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அதில் அடங்கியுள்ள சில ஆலோசனைகள் வருமாறு:

* இலங்கை குடியரசு பிரிக்கப்படாத, இறைமையுள்ள நாட்டுக்குள் ஒற்றை ஆட்சி அரசாக இருக்கும். அரச அதிகாரம் மத்திய மற்றும் மாகாணங்களுக்கு இடையில் பிரிக்கப்படும்.
* இலங்கை நாடாளுமன்ற அரசின் வடிவத்தைப் பின்பற்ற வேண்டும்.
* ஒவ்வொரு மாகாணமும் 7 செனட்டர்களைக் கொண்டிருக்கும். மொத்தம் 63 செனட்டர்களை இது உள்ளடக்கும்.

இதற்கு புறம்பாக 10 செனட்டர்கள் (வடக்கு-கிழக்கு வெளியே வசிக்கும் முஸ்லிம்களுக்கு ஒன்றும் ஏனையவை இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும்) பிரதிநிதித்துவப்படாத சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஜனாதிபதி 02 பிரதிநிதிகளை நியமிப்பார்.

* தேசிய மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்கும்.
* ஆங்கிலத்தை உத்தியோக நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும்.
* அரசமைப்பின் உயர்தன்மை அரசமைப்பு நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். இந்த அரசமைப்பு நீதிமன்றம் தற்போதுள்ள நீதிமன்றக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும். ஆனால், இது உயர்நீதிமன்றத்திலிருந்து பிரிந்தே இருக்கும்.
* விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையைக் கொண்ட தேர்தல் தொகுதி அடிப்படையிலான தொகுதிவாரி முறைமையையும், கட்சி அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையையும் கொண்டதான இரண்டு வாக்குச் சீட்டுகளுடனான ஒரு கலப்புத் தேர்தல் முறை அமுல்செய்யப்படவேண்டும்
* மக்களின் அதிகாரம் அரசின் மூன்று மட்டங்களிலேயே பகிரப்பட்டிருக்கும். மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி அரசு என்பவையே அந்த மட்டங்கள். ஒவ்வொரு மட்டமும் அரசமைப்பின் ஊடாகத் தனித்தனியான அதிகாரப் பட்டியலைக்கொண்டிருக்கும்.

(முழுவிவரம் 3 ஆம் பக்கத்தில்)

### பதின்மூன்று மாதங்களின் பின்னர்

# ஜனாதிபதி முடக்கி வைத்திருந்த சர்வகட்சிக்குழு அறிக்கை பகிரங்கம்

## குழு உறுப்பினர்கள் யோகராஜன், நிசாம் காரியப்பர் வெளியிட்டனர்



கொழும்பு, ஜூலை 20

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் 13 மாதங்களுக்கு முன் ஒப்படைக்கப்பட்ட அரசியல் தீர்வு யோசனை நேற்று அம்பலப்படுத்தப்பட்டது.

அறிக்கையின் பிரதிகளை அக்குழுவின் உறுப்பினர்களான ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டனர்.

இந்த அறிக்கையை இப்போது சமர்ப்பிப்பதன் மூலம் இது இந்நாட்டு மக்களாலும், சர்வதேசத்தாலும் பரிசீலிக்கப்பட்டு நிரந்தர அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கு வழிஏற்படும் என்று தாம் நம்புவதாக அவர்கள் இருவரும் தெரிவித்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)



## முஸ்லிம்களுக்குச் சுயாட்சி கிடைக்குமானால் வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிக்கவலை இல்லை

### நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

முஸ்லிம்களுக்குத் தனியான சுயாட்சி கிடைத்தால் வடக்கு - கிழக்கு இணைந்திருப்பது பற்றியோ அல்லது பிரிந்திருப்பது பற்றியோ தமக்குக் கவலை இல்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர் நேற்றுக் கூறினார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையை ஊடகங்களுக்கு சமர்ப்பிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்றுக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழு அறிக்கை இன்று நாடாளுமன்றில்

கொழும்பு, ஜூலை 20

ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கையின் பிரதியை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கின்றார்.

இதற்கான அனுமதியை தாம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஏற்கனவே பெற்றுள்ளார் என்றும் அவர் கூறினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. மறுசீரமைப்புக் குழு அறிக்கையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது செயற்குழு

கொழும்பு, ஜூலை, 20

ஐ.தே.கட்சியின் மறுசீரமைப்புக் குழுவால் தயாரிக்கப்பட்ட யோசனை அறிக்கையை கட்சியின் செயற்குழு நேற்று ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

கட்சியின் ஐந்து உயர் பதவிகளுக்குமான நியமனங்களையும் ஏகமனதாக மேற்கொள்ள முடியாதவிடத்து வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று இந்த யோசனை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னரேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என ஐ.தே.க. தலைவர் ரணில் விக் கிரமசிங்க நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

இதேவேளை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்ன இதுகுறித்து தெரிவித்தவை வருமாறு -

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் மிகப்பிரபலமான முதல் 10 மொழிகளில் தமிழும்!

கொழும்பு, ஜூலை 20

பிரிட்டன் தலைநகரான லண்டனில் மிகப்பிரபலமான மொழிகளில் தமிழ் மொழி முதல் 10 இடங்களுக்குள் இருக்கிறது என லண்டன் மெட்ரோ பொலிற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவசர உதவிகளுக்காக பொலிஸாரை

(24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கடற்பகுதிகளை பாதுகாக்க விசேட திட்டம்

### காங்கேசன்துறையில் கடற்பூங்கா

கொழும்பு, ஜூலை 20

வடபகுதிக் கடல் பிரதேசம் மாசடைவதைத் தடுத்து அந்தப் பகுதியைப் பாதுகாப்பதற்கான திட்டமொன்றைக் கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் அமுல்படுத்தவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முகாமைத்துவத் திட்டத்தின்கீழ் இது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் அனில் பிரேமரத்ன கூறினார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக நந்திக்

(24ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று மனு

## குடும்பநல மாது தர்சிகாவின் சடலத்தை மீள் பிரேத பரிசோதனை செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் சடலத்தை மீளத்தோண்டி எடுத்து கொழும்பு சட்ட வைத்திய நிபுணர் மூலம் பிரேத பரிசோதனை நடத்த வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தர்சிகாவின் தாயார் சார்பில் சட்டத்தரணி பி.குகனேஸ்வரன் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.வசந்தசேனன் முன்னிலையில்

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கியூபாவில் மேற்கொண்ட அதிரடிப் பாணியில்

# ஒகஸ்ட் மாதத்தில் நான்கு நாள்கள் டெங்கு ஒழிப்பு தினங்களாகப் பிரகடனம்

## நாடு முழுவதும் சுகாதார அமைச்சு அவசர நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 20

நாட்டில் டெங்கு தீவிரமாகப் பரவிவருவதை அடுத்து, அடுத்த மாதத்தில் நான்கு தினங்களை டெங்கு ஒழிப்புத்தினங்களாகச் சுகாதார அமைச்சு பிரகடனம் செய்துள்ளது.

கியூபாவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் டெங்கு ஒழிப்புப் படையணி செயற்பட்ட பாணியில் இங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவிருப்பதாக சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் முதலாம், இரண்டாம் வாரங்களில் வரும் இரு திங்கட்கிழமையும் மூன்றாம், நான்காம் வாரங்களில் வரும் இரு சனிக்கிழமையும் ஆகிய நான்கு நாள்களுமே டெங்கு ஒழிப்பு தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் அனைத்துப் பொதுமக்களும் மேற்குறிப்பிட்ட நான்கு நாள்களிலும் சுற்றாடலைச் சுத்தப்படுத்துவதன்மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், பொது இடங்களில் டெங்கு ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் விதமாகவும் செயற்பட முன்வருமாறு சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பிட்ட நான்கு நாள்களிலும் நாடு முழுவதிலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், பொலிஸாரின் விசேட செயலணி மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை ஈடுபடுத்தி நாடளாவிய ரீதியில் பரந்த அளவிலான வேலைத்திட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கியூபாவில் டெங்கு ஒழிப்புப் படையணி செயற்பட்டமையைப் போன்று மேற்படிச் செயலணிகள் இங்கும் செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாட்டின்போது நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதத்தில் செயற்படத் தவறும் பொது மக்கள் மற்றும் நிறுவனங்கள் மீது நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு தண்டனை வழங்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-206)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு எல்லா வகையான இரத்தமும் தேவை

## உடன் வழங்கி உதவுமாறு அவசர கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் எல்லாவகையான இரத்தத்துக்கும் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக இரத்தவங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.சிந்துஜா அறிவித்துள்ளார்.

இந்த அவசர நிலைமையைக் கருத்தில் எடுத்து குருதிக் கொடையாளிகள், நலன்விரும்பிகள் மற்றும் அபிமானிகள் உடனடியாக இரத்தம் வழங்கி, அநியாய உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புக்களைத் தவிர்க்க உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகைகளுக்கு மட்டுமன்றி எல்லா வகையான இரத்தமும் மிக அவசர - அவசியமாகத் தேவைப்படு வதால் இரத்தம் வழங்க விரும்புபவர்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கு சமுகமளித்து இரத்தத்தை வழங்கி உதவுமாறு வங்கிப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ஒ)

# பயன்தரும் மரங்களை வெட்டுவதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும்

## சங்கானைப் பிரதேச செயலர் வலியுறுத்து

மூளாய், ஜூலை 20

வலிகாமம் மேற்குப் பகுதியில் பயன்தரும் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் என்று மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து பொதுமக்களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. எனினும் பொது மக்கள் சிலர் இந்த நடைமுறையைப் பின்பற்றத் தவறிவிடுகின்றனர். இவ்விடயம் தற்போது பிரதேசசெயலரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

பயன்தரும் மரங்களை வெட்டுகின்ற விடயத்தில் எதிர்காலத்தில் கண்டிப்பான நடைமுறை பின்பற்றப் படும் என்றும் மீறு பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் -

இவ்விடயத்தைக் கண்காணிப் பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துவார்கள் என்றும் பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார். (50-99)


### வாழ்த்துகின்றோம்



ஆசிரியப் பணியில் 32 வருடங்கள் சிறப்பாகச் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள எமது பாடசாலை ஆசிரியர்

உயர்திரு

**கனகசபை பற்குணநாதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் நீண்ட சுகபலத்துடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


# காற்றுடன் கூடிய மழை தொடரும்

கொழும்பு, ஜூலை 20

நாட்டின் பல பாகங்களில் பெய்துவரும் பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை இன்னும் இரண்டு நாள்கள் வரை நீடிக்கலாம் என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அத்துடன் கடற்கரைத் தாழ்நிலப் பிர தேசங்களில் கடும் காற்று வீசி வருவதால் மக்களை அவதா னத்துடன் இருக்குமாறும் திணைக்களம் எச்சரித்துள்ளது. (சி)


### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**அமரர் தங்கராசா வரதலட்சுமி**

21.06.2010 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் தங்கராசா வரதலட்சுமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.07.2010) புதன்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குலனை வீதி,
நவிண்டில், கரவெட்டி. (சி-569349) குடும்பத்தினர்.



**வெற்றி இலக்கு 12 தரம் 1,2,3,4,5**

2ஆம் தவணை முன்னோடி பரீட்சை வினாத்தாள் வெளிவந்துவிட்டது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றுக் கொள்ளவும்.

**தயா அச்சகம்**
138, நாவலர் வீதி, யாழ்.

தொடர்பு :-


# கொம்பியூட்டர் காட்சியறை யாழ். நகரில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மெற்றோபொலிற்றன் கொம்பியூட்டேர்ஸ் நிறுவனத்தினர் யாழ்ப்பாணத்தில் காட்சியறை ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

யாழ். பிரதான வீதியில் திருமறைக் கலாமன்றத்துக்கு எதிரில் 91ஆம் இலக்கக் கட்டடத்தில் அமைந்துள்ள இந்தக் காட்சியறை இன்று மாலை 4 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)


### கோழிக் குஞ்சு விநியோகம்

30 நாளில் 2 kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHRAHA புறொயிலர் குஞ்சுகள் 22.07.2010 காலை 8 மணிக்கு விநியோகிக்கப்படும்.

**ராஜீவ்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
021 222 2867
0776090926



### மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

உயர்திரு சின்னத்தம்பி சித்திரவடிவேல்



அகவை அறுபதை நிறைவுசெய்து இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை மணிவிழாக் கொண்டாடும் எமது கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு சின்னத்தம்பி சித்திரவடிவேல் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்ந்து தொடர்ந்து சமூகப்பணியும், கல்விப்பணியும் ஆற்றிட வாழ்த்துகின்றேன்.

மனமகிழ்வுடன் வாழ்த்தும்
சபா குகதாசன் (குகன் மாஸ்ரர்),
ஆவரங்கால்.



### விண்ணக வாழ்வில் 31 ஆம் நாள்

மண்ணுலகில் 13 . 11 . 1984



விண்ணுலகில் 20 . 06 . 2010

**அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரி ஜெரூட்**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

*20.06.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வன் **கிறிஸ்ரி ஜெரூட்** அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக கரவை புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் திருப்பலியிலும் மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.*

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கிழக்கு. (சி-569350)

P.S.அன்ரன்
குடும்பத்தினர்.



### மரண அறிவித்தல்

*அபிமன்னன் பரமேஸ்வரன் (தயா)*



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், முஸ்லிம் கல்லூரிவீதி (பச்சைப் பள்ளிவாசலடி) யை வசிப்பிடமாகவும் கொண்ட அபிமன்னன் பரமேஸ்வரன் (தயா) நேற்று (19.07.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அபிமன்னன் மற்றும் லீலாவதி தம்பதியினரின் அன்பு மகனும், சீதாதேவியின் அன்புக் கணவரும் ஆரணியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும் நாகேஸ்வரி, செட்டி (இந்தியா), கண்ணன் (சுவிஸ்), சந்திரன் (டுபாய்), ராகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பூவிலிங்கத்தின் மருமகனும், செங்கமலத்தின் பெறாமகனும், தீபனின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முஸ்லிம் கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*0776365813*
*0776145399* (100760)

தகவல் :
சீதாதேவி (மனைவி),
லீலாவதி (தாய்)
(தம்பி தேநீர்ச்சாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உயர்கல்வி அமைச்சரின் எச்சரிக்கை

நாட்டின் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை தடை செய்யப்பட்டிருப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா அறிவித்திருக்கிறார். அதனை மீறி பகிடிவதையில் ஈடுபடுவோர் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேற்றப்படுவர் என்றும் அமைச்சர் எச்சரித்திருக்கிறார்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை பல தசாப்தங்களுக்கு முன்னர் அறிமுகமான போது அதன் நோக்கம் ஏற்புடையதாக இருந்தது. ஆனால் கால ஓட்டத்தில், காலக் கிரமத்தில் பகிடிவதை, சித்திரவதை மற்றும் வன்செயல் வடிவங்களைப் பெற்று சமூக நெறிகளை உடைத்தெறியும் அளவுக்கு மீறிவிட்டது. புதிய மாணவர்களை உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இம்சைப்படுத்தும் துட்டத்தனமாக மாறிவிட்டது. பல சந்தர்ப்பங்களில் வக்கிரத் தன்மையும் மிகுந்து காணப்பட்டது.

1988ஆம் ஆண்டிலேயே பகிடிவதையைத் தடை செய்வதற்கு சட்டம் இயற்றப்பட்டபோதிலும் பல்கலைக்கழக நிர்வாகங்கள் அதனைக் கடுமையாகக் கைக்கொள்ளவில்லை. அரசாங்கமும் கண்டும் காணாததுபோல் விட்டுக்கொடுத்திருந்தது.

ஆனால் புதிய உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா, பகிடிவதைச் சட்டத்தை முழு அளவில் செயற்படுத்தப்போவதாக அறிவித்திருக்கிறார். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது முதுமொழி. அதனால் அமைச்சரின் கண்டிப்பான, உத்தரவு குறித்து எவரும் எதிர்ப்போ அதிருப்தியோ தெரிவிக்க முடியாது.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிபெற்ற தமிழ் மாணவன் ஒருவன் பகிடிவதையினால் சில வருடங்களுக்கு முன்னர் உயிர் நீத்த சம்பவத்தை மறந்துவிட முடியாது. அதற்கு முன்னரும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் புதுமுக மாணவர்களுக்கு நடந்த இம்சைகளும் உளரீதியான பாதிப்புக்களும் பூதாகரமாக வளர்ந்ததை மறைக்க இயலாது. சிங்களப் புதுமுக மாணவி ஒருவர் பல்கலைக்கழக விடுதியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்த சம்பவமும் பகிடிவதையின் பாதக விளைவுகளில் ஒன்றே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் அந்தந்த வருடத்தின் இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்கள் முதலாம் வருட புதுமுக மாணவர்கள் மீது நடத்திய பகிடிவதைகள் பலப் பல. பல்கலைக்கழக வளாகத்துக்கு வெளியே புதுமுக மாணவர்களைத் தேடிச்சென்றும் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வருமாறு நிர்ப்பந்தித்தும் அவர்களை வதைத்த சம்பவங்களும் இலகுவில் மறந்துவிடக்கூடியவை அல்ல. அத்தகைய வரம்பு மீறிய, பலாத்காரமான, அடாவடித்தனமான பகிடிவதைகளால் மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோரும் மன உளைச்சலுக்கு ஆளாக நேர்ந்தமை பாரதூரமான பதிவுகளாகும்.

இத்தகைய பின் புலத்தில், பகிடிவதையில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது அனுதாபம் காட்டவோ மன்னித்துவிடவோ இடம்வைக்கக் கூடாது என்று உயர் கல்வி அமைச்சர் தீவிரமாக இருப்பது நியாயமானதே. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும்.

நாம் பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசித்துவிட்டோம். அதனால் மற்றவர்களைவிட கல்வியில் நெடிதானவர்கள் என்ற செருக்கும் மேதாவிலாசமும் தலைக்கேறாது தடுக் கவும் -

கிராமப் புறப் படசாலைகளில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவானோர், நகரப் புறப் பாடசாலைகளில் இருந்து தெரிவானோர்களுடன் உயர நின்றும் தாழ்வு மனப்பான்மை இன்றியும் தமது உயர் கல்விப் படிப்பை மேற்கொள்வதற்கு ஒரு நட்புறவான சூழலை ஏற்படுத்துவதுமே, பகிடிவதை முப்பது நாற்பதுகளில் தொடங்கிய போது அதன் நோக்காக இருந்தது. ஆனால் அது இப்போது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகி விட்டது!

பல்கலைக்கழக கல்வி நாட்டின் கல்வித்துறையில் பெரும் மறுமலர்ச்சியைக் கொண்டு வந்திருக்கும் சூழலில், நாட்டின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்காற்றிவரும் வேளையில் புகுமுக மாணவர் மீதான பகிடிவதை பெரும் கரும்புள்ளியாக வடிவெடுத்திருக்கிறது. அது கிள்ளி எறியப்படவேண்டிய கட்டத்திற்கு வந்திருப்பது வருத்தத்துக்கு உரியது.

இந்த நிலையில், உயர்கல்வி அமைச்சரின் கண்டிப்பான செயற்பாட்டை பெற்றோர்கள் ஏற்கவே செய்வர். மேற்குறிப்பிட்ட சட்டத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்தாவிடில், பல்கலைக்கழகங்களில் ஒழுக்கத்தைப் பேண முடியாத நிலை உருவாகிவிடும். மேலும் எமது நாட்டில் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வரும் அகௌரவமான பகிடிவதைகளால் உயர்கல்வித் துறைக்கும் நாட்டுக்கும் பெரும் அவமரியாதையைத் தேடித்தரும்.

பல்கலைக்கழகங்களில் புதிய கல்வி ஆண்டு எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பமாக உள்ள வேளையில், அமைச்சரின் அறிவுறுத்தலை இப்போது பல்கலைக் கழகங்களில் பயிலும் முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் மனதிற்கொண்டு செயற்படுவதே உகந்தது, சிறந்தது. அவர்கள் அமைச்சரின் உத்தரவுக்கு எதிராகக் கிளம்பும் சலன புத்திக்கு உட்படாமல், தாங்கள் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்த மாணவர்களாக நிலை நிறுத்த மனங்கொள்வார்களாக.

# சர்வகட்சிக் குழுவின் ஆலோசனைகள்

கொழும்பு, ஜூலை20

சர்வகட்சிக் குழுவின் ஆலோசனைகளை அக்குழுவில் இடம்பெற்ற இரு கட்சிகளைச் சேர்ந்த ஆர்.யோகராஜன், காரியப்பர் ஆகிய இருவரும் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அதில் அடங்கியுள்ள ஆலோசனைகள் வருமாறு:-

**✱ செனட் சபை**

ஒவ்வொரு மாகாணமும் 7 செனட்டர்களைக் கொண்டிருக்கும். மொத்தம் 63 செனட்டர்களை இது உள்ளடக்கும். இதற்கு புறம்பாக 10 செனட்டர்கள் (வடக்கு-கிழக்கு வெளியே வசிக்கும் முஸ்லிம்களுக்கு ஒன்றும் ஏனையவை இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும்) பிரதிநிதித்துவப்படாத சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஜனாதிபதி 02 பிரதிநிதிகளை நியமிப்பார்.

**✱ அரசின் தன்மை:-**

இலங்கை குடியரசு பிரிக்கப்படாத, இறைமையுள்ள நாட்டுக்குள் ஒற்றை ஆட்சி அரசாக இருக்கும். அரச அதிகாரம் மத்திய மற்றும் மாகாணங்களுக்கு இடையில் பிரிக்கப்படும்.

**✱ அரசின் வடிவம்:-**

இலங்கை நாடாளுமன்ற அரசின் வடிவத்தைப் பின்பற்ற வேண்டும்.

**✱ பௌத்த மதத்தின் அந்தஸ்து:-**

இலங்கை அரசு பௌத்த மதத்துக்கு உயர்ந்த இடத்தைக் கொடுக்கும், பௌத்த சாசனத்தைப் பேணிப் பாதுகாப்பது அரசின் கடமையாக இருக்கும். அதேவேளை, 1978ஆம் ஆண்டின் அரசமைப்பின் 10 மற்றும் 14ஆம் சரத்தின்படி ஏனைய மதங்களும் பாதுகாக்கப்படும்.

**✱ உத்தியோகபூர்வ மொழிகளும், தேசிய மொழிகளும்:-**

தேசிய மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்கும்.

**✱ ஆங்கில மொழிப் பாவனை:-**

ஆங்கிலத்தை உத்தியோக நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியும்.

**✱ அரசமைப்பின் உயர்தன்மை:-**

அரசமைப்பின் உயர்தன்மை அரசமைப்பு நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். இந்த அரசமைப்பு நீதிமன்றம் தற்போதுள்ள நீதிமன்றக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும். ஆனால், இது உயர் நீதிமன்றத்திலிருந்து பிரிந்தே இருக்கும்.

**✱ தேர்தல் முறைமை:-**

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையைக் கொண்ட தேர்தல் தொகுதி அடிப்படையிலான தொகுதிவாரி முறைமையையும், கட்சி அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையையும் கொண்டதான இரண்டு வாக்குச் சீட்டுகளுடனான ஒரு கலப்புத் தேர்தல் முறை அமுல்செய்யப்பட வேண்டும்

**✱ அதிகாரப்பகிர்வு:-**

மக்களின் அதிகாரம் அரசின் மூன்று மட்டங்களிலேயே பகிரப்பட்டிருக்கும். மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி அரசு என்பவையே அந்த மட்டங்கள். ஒவ்வொரு மட்டமும் அரசமைப்பின் ஊடாகத் தனித் தனியான அதிகாரப் பட்டியலைக் கொண்டிருக்கும்.

**✱ தேசிய மற்றும் மாகாண உயர் நியமனச்சபை:-**

அரச சேவைகளினதும், நீதித்துறையினதும் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்தச் சபை செயற்படும். இச்சபை பிரதமர், சபாநாயகர் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அறுவரையும் கொண்டிருக்கும். சபாநாயகர் இதன் தலைவராக இருப்பார். முதலமைச்சர், சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், மாகாண சபையில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஆளுநரால் நியமிக்கப்படும் ஆறு பேரை உள்ளடக்கி மாகாண உயர் நியமன சபை ஒன்றும் உருவாக்கப்படும். இந்தச் சபை முடியுமானவரை மாகாணத்தின் எல்லா இனங்களையும் கொண்டிருக்கும்.

**✱ சீர்திருத்த படிமுறைகள்:-**

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பின் உறுப்புரை 82(5) மற்றும் 83 ஆகியன நிலைப்படுத்தப்பட்டிருக்கும்.

அரசமைப்பைத் திருத்துவதற்கான அல்லது வேறு அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான சட்டமூலம் சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்களிப்பு மற்றும் அமர்வுகளால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

## 3 பாடசாலைகளில் வகுப்பறைத் தொகுதிகளை "சிலிங்கோ" அமைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 20

சிலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தினரின் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கு வகுப்பறைகள் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

மட்டுவில் சந்திபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், ஏழாலை வித்தியாலயம், வேலணை மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே வகுப்பறைகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.இரங்கநாதன் இக்கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளார். (50-207)

# வன்னியில் இருந்து திரும்பிய குடும்பங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வீடுகள்

## நடவடிக்கைகளை ஆரம்பித்தது யாழ்.செயலகம்

வன்னியிலிருந்து திரும்பி யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடனான வீடுகள் அமைப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்படி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொண்டுவருகிறது.

இதன் முதற்கட்டமாக மீள்குடியமர்ந்த குடும்பங்களின் தேவைப்பகுப்பாய்வும் தரவு திரட்டும் நடவடிக்கையும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யுத்தத்தின்போது காயமுற்றவர்கள் மற்றும் அங்கவீனமுற்றவர்களுக்கு இச்செயற்றிட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இதனால் இவ்வாறானவர்கள் தொடர்பான விவரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

சொந்தமாக காணிவசதி உள்ளவர்கள் மட்டுமே இவ்வீடமைப்புத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதால் இதுவரை காணி உரிமம் இல்லாதவர்களுக்கு காணி உரிமத்தைப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (50-99)

## மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு விரைவில் அரை நிரந்தர வீடுகள்

மூளாய், ஜூலை 20

வன்னியிலிருந்து திரும்பி மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் மீள்குடியமர்ந்த பல குடும்பங்கள் வீட்டு வசதிகள் எதுவுமின்றி வாழ்ந்து வருகின்றன. இவ்வாறான குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காகவே மேற்படி உதவித்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் அமைக்கப்பட விருக்கின்றது.

இவ்வீடுகளை அமைப்பதற்கு காணி உரிமம் மிக அவசியமாகக் கருதப்படமாட்டாது. எனினும் காணியின் உரிமையாளரின் எழுத்து மூலமான சம்மதம் இருந்தால் போதுமானது என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (50-99)

## சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், ஜூலை 20

உள்ளூராட்சி வாரத்தையொட்டி கைதடி ஊற்றல் இந்து மயானம் சிரமதானம் மூலம் கடந்த வியாழக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

சனசமூக நிலைய பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (ஓ-131)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 05 | : 21.07.2010 |
| | : புதன்கிழமை |
| திதி | : ஏகாதசி |
| | பி.இ. 04.51வரை |
| நட்சத்திரம் | : அனுஷம் |
| | பி.இ 04.38 வரை |
| சுபநேரம் | : 04.31 -06.01 |
| ராகுகாலம் | : 12.01 - 01.31 |

## குருமாராக பெண்கள் நியமனம்? வத்திக்கான் மேலிடம் கடும் எதிர்ப்பு

லண்டன், ஜூலை 20

பெண்களை றோமன் கத்தோலிக்க குருமாராக திருநிலைப்படுத்துவதானது தேவவிசுவாசத்துக்கெதிரான ஒரு குற்றமாகும் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

வத்திக்கான் கடந்த வியாழக்கிழமை விடுத்த புதிய ஒழுக்காற்று விதிகள் தொடர்பான அறிவித்தலில் இக்கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களையும் குருமாராக திருநிலைப்படுத்தும் முயற்சிகள் தொடர்பான விடயத்தை இனிமேல் வத்திக்கானிலுள்ள கோட்பாடுகள் கண்காணிப்பகமே கையாளும் என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களை குருக்கள்மாராக திருநிலைப்படுத்த முனைவதானது குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது போன்ற மிகப்பாரதூரமான குற்றங்களாக புதிய விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டுக்கான விதிகளின்படி பெண்களை திருநிலைப்படுத்த முனைபவர்களும், அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள பெண்களும் தன்னிச்சையாகவே சமயத்திலிருந்து விலகியவர்களாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களை குருமாராக திருநிலைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவிலுள்ள நிறுவனம் வத்திக்கானின் இந்தத் தீர்மானத்தை நிராகரித்துள்ளது. இந்தத் தீர்மானமானது மத்திய கால சிந்தனையைக் கொண்டது. அச்சத்தினாலான செயற்பாடு என்று அது வர்ணித்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட விதிகளாவன எமது எண்ணிக்கை அதிகரிப்பைக் கண்டு மேற்கொள்ளப்பட்டவை. தேவாலயத்தில் பெண்களின் சமத்துவத்துக்கான அழைப்பினை அழித்துவிடுவதற்கான முயற்சி இது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

**கங்காதர ஆச்சாரி சுவாமிகள்**

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

*இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசிகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.*

**தொ.பே.: 077 6337702 / 077 6335621**

**கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:**
**காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.**

**பீப்பில்ஸ் இன்**
இல. 112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் சோடாக் கம்பனி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(100666)


# மரண அறிவித்தல்கள்

## *சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்*
### (ரத்தினம் / மணியம்)



(ஓய்வுபெற்ற சிமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்)

கொல்லங்கலட்டி, சுந்துவம்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் வெள்ளிக்கிழமை (16.07.2010) அன்று காலமானார்.

அன்னார் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதியின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தவபாக்கியநாதன், காலஞ்சென்ற தயாபரநாதன் மற்றும் தனஞ்செயநாதன், சிவரூபி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜீந்தி சுரேஸ் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலைக்ஷன், தர்ஷிகா, வனிதன் ஆகியோரின் பேரனும், நல்லம்மா, நடராசா, ஏரம்பமூர்த்தி (இந்தியா), செல்லப்பா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (21.07.2010) புதன் கிழமை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*காளுவன்,*
*விக்ரோரியாக் கல்லூரி அருகில்,*
*சுழிபுரம்.*

(100761)

தகவல் :
**குடும்பத்தினர்**

## *இளையதம்பி சரஸ்வதிஅம்மா (சரசு)*

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளையதம்பி சரஸ்வதிஅம்மா நேற்று (19.07.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இளையதம்பியின் (சாயுடை, மாவிட்டபுரம்), அன்பு மனைவியும் விசியலட்சுமி (கனடா), தேவராசா (தேவா), கிரிஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வசண்முகதாசன் (கனடா), மீனலோஜினி (மீனா - நீர்வேலி), சிவா (அளவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிசான் (கனடா), நவீன் (கனடா), நாகரூபன், கோகுலரூபன், துசானி, கபிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யோகேஸ்வரி (மாரிசன் கூடல்), புவனேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மாசுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராச வீதி,*
*நீர்வேலி.*
*0774131409*

(101209)

தகவல்:
**தேவா** (மகன்)

# பல்கலைக்கழக விரிவுரையாளர் 27 இல் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கடந்த 2008 ஜனவரி மாதத்தில் இணக்கம் காணப்பட்டபடி சம்பள உயர்வை வழங்குமாறு கோரி பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர் சங்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளது.

இந்தப் போராட்டத்தை ஆதரித்து யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விரிவுரையாளர் சங்கத்தினரும் அன்றைய தினம் அடையாள வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ -1)

# புதிய அரசமைப்பு குறித்து விவாதம், கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தேசிய இனப்பிரச்சினையும் புதிய தொரு அரசியலமைப்பு எனும் தலைப்பில் விவாதமும் கலந்துரையாடலும் திரு மறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நாளை புதன் கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 7 மணி வரை நடை பெறும்.

கலாநிதி செல்வி திருச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணியும் அரசியலமைப்பு கற்கை நிறுவன பணிப்பாளருமான கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ண, இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் ச.தியாகலிங்கம், யாழ்.பல் கலைக் கழக சட்டத்துறை உதவி விரிவுரையாளர் கு.குருபரன் ஆகியோர் உரையாற்றுவர். (ஒ- 323)

# ரோந்தில் ஈடுபட்ட சிப்பாய் விபத்தில் உயிரிழப்பு

இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் படைச் சிப்பாய் ஒருவர் வாகனத்தினால் மோதுண்டு பலியானார்.

நேற்றுமுன்தினம் இரவு முகாமாலையில் ஏ-9 வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

பளை ஆறாவது காலாட் படையணியில் பணியாற்றிய இரத்தினபுரியைச் சேர்ந்த சுகசிங்க ஆராய்ச்சிகே சரித லக்சிக என்பவரே மரணமானவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

மரண விசாரணை நடத்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளையைப் பணித்த அதே சமயம் கொழும்பு சட்ட வைத்திய அதி காரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் ஏ.எம்.எம். ரியால் உத்தரவிட்டார். (ஒ-207)


## தேவை

காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ள ஆண்/பெண் தேவை.
* கணக்காளர் * பில் கிளார்க்
* வான் சாரதி-AD

*(மாநகர எல்லைக்குட்பட்டவர்கள்)*

தொடர்பு: **பேப்பர் ஹவுஸ்**
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 077 8393973

## காணி விற்பனைக்கு

காரைநகர் தெற்கு றோட், நாச்சிமார் கோயிலுக்கு அருகில் 17 பரப்பு நெற் காணியும் காரைநகர் மேற்கு றோட் முருகன் கோயிலுக்கு அருகில் 17 பரப்பும் 11 1/2 குழி நிலப்பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **க.அன்னலட்சுமி**
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
(101186)

## காணிகள் விற்பனைக்கு

I. கொய்யாத்தோட்டம்.
கடற்கரை வீதியில் உள்ள வீடு.
(Bar, Restaurant, Tourist Resident)
ஆகப் பயன்படுத்தக்கூடியது 2பரப்பு.
II. சுவாமியார் வீதி.
பாஷையூர் அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்பு : 0772492268**

## தவறிவிட்டது

சண்டிலிப்பாய் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா யோகேஸ்வரன் என்பவரது தேசிய அ.அட்டை [842751748 V], தொழில் அ.அட்டை [யாழ். போதனா வைத்தியசாலை] என்பன 04.07.2010 அன்று சண்டிலிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே மானிப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

T.P. 0776365983

## தேவை

யாழ். நகரில் ஸ்ரூடியோ ஒன்றுக்கு Photoshop, Video Editing தெரிந்த அனுபவமுள்ளவர்கள் இருபாலரும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

309, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். T.P. 0777162339


# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 - 02 - 1929



மறைவு
09 - 07 - 2003

## அமரர் பொன்னையா தங்கராசா

திதி: ஏகாதசி

ஏழு ஆண்டுகள் என்ன?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும் நிலைத்திருப்பீர்.

நி.மு.: மணியம் லேன், தெல்லிப்பழை,
த.மு. அண்ணாமலை வீதி, சுதுமலை. (100751)

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



*எனது நண்பர்களாகிய*
**மார்க்கண்டு நவரத்தினராசா**
*(நவம் வயறிங்)*
**மார்க்கண்டு தருமராசா**
*(தறுமு வயறிங்)*
*ஆகியோரின் அன்புத் தாயார்*

## மார்க்கண்டு இராசம்மா

*அவர்களின் மறைவுகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

நண்பன்
**பா.புஷ்பராஜா** *(ராசு)*

*91, பத்திரகாளி கோயிலடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(101198)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## பாலையா சிவபாக்கியம் (சித்திரா)

பிறப்பு 12-12-1960
இறப்பு 16-07-2005



திதி: தசமி
(20-07-2010)

*அன்பின் பிறப்பிடமாய்*
*அறிவின் இருப்பிடமாய்*
*பண்பின் பொக்கிசமாய்*
*இடர்தீர்க்கும் மருந்தாய்*
*எம் இதயத்தில் வாழ்ந்த எம்*
*தாயே - உங்கள்*
*மூன்று செல்வங்களையும்*
*விட்டுச்சென்று*
*ஐந்து ஆண்டுகள் ஆனதோ*
*தீரவில்லை எம் சோகம்*
*ஆறவில்லை எம் மனங்கள்*
*ஆறுதலாய் யாரும்இல்லை*
*அரவணைக்க வாங்கம்மா*
*வழிந்தோடும் விழிநீரை*
*துடைக்க உங்கள் கரங்கள்*
*எம்மைத் தழுவ வாங்கம்மா*
*உங்கள் நினைவோடும், நீங்கள்*
*சொன்ன சொல்லோடும்.*
*நாம் சாகும் வரை*
*வாழ்ந்திடுவோம்*
*எம் ஆருயிர்த் தாயே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம் வல்ல விநாயகப்*
*பெருமானைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(100752)

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபா 1 லட்சமாக இருந்த வீடமைப்புக் கடன் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பு

## பொது முகாமையாளர் மாசிலாமணி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தினால் யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு 100 பேருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீட்டுக் கடனாக வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்டப் பொதுமுகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

இதுவரை வீடமைப்புக் கடனாக ஒரு லட்சம் ரூபாவே வழங்கப்பட்டு வந்ததாகவும், தற்போது அந்தத் தொகை 2லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இத்தகைய வீட்டுக்கடன் வழங்குவதில் அரச ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. கடன் பெற விரும்புவோர் சொந்தக்காணி உடையவர்களாக இருக்க வேண்டும்.

அத்துடன் நிரந்தர அரச ஊழியர்கள் இருவரினது பிணையையும் பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேலும் புதிதாக வீடுகளை அமைப்பவர்களுக்கே இந்த வீடமைப்புக் கடன் வழங்கப்படவுள்ளது - என்றார்.

(எ-23)

## கைத்தொழில் மறுமலர்ச்சித் திட்டத்தில் தொழிற்சாலைகள் மீள இயக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கைத்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு கைத்தொழில் மறுமலர்ச்சி என்னும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. பல்வேறு காரணங்களால் மூடப்பட்டுள்ள, மந்த கதியில் இயங்குகின்ற கைத்தொழிற்சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மீள இயக்கப்படவுள்ளன. இத்தகவலை கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கைத்தொழிற்சாலைகள் செயலிழந்துள்ளமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்குரிய வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இது குறித்த தகவல்களையும் விண்ணப்பங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மாவட்ட அலுவலகங்களில் ஜூலை 20ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஒகஸ்ட் 5ஆம் திகதி வரை அலுவலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்- என்றார். (எ-310-311-312)

## கருகு சிறிதானாலும் காரம் பெரிது சிறுவனால் அகப்பட்ட திருடர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இராணுவ சீருடையுடன் இரவுவேளை திருடமுயன்றவர்கள் சிறுவன் ஒருவரின் சாதுரியத்தினால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

இச் சம்பவம் அண்மையில் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

மட்டுவில் பகுதியில் அண்மையில் மீளக் குடியமர்ந்த குடும்பம் ஒன்று தங்கியுள்ள வீட்டினுள் சீருடை அணிந்து கறுப்புத் துணியினால் முகத்தை மறைத்துக் கட்டியபடி ஆயுதங்களுடன் சென்ற நால்வர் தூக்கத்திலிருந்த வீட்டிலுள்ளோரை எழுப்பி அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றைப் பரிசீலித்தனர்.

அவ்வேளையில் வீட்டிலிருந்த சிறுவன் அங்கிருந்து மெதுவாக நகர்ந்து அயலில் உள்ள வீடுகளுக்குச் சென்று விடயத்தைத் தெரிவித்தான். உடனேயே அயலவர்கள் அனைவரும் உஷாரடைந்து குறித்த வீட்டினைச் சுற்றி வளைத்து நின்றனர்.

இதனை அவதானித்த திருடர்கள் தாம் கொண்டு வந்த சைக்கிளையும் கைவிட்டு தப்பியோடினர்.

இதேவேளை இச்சம்பவம் பற்றி பொலிஸாருக்கு முறைப்பாடு கொடுத்ததையடுத்து உடனடியாக அங்கு விரைந்த பொலிஸார் கைவிடப்பட்ட சைக்கிளைக் கைப்பற்றி சைக்கிளின் அடையாளங்களை வைத்து இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் சாவகச்சேரி பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (எ-207)

## பட்டதாரிகளுக்குப் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 20

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பயிற்சிப் பட்டறையொன்று வடபகுதி பட்டதாரிகளுக்காக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பயிற்சிப்பட்டறையினை மங்கல விளக்கேற்றி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பட்டதாரிகளுக்கு குறிப்பாக தொழில் வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு அவர்களது திறனாய்வு மற்றும் தொழில் முயற்சிகள் மற்றும் வாய்ப்புக்கள் குறித்து உரிய அறிவினையும் தகவல்களையும் வழங்கும் முகமாக நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் பங்கு கொண்டு பயனடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ)

## உப தபாலகம் இடமாற்றம்

நவாலி, ஜூலை 20

ஆனைக்கோட்டை நவாலி பிரதான வீதியில் இயங்கி வந்த ஆனைக்கோட்டை உபதபாலகம் கடந்த 12ஆம் திகதி முதல் சில யார் தூரத்திலிலுள்ள மானிப்பாய் பிரதான வீதியிலுள்ள கட்டடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தபாலகம் இத்துடன் 3ஆவது தடவையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (50-100)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோத மதுபாவனை மற்றும் விற்பனை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன.

இக்கருத்தரங்குகள் மதுபாவனையாளர்கள் மற்றும் விற்பனையாளர் இடையே மது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுவதாக மக்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (எ-316- 313)

## புகையிலைக் கட்டுப்பாட்டு சபை உருவாக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.மாவட்டத்தில் புகையிலை பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும் வகையில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ''மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டுச் சபை'' என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

(எ-315-317)

## மீண்டும் கிடைக்குமா ஒடியற் கூழ்?

யாழ்ப்பாணம், ஜூலை 20

பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி செய்யப்படும் ஒடியற் கூழை மீண்டும் அருந்தி மகிழ்வது எப்போது என்று எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர் ஒடியற் கூழ் பிரியர்கள்.




இந்த ஒடியற் கூழைப் பெற்று சுடச்சுடச் சுவைக்க இந்தக்கூழ் பிரியர்கள் மீண்டும் எப்போது இந்தக் கூழ் தயாரித்து விநியோகிக்கப்படும் என்று மிக எதிர்பார்ப்புடன் காத்து நிற்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

அதேசமயம் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாவை மேற்கொண்டு வரும் பயணிகளும் புலம்பெயர் நாடுகளில் இருந்து வருபவர்களும் ஒருமுறையாவது ஒடியற் கூழைச் சுடச்சுட வாங்கிப் பருக வேண்டும் என்று அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிகிறது.

பனம்பொருள் விற்பனை நிலையங்களுக்குப் பொருள்களை கொள்வனவு செய்யச் செல்லும் பயனாளிகள் பலரும் ஒடியற் கூழை எங்கே பெற்றுக்கொள்ள முடியும் என்று கேட்டுச் செல்வதாகவும் கூறப்படுகின்றது. (எ-224)

## 'துளிர்கள்' ஆண்டு நிறைவு விழா



யாழ்ப்பாணம், ஜூலை 20

துளிர்கள் நிறுவனத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவும், 'மின்மினி' சமூக சீர்திருத்த குறுந் திரைப்பட வெளியீட்டு விழாவும் இன்று செவ் வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில், சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

நிகழ்ச்சியின் முடிவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## சட்டவிரோத புகைப்பொருள் விற்பனைக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படும் சட்ட விரோத புகைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மதுவரித் திணைக்களம் தீவிரப்படுத்தி உள்ளது.

ஏ-9 வீதிப் போக்குவரத்துக்குச் சாத்தியமாக உள்ள காரணத்தினால் புகைப்பொருள்களை விற்பனை செய்யும் தென்பகுதி வர்த்தகர்கள் தங்களது வர்த்தக நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்திற்கு விரிவுபடுத்தி உள்ளனர். அவர்கள் லாபம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாக வைத்து சட்டவிரோத புகைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவது சமீபகாலமாக குடாநாட்டில் கண்டுபிடிக்கப்பட்டதனாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-314-316)



'அலையன்ஸ் பினான்ஸ்' நிறுவனத்தின் 7ஆவது கிளை நேற்று யாழ்.நகரில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், நிறுவனத்தின் தலைவர் பிரதாப்குமார் டி.சில்வா நாடா வெட்டி நிறுவனத்தைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், பணிப்பாளர் சபை உறுப்பினர் திருமதி கே.சுனாலி டி.சில்வா மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: ரட்ணம், டிலீப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திய போராட்ட வழியை அவமதித்தவர்கள் இன்று அதே வழியில் போராட்டம் நடத்துகிறார்கள்

## சேவா சங்க வருடாந்தக் கூட்டத்தில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

காந்திய போராட்டங்களை அவமதித்தவர்கள் இன்று அதே வழியில் போராட்டம் நடத்துகின்றனர். இது மீண்டும் காந்தியம் புத்துயிர்பெறும் நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு கூறினார் பழம்பெரும் காந்தியவாதியும் நாடாளுமன்ற முன்னாள் மொழி பெயர்ப்பாளருமான சோ.க.தம்பிப்பிள்ளை. அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவிலுள்ள அதன் செயலகத்தில் நடைபெற்றது. அங்கு தலைமையுரை ஆற்றிய தம்பிப்பிள்ளை மேலும் கூறியதாவது:-

எமது வளரும் சமுதாயம் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்த்து அதிக நேரத்தை அதில் வீணே கழிப்பதால், எதிர்காலச் சந்ததி எமது கலை, கலாசார விழுமியங்களை இழக்கும் நிலை உருவாகும் அபாயம் தோன்றியுள்ளது. காந்தீயத் தத்துவங்களைப் படித்து அதன்படி ஒழுகினால் எதிர்காலச் சமுதாயம் ஒரு சிறந்த பண்பான சமூகமாக மாறும்; வழி பிறக்கும்.

1948ஆம் ஆண்டு காந்தீயக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு அமரர் ஹண்டி பேரின்பநாயகம் போன்ற அந்தக்காலப் பெரியோர்கள் இணைந்து இலங்கையில் காந்தீயம் வளர உழைத்தேன். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, இரத்மலானை ஆகிய இடங்களில் காந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன. காந்தீயம் என்ற பத்திரிகை எம்மால் உருவாக்கி இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தோம். ஆனால் சூழ்நிலைகள் காரணமாக இரத்மலானை நிலையத்தைக் கைவிட நேர்ந்தது.

[illegible] தொழிற்பயிற்சி நிலையம், அனாதை இல்லம் என்பன சிறப்பாக இயங்கியதால் பல இளைஞர்களும், யுவதிகளும் இதில் சேர்ந்து பயன் பெற்றனர். சூழ்நிலைகள் காரணமாக யாவும் அழிவடைந்தன. தற்போது நாம் மீண்டும் இவற்றைப் பொறுப்பேற்றுப் புனரமைத்து வருகின்றோம். இதன் ஒரு பகுதியில் தொழிற்பயிற்சி நிலையமும் சிறுவர் இல்லமும் இயங்க ஆரம்பித்துள்ளன. சுமார் நூறு பிள்ளைகள் தற்போது அங்கு உள்ளனர். மேலும் பலர் சேரவுள்ளனர்.

காந்தீய-அகிம்சை வழியில் செயற்பட்ட தமிழினம் அன்று அவமதிக்கப்பட்டது. தற்போது அவமதித்தவர்களே அகிம்சை வழியில் சத்தியாக் கிரகம், உண்ணா விரதம் ஆகிய போராட்டங்களை நடத்துகின்றனர். இது எமக்கு காந்தீயம் மீண்டும் புத்துயிர்பெறும் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளது என்றார். மேலும் கிளிநொச்சி முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம், காந்தி நிலையப் பொருளாளர் வி.க.தங்கவேல் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவராக ஆ.வடிவேலுவும், செயலாளராக வி.க.தங்கவேலுவும், பொருளாளராக மா.லீலாவிநோதனும் இவர்களுடன் மேலும் பதினோரு நிர்வாகசபை உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# ஆனையிறவு உப்பளத்தை மீள் இயக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 20

இலங்கையின் பாரிய உப்பு உற்பத்தி ஸ்தாபனமான ஆனையிறவு மற்றும் குறிஞ் சாதீவு உப்பளங்களை மீள் இயங்க வைத்து உப்பு உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவின் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் பணிமனையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந்திரகுமார், பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றிய அலுவலர்கள் மற் றும் ஊழியர்கள் ஆகியோர் பங்குகொண்டனர்.

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப் பளங்களில் உப்பு உற்பத்தியை ஆரம்பிப் பது தொடர்பாக சாத்திய வள ஆய்வை உடனடியாக ஆரம்பிக்குமாறு பணிப்புரை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா, பாதுகாப்பு தரப்பினருடன் தொடர்பு கொண்டு கண்ணிவெடி அபாயமுள்ள மற் றும் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதே சங்கள் குறித்தும் தகவல்களைப் பெற் றுக்கொள்ளுமாறு அமைச்சின் செயலா ளரை கேட்டுக்கொண்டார்.

சுமார் ஆயிரத்து எழுநூறு ஏக்கர் விஸ் தீரணம் கொண்ட ஆனையிறவு உப் பளத்தில் ஆரம்பகட்ட உப்பு உற்பத்தி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் குறித்தும் சாத்திய வள ஆய்வில் கவனம் செலுத்துமாறு அமைச்சர் அறிவுறுத்தினார். குறிப்பாக முன்னாள் உப்பள அலுவ ளர்களையும் ஊழியர்களையும் உப்பளத் துக்கு நேரடியாகவே சென்று பார்வையிட்டு நிலைமைகளை அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தற்சமயம் ஆனையிற வுன் உப்பளங்களில் விளைந்துள்ள சமையல் பாவனைக்கு ஏதுவல்லாத பெருமளவு உப்பை இரசாயன மற்றும் பசளை உற்பத்திக்காக பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கினர். (சி)


லண்டனில் தரம்வாய்ந்த கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கு

- ★ Admission With in 3 Days (ஆவணங்கள் திருப்தியாக இருந்தால்)
- ★ குறைந்த கட்டணத்தில் Sponsor வசதிகள்
- ★ இருவாரங்களுக்குள் உங்கள் ஆவணங்களை V.F.F.இல் கொடுக்கக்கூடிய வாய்ப்புகள்
- ★ ஆகக்குறைந்த (O/L) கல்வித் தகைமைகளுடன்
- ★ விசா நிராகரிக்கப்படுமானால் செலுத்திய பணத்தை முழுவதும் திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம்.

Study in UK

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்....



எமது சேவைகள் முற்றிலும் இலவசம்

விசா கிடைப்பதற்கு முன்பாகவோ விசா கிடைத்த பின்போ எதுவிதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது

தொடர்புகளுக்கு:

0770871616


## மரண அறிவித்தல்

### திருமதி சாமுவேல் நவரத்தினம் பரமேஸ்வரி கதிரேசு



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பிராயில் வசித்தவருமான திருமதி சாமுவேல் நவரத்தினம் பரமேஸ்வரி கதிரேசு (16.07.2010) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி அல்பிரட் கதிரேசு-செயிட் செல்வம் கதிரேசு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சாமுவேல் நவரட்ணம் கதிரேசுவின் அன்பு மனைவியும் கிறிஸ்டியான் ஞானச்செல்வன் கதிரேசு (சுதன்-சுவிஸ்), செல்ற்ரன் தர்மச்செல்வன் கதிரேசு (ரகு-கனடா), வில்ஸ்டன் டர்சன் கதிரேசு (தம்பி-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மைலினி (சுவிஸ்), புஷ்பமலர் (கனடா), சுவேந்திரனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வியூலா, தானியா, பெஞ்சமின், ஸ்ரீசன், றூட், பெனாயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அன்னபூரணிஅம்மா, கந்தசாமி சீதாலட்சுமி, அப்பாத்துரை தர்மலிங்கம், அப்பாத்துரை பஞ்சலிங்கம், துரைராசா மகேஸ்வரி மற்றும் அப்பாத்துரை தியாகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.07.2010) புதன்கிழமை கனடா, காபரோவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகள்
தொ.பே.இல:-
0014169533639,0041789219680.

தகவல்:
அ.தியாகலிங்கம்
சகோதரன்
(தாவடி வடக்கு).


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் 2010

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

80% Off

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office, 3 Months, 3500/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~22500/=~~ 4500/= | Diploma in Web Page Designing, 3 Months, ~~22500/=~~ 4500/= |
| Diploma in Graphic Designing, 4 Months, ~~22500/=~~ 4500/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~20000/=~~ 4000/= | Diploma in Auto CAD, 3 Months, ~~22500/=~~ 4500/= |
| Diploma in Accounting Package, 3 Months, ~~22500/=~~ 4500/= | Diploma in Computer Science, 4 Months, ~~22500/=~~ 4500/= | Honors Diploma in Computer Science, 3 Months, ~~32500/=~~ 6500/= |

50% Off Advance Courses
Dip. in. Multimedia ~~10000~~ 5000/=
Dip. in. Video Editing ~~9500~~ 4750/=

Batch i - 21-07-2010 - 9Am or 3pm
Batch ii - 23-07-2010 - 9Am or 3pm
Batch iii - 25-07-2010 - 9Am or 3pm
Batch iv - 28-07-2010 - 9Am or 3pm

1 Week Courses (Monday to Friday)
Start On 26-07-2010 at 9.30 AM
1) Diploma in Hardware Engineering
2) Diploma in Video Editing
3) Diploma in Graphic Designing



Computer Training School



Soft View IT Computer Education
Under BOI IT Training Project
719, Civic centre, Vaddakachchi, Kilinochchi

கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

வட்டக்கச்சிக் பிரதேசத்தில் சிவிக்சென்ரரில் கணனிப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே இதில் வயது வேறுபாடின்றி கணனிப்பயிற்சியில் ஆர்வமுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

- DIPLOMA IN OFFICE MANAGEMENT
- DIPLOMA IN COMPUTER SCIENCE
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN MULTIMEDIA
- KIDS COURSE

விசேடமாக சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சிநெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
குறிப்பு: கற்பித்தல் அனைத்தும் தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
விண்ணப்பப் படிவம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
இடம்:- 719, சிவிக்சென்ரர், வட்டக்கச்சி, கிளிநொச்சி.
தொ.பே:- 0770503663


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தின் 31 சமுர்த்தி வங்கிகளில் இதுவரை 400 மில்லியன் ரூபா சேமிப்பு

## அதன் உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை20

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்தில் உள்ள 31 சமுர்த்தி வங்கிகளில் 400 மில்லியன் ரூபா இதுவரை சேமிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தித்திட்டத்தின் செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் திருப்திகரமானதாக இடம்பெற்று வருகின்றன.

யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஆரம்ப, முதல் நிலை, இரண்டாம் கல்வி நிலையில் உள்ள மாணவர்களுக்கான சமுர்த்தி வழங்கும் நிகழ்வும் நூல் வெளியீடும் நல்லூரில் உள்ள நடராசா பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமுர்த்தித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டிலிருந்து இன்றுவரை சமுர்த்தித் திட்டத்தின் செயற்பாடுகள் முன்னேற்றகரமானதாக இடம்பெற்றுவருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் 31 சமுர்த்தி வங்கிகள் இயங்கி வருகின்றன.

இந்த வங்கிகள் ஊடாக சமுர்த்தி முத்திரை வழங்கல், சமுர்த்தித் திட்ட கல்விப் புலமைப்பரிசில் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் எனப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட சமுர்த்தி வங்கிகளில் இதுவரை ஏறத்தாழ 400 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

இதில் 25 வீதமான நிதியே சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

சமுர்த்தி அதிகார சபையின் சுற்று நிருபத்தின்படி சமுர்த்தி வங்கியில் உள்ளவற்றில் 75 வீதமான நிதி பயனாளிகளின் வாழ்வாதாரத்திற்குப் பயன்படுத்தவேண்டும்.

இத்த விடயத்தில் மட்டும் நாம் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளோம் - என்றார்.

(50-9-14)

## சுயதொழில் கடன் காசோலைகள் வந்தன

நவாலி,ஜூலை20

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் முயற்சிக் கடனுக்கு விண்ணப்பம் செய்தவர்களின் கொடுப்பனவுக்கான காசோ லைகள் வந்து சேர்ந்துள்ளன.

பின்வரும் பெயர் முகவரியுடையவர்களை உடன் வந்து பெற்றுச் செல்லுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

இ.மோகனாம்பிகை (மாதகல் கிழக்கு), இ.சசிகலா (சுதுமலை மேற்கு), ஆர்.சைலகுமாரி (மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்).

(50-100)




## திறன் விருத்திச் செயலமர்வு

நாவற்குழி,ஜூலை20

நீதி அமைச்சின் நிதி அனுசரணையில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் திறன் விருத்திச் செயலமர்வு எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 90 பேர் பங்கேற்ற உள்ளனர்.

கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இச்செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

திறன் விருத்தியை வளர்க்கக் கூடிய வளவாளர்கள் இதில் பங்கேற்று விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள். (50-121)

# வல்லை நூற்றல் நெய்தல் ஆலையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

வடமராட்சி,ஜூலை 20

வல்லை நூற்றல் நெய்தல் ஆலையை மீண்டும் இயங்கவைக்க ஆரம்ப மூல நிதியாக ஒரு லட்சம் ரூபாவை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆலையின் புனரமைப்புக்குழுவுக்கு வழங்கியுள்ளார்.

1959ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1987ஆம் ஆண்டில் செயலிழந்து போரினால் அழிவுண்ட வல்லை நூற்றல் நெய்தல் ஆலையைப் புனரமைப்புச் செய்து மீள இயங்கவைக்க உடுப்பிட்டி நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் வல்லை நூற்றல் நெய்தல் ஆலை புனரமைப்புக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக ஆலை அமைந்துள்ள காணி துப்புரவு செய்யப்பட்டு, அதனை மீள நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலைக்கான பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்ததுடன் கூட்டத்திற்கு தலைமை வகித்த புனரமைப்புக் குழுத் தலைவர் த.சண்முகராசாவிடம் ஆரம்ப மூலநிதியாக ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை வழங்கினார்.

அத்துடன் ஆலையை மீள இயங்க வைக்கத் தேவையான உதவிகளை வழங்குவதாகவும் அமைச்சர் உறுதி அளித்தார்.

(எ-236)




கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களை கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் வைத்துக் கௌரவித்தது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி த.தவேந்திரராஜா, கொமர்ஷல் வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் எஸ்.கஜரூபன் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பதையும் முகாமையாளருடன் கௌரவம் பெற்ற மாணவர்கள் ஒன்றாக அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : கர்ணன்)

# கோப்பாய் - கைதடிப் பாலத்தின் புனரமைப்பு நிறைவுறும் நிலையில்

நாவற்குழி,ஜூலை20

கோப்பாய் - கைதடி வீதியில் பாலம் அமைக்கப்பட்டு நிறைவுபெறும் நிலையில் உள்ளது.

கடந்த வருடம் ஜனவரி 2ஆம் திகதி இப்பாதை மீளத்திறந்தபோதும் இதுவரை பாலம் அமைக்கப்படாதமை குறித்து 'உதயன்' பலமுறை சுட்டிக்காட்டியிருந்தான்.




தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் 6.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாலம் அமைக்கும் பணிகள் நிறைவுறும் கட்டத்தை நெருங்கி வருகின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் பாலத்தின் நிர்மாணப் பணியை நேரடியாக மேற்பார்வை செய்து வருகின்றார்.

கனரக இயந்திரங்களின் உதவியுடன் உள்ளூர் தொழிலாளர்கள் இணைந்து இப் பால நிர்மாணிப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். இம்மாத இறுதியளவில் இப்பாலம் பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்படலாமென உயரதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாலம் திறந்து வைக்கப்படுவதன் மூலம் வலிகாமத்திற்கும் தென்பகுதிக்குமான போக்குவரத்தில் இலகுத் தன்மை ஏற்பட உள்ளது.

பால நிர்மாண வேலைகள் நிறைவு பெற்றதும் ஆசிய அபிவிருத்தி வங்கி பொறியியலாளர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் பாலத்தைக் கையளிக்க உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (50-121)

# வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களின் விவரம் சேகரிப்பு

நவாலி,ஜூலை 20

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களின் விவரங்கள் கணனி மயப்படுத்துவதற்காக கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகத் திரட்டப்பட்டுவருகின்றன.

சம்பந்தப்பட்ட அனைத்து மக்களையும் கிராம சேவகர்களுக்கு வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏற்கனவே மாதகல் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ளவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் திருமதி அ.எழிலரசி தெரிவித்துள்ளார்.

(50-100)

# எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் வகுப்பறை, ஆய்வுகூடம் அமைப்பு

கொழும்புத்துறை,ஜூலை 20

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு கல்வித் திணைக்களத்தினால் பல கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாடசாலை அதிபர் து.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் நிலவிவந்த இட நெருக்கடியைத் தீர்க்கும் முகமாக அலுவலகமும் வகுப்பறைகளும் இணைந்த கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு நிறைவடைந்த நிலையில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை ஜீ.சீ.ஈ. சாதாரண தரம் வரையில் வகுப்புகள் நடைபெறும் இப்பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாமை பெரும் குறையாக இருந்து வந்தது.

தற்போது கல்வித் திணைக்களத்தினால் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு கடந்தவாரம் தீவக உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரனிஸ்லோஸினால் அடிக்கல் நடப்பட்டுள்ளது.

விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் அமைவதன் மூலம் எழுவைதீவு மாணவர்களின் கல்வித்தரம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

(50-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




17.01.1993

* விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு கப்பலில் இருந்து இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டமை குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகி யுள்ளதாகத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவருடன் ஆயுதங் களையும் வெடி மருந்து களையும் ஏற்றி வந்த கப்பல் ஒன்று இந்தியக் கரைக்கு அப்பால் எரிந்து கொண்டிருப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்ததாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

18.01.1993

* தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியு மான கேணல் கிட்டுவும் ஏனைய 9 போராளிகளும் தாம் பயணம் செய்த கப்பலை குண்டு வைத்துத் தகர்த்தி தம்மைத் தாமே அழித்துக் கொண்டதாகத் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு கூடிய விரைவில் தீர்வு கிட்ட வேண்டுமென தாம் புத்தகாயாவில் பிரார்த்தனை மேற்கொண்டதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

19.01.1993

* தளபதி கேணல் கிட்டுவுக்கும் அவருடன் வீரச்சாவெய்திய 9 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக குடாநாடெங்கும் மூன்று நாள் துக்க அனுஷ்டிப்பு நேற்று ஆரம்பமானதாகத் தெரிவிப்பு.

* திருகோணமலை மாவட்டம் - புல்மோட்டைப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 14 படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

20.01.1993

* தளபதி கேணல் கிட்டு மற்றும் 9 போராளிகளின் மரணத்துக்குக் காரணமான இந்திய அரசைக் கண்டித்து பிரதமர் நரசிம்மராவ் மற்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் பொது மக்களால் நேற்று குடாநாட்டின் பல பகுதிகளில் எரிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

* இராணுவத்துக்குப் போதிய ஆளணி வசதி இல்லாத காரணத்தால் முல்லைத் தீவுக் காட்டினுள் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாதுள்ளது என இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

21.01.1993

* இந்தியாவின் சதிவேலை காரணமாக உயிர் துறந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு மற்றும் 9 போராளிகளினதும் நினைவு நடுகல் நடும் வைபவத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரில் சமூகம் அளித்து அஞ்சலி செலுத்தியதாகத் தெரிவிப்பு.

* கடற்பரப்பில் இந்திய ஆதிக் கத்தை எமது கடற்புலிகள் விரைவில், நிச்சயம் தகர்த்தெறிவார்கள் என கடற்புலிகளின் விசேட தளபதி சூசை தெரிவிப்பு.

22.01.1993

* காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திலிருந்து வாகன அணிமூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு இராணுவத் தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாக யாழ். அரச அதிபர் தகவல் தெரிவிப்பு.

* குடாநாட்டுக்கான போக்குவரத்தைச் சீர்செய்யும் நோக்குடன் பூநகரிப் பாதையைத் திறப்பது குறித்து கொழும்பில் முக்கிய பேச்சுவார்த்தை களை ஐ.நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சுடன் மேற் கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

23.01.1993

* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானத் திட்டத்துடனேயே விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் கிட்டு இலங்கை நோக்கிக் கப்பலில் சென்றுகொண்டிருந்தாகத் தாம் நம்புவதாக குவாக்கர் சர்வதேச சமாதானக் குழு தெரிவிப்பு.

* யாழ். குடாநாட்டுக்கான போக்கு வரத்தைச் சீர்செய்வதற்காக பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு ஜனாதிபதி பிரேமதாஸ சம்மதம் தெரிவித்திருப் பதாக யாழ். அரச அதிபர் தெரிவிப்பு.

24.01.1993

* இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதற்கு இலங்கையில் மேலும் பல பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும் என உலக வங்கி இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்திருப்பதாகத் தெரி விப்பு.

* விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர் கிட்டு உட்பட 10 விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்களை சதி செய்து உயிரிழக்க வைத்த இந்தியாவின் செயலைக் கண்டித்து லண்டனில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டதாத் தெரிவிப்பு.

25.01.1993

* திருகோணமலை மாவட்டம் - சிற்றாறுக்கு அருகில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்று இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 11 படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

* மட்டக்களப்பில் காணாமல் போனதாகக் கருதப்படும் 4 ஆயிரத்து 368 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த டென்மார்க் மனித உரிமைகள் குழுவிடம் மட்டக்களப்பு சமாதானக் குழுவினரால் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

26.01.1993

* படையினர் மற்றும் பொது மக்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோருடன் திருமலையில் இருந்து மூதூருக்குச் சென்று கொண்டிருந்த பாதைப் படகு கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி 50 பேர் வரை உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு மரணத்தின் எதிரொலியாக நேற்று தமிழகத்தில் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றதாகவும் பல இடங்களில் இந்திய அரசுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாகவும் தெரிவிப்பு.

27.01.1993

* விடுதலைப் புலிகளின் இராணுவ முதன்மைக்கு சவால் விடுக்கும் விதத்தில் இராணுவத்துக்கு மேலும் பலரை திரட்ட விருப்பதாக இராணுவத் தரப்புத் தெரிவிப்பு.

* இலங்கை இனப்பிரச்சினையில் வடக்கு - கிழக்கு இணைப்பை இரத்துச் செய்வதா, இல்லையா என்பது தான் சமஷ்டியிலும் பார்க்க முன்னுரிமை பெற்ற விடயமாக உள்ளதென ஓய்வு பெற்றுச் செல்லும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவிப்பு.

28.01.1993

* நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் சமஷ்டி என்ற பெயரில் யோசனை ஒன்றை முன் வைத்துவிட்டு இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

* நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் யோசனை தோல்வியடைந்தாலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடியப் போவதில்லை என அமைச்சர் தொண்டமான், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிப்பு.

29.01.1993

* ஐரோப்பிய நாடுகளில் தற்போது வசித்து வரும் 60 ஆயிரம் ஈழத் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி சமர்ப்பித்த விண்ணப்பங்கள் அந்நாடுகளால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* பிரேமதாஸ அரசு முன்னணி அமைச்சர்களில் ஒருவராகச் செயற்படும் ரணில் விக்கிரமசிங்க தரம் இறக்கப் படலாம் அல்லது அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படக் கூடும் என கொழும் பில் கதை அடிபடுவதாகத் தெரிவிப்பு.

30.01.1993

* விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒஸி பிரிவுத் தலைவரான ஒஸி அபே குணசேகர விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாகத் தெரிவிப்பு.

* வடபகுதிக்கு எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் மேலும் சில பொருள்கள் மீதான தடையைத் தளர்த்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

31.01.1993

* இலங்கையில் இன்னமும் பாரதூரமான அளவு மனித உரிமைமீறல்கள் இடம் பெறுவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சு தெரிவிப்பு.

* கிளாலிக் கடலில் நேற்று முன்தினம் மண்ணெண்ணெய் ஏற்றி வந்த படகு மீது இலங்கைப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

# நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்களை அரசு நிறுத்தியுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 20

''நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானிய உதவிகளை அரசு இடைநிறுத்தியுள்ளது.'' - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசின் சில நடவடிக்கைகளைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தல் மற்றும் ஆர்ப்பாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், மொரட்டுவை ரயில்வே நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். 'அத்துடன், நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியன புறக்கணிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(சி)

# புலிகளின் ஊடுருவலைத் தடுக்குக!

## ஆஸியிடம் அமெ. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

அமெரிக்காவின் எப்.பி.ஐ. அமைப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், விடுதலைப்புலிகளை ஊடுருவதற்கு அனுமதிக்க வேண்டாம் என கோரப்பட்டுள்ளது என ஆஸ்திரேலிய நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உலகின் மிகவும் தீவிரமான இயக்கம். உலகெங்கிலும் தமது வலையமைப்பைக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, தற்கொலைப் படையினர் என்ற பிரிவை உருவாக்கி அதனைக் கிரமமாக கையாண்டனர்.

அத்துடன், மிகவும் நேர்த்தியான முறையில் பெண்களை போருக்கு பயன்படுத்திய ஒரே ஒரு இயக்கம் இதுவே.

இரண்டு உலகத்தலைவர்களை தமது தற்கொலைப் படையினரைப் பயன்படுத்தி கொலை செய்தமை உலகின் வேறெந்த அமைப்பினராலும் மேற்கொள்ள முடியாத செயல். இப்படி எப்.பி.ஐ. அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எப்.பி.ஐயின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவலின்படி, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்ந்தும் இயங்கிக்கொண்டே இருக்கின்றது.

குறிப்பாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தொடர்ந்தும் செயல்பட்டுவருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் தீவிரவாதப் போக்கு இயக்கங்களோ அல்லது இனப்பிரச்சினையைத் தூண்டும் அமைப்புகளோ இல்லை என ஆஸ்திரேலிய அரசு திட்டவட்டமாக அறிவித்துவருகிறது.

எனினும், குறிப்பாக ஆஸ்திரேலியாவின் கென்பரா நகரில் வசிக்கின்ற தமிழர்களால், விடுதலைப்புலிகள் மீள எழுவதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன என சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக அகதி அந்தஸ்த்துக் கோரி வரும் இலங்கைத் தமிழர்கள் பலர், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர் என சில தரப்பில் குற்றம் சுமத்தப்படுகிறது.

எவ்வாறாயினும், தமிழர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் இல்லை என்றும் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். (சி)

# தமிழ் அகதிகளுக்கான தொண்டு நிறுவனத்தின் பதிவு கனடா அரசாங்கத்தால் ரத்தானது

கொழும்பு, ஜூலை 20

கனடாவில் இயங்கி வந்த 'ஒட்டாவா' என்ற தமிழ் அகதிகளுக்கான தொண்டு சமூக நிறுவனத்தின் பதிவுகளை, அந்நாட்டு வருமான வரித்துறையினர் ரத்துச் செய்துள்ளனர் என கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனேடிய வருமானவரி சட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

நிதிகளைக் கையாள்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பில் குறித்த நிறுவனம் முறையாகச் செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டே அதன் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அமைப்பால் சுமார் 7 லட்சத்து 13 ஆயிரம் அமெரிக்க டொலர்கள், பெயர் குறிப்பிடப்படாத அமைப்பு ஒன்றுக்கு நிதியாக வழங்கப்பட்டுள்ளது எனவும்,

இந்த நிதி தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லது அதற்குச் சார்பான அமைப்பு ஒன்றுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் எனவும் கனேடிய வருமானவரித் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

(சி)

சீட்டிழுப்பு இல. 2267
திகதி 18.07.2010
மஹஜன சம்பத
அலுவலக முடிவுகள்
வெற்றி எழுத்து L வெற்றி எண்கள் 9 0 3 5 7 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L | 9 | 0 | 3 | 5 | 7 | 0 | ரூபா. | 14,145,275/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 9 | 0 | 3 | 5 | 7 | 0 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 0 | 3 | 5 | 7 | 0 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 3 | 5 | 7 | 0 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 70 |
| 4ம் பரிசுகள் | | | | | 5 | 7 | 0 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 689 |
| 5ம் பரிசுகள் | | | | | | 7 | 0 | ரூபா. | 100/= | பரிசுகள் | 7011 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. | 20/= | பரிசுகள் | 68997 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 9 | 0 | 3 | 5 | 7 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 9 | 0 | 3 | 5 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 73 |
| 9ம் பரிசுகள் | | 9 | 0 | 3 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 704 |
| 10ம் பரிசுகள் | | 9 | 0 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 6866 |
| 11ம் பரிசுகள் | L | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 27622 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 14,252,156.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,379,180.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631
முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கேன்

## கல்முனை மாநகரசபை முதல்வர் அறிவிப்பு

அம்பாறை, ஜூலை 20

கல்முனை மாநகரசபையில் ஊழல், மோசடிகளில் ஈடுபடுவோர் எவராக இருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மசூர் மௌலானா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகரசபையின் மாதாந்த சபை அமர்வு கடந்த வியாழக்கிழமை மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே முதல்வர் மசூர் மௌலானா இந்த எச்சரிக்கையை விடுத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

''நமது மாநகர சபையில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளன என மேலெழுந்த வாரியாகக் கூறுவதில் அர்த்தமில்லை. ஆனால் அவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும். அப்படியானால் சம்பந்தப்பட்டோர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நான் பின்வாங்க மாட்டேன்.

இந்த மாநகர சபையில் ஊழல், மோசடிகள், களவுகள் ஆகியவற்றில் எவர் ஈடுபட்டாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன். எமது மாநகரசபை, பிரதேச மக்களுக்கு நல்லசேவை ஆற்ற வேண்டும் என்ற ஓர் உயர்ந்த நோக்கத்துடனேயே நான் இந்தத் தள்ளாத வயதிலும் முதல்வராகப் பணியாற்றுகின்றேன்.

''எமது மாநகரசபையைக் கட்டியெழுப்புவ தற்கான பாரிய முயற்சிகளை நான் மேற்கொண்டு வருகின்றேன். நெல்சிப் திட்டத்தின் மூலம் பலகோடி ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக அதன் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றேன்.

நான் அதி விரைவில் கிழக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தவுள்ளேன். இந்தச்சந்திப்புக்கு மாநகர சபை உறுப்பினர்கள் சிலரையும் அழைத்துச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளேன்.

எனது மாநகரசபையில் இடம்பெற்றுள்ள சில குறைபாடுகள் தொடர்பாக கிழக்கு மாகாணசபை கவலையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளது. குறிப்பாக இந்த வருட ஆரம்பத்திலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டிய உப குழுக்கள் இன்னும் தெரிவுசெய்யப்படவில்லை. இது குறித்து என்னிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

ஆகையினால் இந்தக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விசேட கூட்டமொன்றை எதிர்வரும் 27ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளேன்.

பொதுவாக எமது சபையைத் திறம்பட இயக்குவதற்கு உறுப்பினர்களும், அதிகாரிகளும், ஊழியர்களும் இதயசுத்தியுடன் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும்.

நாம் அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே மக்களுக்குத் தேவையான வேலைத் திட்டங்களை சிறப்பாக முன்னெடுக்க முடியும்.

இந்தச் சபை அமர்வுகளில் உறுப்பினர்கள் பொறுப்புடன் கருத்துகளை வெளியிட வேண்டும். ஒருவரால் பல தடவைகளில் உரையாற்ற முடியும். எத்தனை, எத்தனை கேள்விகளையும் எழுப்பமுடியும், அவற்றை முன்வைப்பதில் சில விதிமுறைகள் உள்ளன. அவற்றை உறுப்பினர்கள் பின்பற்றி நடக்க முன்வரவேண்டும். நினைத்தவாறு எழுந்து உரையாற்றுவதற்கும், கேள்விகளை எழுப்புவதற்கும் நான் அனுமதிக்கமாட்டேன்.

சில விடயங்கள் மற்றும் கேள்விகள் தொடர்பாக முன்னறிவிப்புச் செய்யப்பட்டு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவையல்லாத திடீர் கேள்விகளுக்கு எவராலும் பதிலளிக்க முடியாது. எமது உறுப்பினர்கள் அனைவரையும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி சரிசமமாகவே வழிநடத்துவேன்.'' (எ)




# புல்மோட்டையில் பஸ் நிலையம் நிறுவப் பொதுமக்கள் கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 20

புல்மோட்டையில் பஸ் நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

தற்போது புல்மோட்டை - கொழும்பு, - புல்மோட்டை -அநுராதபுரம், புல்மோட்டை - கெபிடிகொள்ளாவ, புல்மோட்டை - திருகோணமலை, திருகோணமலை - புல்மோட்டையூடாக பதவிசிரிபுரம் ஆகிய பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறான பஸ் சேவைகள் ஒரு நாளைக்கு இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் இடம் பெறுகின்றன.

இவ்வாறு சேவையில் ஈடுபடும் பஸ்கள் வீதியோரங்களில் அங்கும் இங்குமாய் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

அத்தோடு புல்மோட்டைக்கு சுற்றுலாப் பயணிகள் வரும் ஏராளமான பஸ்களும் அவ்வாறே நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் வேறு வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக உள்ளது.

பஸ் நிலையம் ஒன்று இல்லாமையால் பயணிகள் பஸ்களுக்காக வீதியோரங்களில் நீண்டநேரம் கால் கடுக்க நிற்க வேண்டியவர்களாகின்றனர். அத்தோடு மழை காலத்தில் சொல்லொண்ணா அவதிக்குள்ளாகின்றனர்.

இரவுநேர பஸ் சேவைகளும் தற்போது இடம்பெறுகின்றன. இதனால் இருட்டில் அச்சத்தோடு நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் நிலவுகிறது.

எனவே, பயணிகள் முகம் கொடுக்கும் அசௌகரியத்தை நீக்கும் பொருட்டு புல்மோட்டை பிரதான வீதியருகே பஸ் நிலையம் ஒன்றை அமைத்துத் தரும்படி கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு புல்மோட்டை மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (எ)

# திருகோணமலை மசூதி வீதியில் மின் குமிழ்கள் ஒளிர்வதில்லை

## பொதுமக்கள் விசனம்

திருகோணமலை, ஜூலை 20

சோனகவாடிப் பிரதேச மசூதி வீதியிலும், தக்கியா வீதியிலும் சுமார் 10 மின் கம்பங்களின் குமிழ்கள் பல மாதங்களாக ஒளிர்வதில்லை. இதனால், இராக் காலத்தில் பாதசாரிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

சோனகவாடி நகர்ப்புறத்தில் தான் பெரிய பள்ளிவாசல் அமைந்துள்ளது. இப்பிரதேச மக்களின் இராக்காலத் தொழுகைக்கு, வீதி மின் விளக்குகள் உதவியாக இருந்தன. மின் குமிழ்கள் ஒளிராமையால் பல மாதங்களாக இம்மக்களும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மின்சார சபைக்கு அறிவித்தும் இது வரை பழுதுற்ற மின் குமிழ்களுக்குப் பதிலாக புதிய குமிழ்கள் பொருத்தப்படவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக மேற்படி நீண்டகால குறைப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பகுதிமக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். (எ)

# பதுளை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் டெங்கு குறித்து எம்.பிக்களிடையே வாக்குவாதம்

## தோட்ட மக்கள் குறித்து பேச்சே இல்லை

பதுளை, ஜூலை 20

''டெங்குநோயால் பதுளை வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் இறந்தமை உலக அதிசயமல்ல. அது ஒரு பிரச்சினையுமல்ல. நாடளாவிய ரீதியில் வேகமாகப் பரவிவரும் டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது'' - என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பதுளை மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ முன்வைத்த விடயமொன்றிற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் இப்படிக் கூறியதையடுத்து இருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன. கூட்டத்தில் அமைதியின்மையும் தோன் றியது.

இங்கு ஹரின் எம்.பி. கூறியவை வருமாறு:-

''பதுளையில் டெங்குநோய் மிகவேகமாகப் பரவி வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த அரசு தயங்குகின்றது.

முக்கியமாக குழந்தை நல மருத்துவர் ஒருவரும் டெங்கு நோய்க்குப் பலியாகியுள்ளார். டெங்கு நுளம்பு பரவுவதை உடன் தடுத்து, நோயைக்கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்''- இப்படி ஹரின் கூறினார்.

இதையடுத்தே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா''மருத்துவர் இறந்தமை அதிசயமல்ல'' என்று கூறி ஆத்திரத்துடன் வாக்குவாதப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி டெங்கு நோயை முதன்மைப்படுத்தி அரசியல் லாபம் தேடுகின்றது என்றும் அவர் கூறினார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின்பெர்னாண்டோ பதிலளிக்கையில்,

''ஐக்கிய தேசியக் கட்சிக்கு டெங்கு நோயை முதன்மைப்படுத்தி அரசியல் நடத்தவேண்டிய அவசியமில்லை. டெங்கு நோய் ஒழிப்பு விடயத்தில் ஏன் அரசியலைப் புகுத்துகின்றீர்கள். இச்செயலானது டெங்கு ஒழிப்பில் அரசின் இயலாமையை வெளிப்படுத்துகின்றது.

கட்சி பார்த்து டெங்கு நுளம்பு கடிப்பதில்லை. எனவே, இதனை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குழந்தைநல மருத்துவர் ஒருவர் டெங்கு நோயால் இறந்தமை அமைச்சருக்கு உலக அதிசயமாக இருக்க முடியாது.

ஆனால், எமக்கும், பதுளை மாவட்ட மக்களுக்கும் அது பெரும் இழப்பு - இப்படி ஹரின் தெரிவித்தார்.

இதனையடுத்து இருவருக்குமிடையே கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

இவ்விவாதங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, ஊவா முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, பிரதி அமைச்சர்களான டிலான் பெரேரா, சுசந்த புஞ்சி நிலமே, ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோரும் செவிமடுத்திருந்தனர்.

### தோட்டத் தொழிலாளரைக் கவனிப்பாரில்லை?

இதேவேளை, பதுளை மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்த அனைத்து விடயங்களும், கிராம மக்களின் மேம்பாடுகளை முன்னிலைப்படுத்தியே அமைந்திருந்தன.

பெருந்தோட்ட மக்களின் மேம்பாடு தொடர்பில் எந்தவொரு விடயமும் உள்ளடக்கப்படவில்லை. கூட்டத்தில் விவாதிக்கப்படவும் இல்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன், பதுளை மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டங்களின்போது முன்னாள் பிரதி அமைச்சர்களான வடிவேல் சுரேஷ், எம். சச்சிதானந்தன் ஆகியோர் பதுளை மாவட்ட தமிழ் மக்களின் பிரதி நிதிகளாக இருந்து பல பிரேரணைகளை முன்வைத்து உரையாற்றினர்.

பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர்.

ஆனால், தற்போது பதுளையில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் இல்லை. இதனால் பதுளை பெருந்தோட்ட மக்கள் அரசியல் அநாதைகளாவிவிட்டனர். இது துரதிஷ்டமே -என பல்வேறு தரப்பினரும் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். (எ)




# மாணவியை அடித்த ஆசிரியர் சரீரப் பிணையில் விடுதலை

ரத்தோட்டை, பிட்டகந்த, பாடசாலை ஒன்றில் ஐந்தாம் ஆண்டில் கல்வி பயின்ற மாணவியொருவரை பிரம்பால் அடித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஆசிரியை ஒருவரை மாத்தளை நீதிவான் திருமதி சத்துரிக்கா டி. சில்வா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

மாத்தளை, களுதாவளை பிரதேசவாசியான எனும் ஆசிரியையே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அடிபட்ட 10 வயதுச் சிறுமியான எஸ்.கிருஷ்ணமணி மாத்தளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பவில்லை எனப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இதையடுத்து நீதிவான் சரீரப்பிணை அனுமதியை வழங்கினார். மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

# மலையக இளைஞர் - யுவதிகளுக்கு சிற்றூழியர் நியமனம் வழங்கவேண்டும்

## மத்திய மாகாணசபை உறுப்பினர் உதயகுமார் கோரிக்கை

நுவரெலியா, ஜூலை 20

மத்திய மாகாணசபையின் பொறுப்பிலுள்ள அமைச்சுகளிலும், அரச நிறுவனங்களிலும் காணப்படுகின்ற சிற்றூழியர் வெற்றிடங்களுக்குத் தோட்டப் பகுதி இளைஞர் - யுவதிகள் நியமிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித்தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான எம். உதயகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்திலுள்ள தோட்டப்பகுதிகளில் இளைஞர் - யுவதிகள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மத்திய மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். மாகாண அமைச்சுகளின் பொறுப்பிலுள்ள நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது பெருந்தோட்ட இளைஞர் - யுவதிகள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக மத்திய மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் கூட பெருந்தோட்டப்பகுதி இளைஞர் - யுவதி கள் சிற்றூழியர்களாக இணைத்துக் கொள்ளப்படுவதில்லை.

மாகாணக்கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வித் திணைக்களங்கள், பாடசாலைகளிலும் சிற்றூழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இங்கும் அதே நிலைதான்.

இவ்விடயம் குறித்து நான் மத்திய மாகாண முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

இதனை தொடர்ந்து மாகாண அமைச்சுகளின் பொறுப்பிலுள்ள காரியாலயங்களில் கடமையாற்றும் வகையில் எதிர்காலத்தில் பெருந்தோட்டப்பகுதி இளைஞர் - யுவதிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என முதலமைச்சர் என்னிடம் தெரிவித்தார்- இப்படி உதயகுமார் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



தடை, தாமதங்களை முறியடித்து வெற்றி காணும் நாள். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். பிரியமான சிலர் கேட்ட பொருட்களை இல்லை என்று சொல்லாமல் வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்கள் பிறந்த வீட்டில் இருந்து உதவிகளைப் பெறலாம். வியாபாரிகளுக்கு கடன் நிலுவைகள் வசூலாகும்.

### இடபம்




உங்கள் சொல் கேட்காமல் நடந்த ஒருவர் இப்போது எதையும் கேட்டு செய்ய முற்படுவர். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். புதிய பொறுப்புகளால் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். செலவுகளைக் குறைத்து சேமிப்பதில் நாட்டம் செல்லும். பல நாள் இழுபறியாக இருந்த வேலை ஒன்று இன்று முடிவுக்கு வரும்.

### மிதுனம்



எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனம் அவசியம். வர்த்தகர்கள் புதிய தொழில் ஒப்பந்தங்கள் போட நேரிடலாம். எந்தக் காரியத்தையும் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து செயற்படுத்த வேண்டும். உல்லாசமான பேச்சுக்களால் சில விடயங்களில் வம்பில் மாட்டிக் கொள்ளலாம்.

### கடகம்



கடின முயற்சிக்குப் பின்னர் காரியங்களில் வெற்றி கிட்டும். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைக்கலாம். தொழில் சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். தொழில் ரீதியான வேலை ஒன்றுக்காக சிலர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பிள்ளைகள் நலனில் கவனம் அவசியம்.

### சிங்கம்



சிறிய விடயங்களுக்காக பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைக்கலாம். திடீர் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கடனுதவி பெறலாம். திட்டமிட்ட பணிகளில் மாற்றங்கள் செய்வீர்கள். மற்றவர்களை கேலி பேசி அதில் சந்தோஷம் காண்பீர்கள்.

### கன்னி



தண்டச் செலவுகளைத் தவிர்க்க சிக்கனம் அவசியம். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். சில பொருள்களை கடனுக்கு வாங்கும் சூழ்நிலை உருவாகலாம் அல்லது கடன் வாங்கலாம்.

### துலாம்



முக்கியமான காரியம் ஒன்றை தடங்கலின்றி நிறைவேற்றிக் கொள்வீர்கள். அலைச்சல்கள் இருந்தாலும் ஆதாயம் உண்டு. வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். வீண் வம்பு விவகாரங்களில் இருந்து விடுதலை பெறுவீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். மாமன், மைத்துனர் அனுசரணை உண்டு.

### விருச்சிகம்



தெய்வ அனுகூலத்தால் சில காரியங்கள் நடந்ததாக பெருமை கொள்வீர்கள். பெண்கள் குடும்பப் பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். உடல் உபாதைகளால் சிறு மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவிகள் செய்வீர்கள். உறவினர்களுக்காக செலவிடலாம்.

### தனுசு



மற்றவர்களின் பொல்லாப்புகளில் இருந்து விடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்ல வேண்டும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலை உருவாகும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அடகு வைத்த பொருள்களை மீட்பீர்கள்.

### மகரம்



பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். கூட்டுத் தொழில் புரிவோர் கணக்கு வழக்குகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குழந்தைகள் தொடர்பான நல்ல செய்திகளைக் கேட்கலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள்.

### கும்பம்



சச்சரவுகளைத் தவிர்க்க மற்றவர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைப்பது கடினம். வியக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கலாம். நாளை நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று இன்றே நடக்கலாம். மன அமைதி பாதிக்கலாம்.

### மீனம்



வேண்டா வெறுப்பாக சில காரியங்களைச் செய்வீர்கள். நோய் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். கணவன், மனைவி இடையே சிறு சச்சரவுகள் ஏற்படலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். மனக்குழப்பம் அதிகரிக்கும்.



"புகைப்படக்கலைஞர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி."




பிரியங்கா
டிஜிற்றல் கலர் லாப்
பருத்தித்துறை வீதி. நெல்லியடி. 021 5 670 210

வடக்கு கிழக்கில் முதன் முறையாக
NORITSU QSS-37HD (High Definition) 640 DPI, எனும் இயந்திரத்தை
அறிமுகப்படுத்தியவர்கள் பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்பினரே!

எம்மிடம் 3R-தொடக்கம் 12X36 வரையான அளவில்
புகைப்படங்களை பிரதியாக்கம் செய்துகொள்ளவும், பாஸ்போட்,
NIC, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனைத்து அளவிலான
புகைப்படங்களையும் உடன் பெற்று கொள்ளவும்
உட்புற வெளிப்புற படப்பிடிப்பு, வீடியோ எடிற்றிங்,
போட்டோ டிசைனிங் & ஸ்கானிங்
Cool&Hot லெமனேற்றிங், அல்பம்மேக்கிங்,
டியூறோபிறேம் ஆகிய சேவைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்...



பருத்தித்துறை வீதி, நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசத் தெரிந்தால் பேசுங்கள்

எந்த வார்த்தையைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் யோசித்து அந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். சில சமயங்களில் பேசாமல் இருப்பதும் நல்லதுதான். ஏனென்றால் நாம் எந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறோம், எந்த இடத்தில் பயன்படுத்துகிறோம். இந்த வார்த்தைக்கு எப்படி விபரீதமாக ஓர் அர்த்தம் வரும் என்று கொஞ்சம் கவலைப்பட வேண்டும்.

சொற்பொழிவில்தான் வார்த்தைகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிலோ அல்லது நண்பர்களிடமோ பேசும்பொழுது எந்த வார்த்தைகளை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

நீங்கள் எந்த வார்த்தையைப் பயன்படுத்திகிறீர்களோ அதை வைத்துத்தான் உங்களுடைய தகுதியை மற்றவர்கள் முடிவு செய்வார்கள். நீங்கள் எப்படிப்பட்ட ஆள், உங்களுடைய பண்பாடு என்ன? என்ன வகையான ஒரு குண இயல்பு இருக்கிறது என்று எல்லாவற்றையுமே சொல்லை வைத்துதான் எடை போடுவார்கள்.

காளிதாசர் குமார சம்பவத்தில் ஒரு வார்த்தை சொல்கிறார். ஒரு மனிதனை எடை போடுவதற்கு ஏழு சொற்கள் போதுமானது என்றார். ஒரு மனிதனைப் பேசவிட்டு ஏழு சொற்களைக் கவனிக்க வேண்டும். கெட்டிக்காரன், படித்தவன், மோசமானவன், நம்பக் கூடியவன் என்று எல்லாவற்றையுமே ஏழே வார்த்தையில் கண்டுபிடிக்கலாம் என்று காளிதாசர் குமார சம்பவத்தில் சொல்கிறார். யோசித்துப் பாருங்கள். யாரிடம் பேசுவதாக இருந்தாலும் அந்த வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று யோசித்துப் பேச வேண்டும்.



எந்த வார்த்தையைச் சொல்வதாக இருந்தாலும் அமங்கலமான வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். உடனே சில பேர் கேட்பார்கள். நெருப்பு என்றால் சுட்டு விடுமா? அப்படியில்லை.நெருப்புக்குச் சில சக்தி இருக்கிறது. சொல்லுக்கு சில ஆற்றல் இருக்கிறது. நல்லபடியாக மங்களகரமான வார்த்தைகளைப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும்.

அபிராமி அந்தாதியில் அபிராமிப்பட்டர், சிவனையும் அம்பிகையையும் சொல்கிறார், ''சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவர்'' என்றார். சொல் மாதிரி, பொருள் மாதிரி சிவனும் அம்பிகையும் என்று சொல்கிறார் என்றால் அது எவ்வளவு உயர்வாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஒரு சொல்லினுடைய முக்கியத்துவம் தெரிந்து, அந்த அருமையான சொல்லை, எப்படிப்பட்ட சொல்லைப் பயன்படுத்த வேண்டுமோ அப்படி அதைப் பயன்படுத்த வேண்டும்.

திருவள்ளுவர் சொல்கிறார்.

*''சொல்லுக சொல்லை அச் சொல்லைப் பிறிதொரு சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து''*

ஒரு சொல் சொல்லிவிட்டால், அந்தச் சொல்லை எடுத்துவிட்டு இன்னொரு சொல்லை யாரும் வைக்க முடியாது. பாரதி பாடுகிறார், குறிக்கோள் இல்லாமல் இருக்கிறான் என்று திட்டுகிறார். ''தேடிச் சோறு நிதம் தின்று'' என்றார். தமிழில் எத்தனை வார்த்தை இருக்கிறது?' தின்று' என்று சொல்லலாமா? 'உண்டு' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கலாமே! உண்டு என்றால் இலக்கணத்தில் நேர் நேர் தேமா- தின்று என்றாலும் நேர் நேர் தேமா. இலக்கணத்தில் எந்தக் குறையும் வராது. பாரதி தின்று என்ற வார்த்தையைப் போட்டாரே ஒழிய உண்டு என்று போடவில்லை.ஏன் போடவில்லை. உண்ணுவது வேறு. தின்னுவது வேறு. மனிதன் உண்கிறான். விலங்கு தின்னுகிறது. நம்ம வீட்டிற்கு ஒரு சாமியார் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். '' அடிகள் இங்கே எழுந்து அருளினீர்கள். அமுது செய்து செல்லலாமே'' என்று சொன்னால் அது நல்ல தமிழ். செந்தமிழ். ஆனால் அது சாமியாருக்குப் புரிய வேண்டும். புரியவில்லையென்றால் அமுது செய்து, அதாவது சமைத்து வைத்துவிட்டுப் போ என்று சொல்கிறான் என்று நினைத்து சாபம் விட்டு விடுவார். அவருக்குப் புரியும் படியாகச் சொல்ல வேண்டும்.

''சுவாமி வந்திருக்கிறீர்கள். உணவு உண்டு விட்டுச் செல்லலாமே' என்று சொல்லலாம். அதைவிட்டுவிட்டு, ''சாமி வந்தவருக்கு, தின்னுவிட்டுப் போகலாமே' என்றால் என்ன அர்த்தமாகும்.மாட்டுத் தீவனம் தயார் தின்னலாம் என்று பொருள் வருகிறது. உண்ணுவது வேறு, தின்னுவது வேறு. வேறுபாடு இருக்கிறது. எனவே எந்த வார்த்தை ஓர் அர்த்தத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்து கொண்டு அந்த வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் விபரீதமாகப் போய்விடும்.

இதைப் புரிந்து கொண்டால் இந்த நாள் ஓர் இனிய நாள். *(நன்றி: சுகி.சிவம்)*

# ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன் தம்பி இரண்டு பேர் இருந்தார்கள்.அவர்களுடைய அப்பா அவர்களுக்காக விட்டுப் போன சொத்துக்கள், ஒரு மரம், ஒரு பசு மாடு, ஒரு போர்வை அவ்வளவு தான். இந்த மூன்றையும் அவர்கள் இரண்டு பேரும் ஆளுக்கு பாதியாக பிரிக்க வேண்டும். எப்படிப் பிரிப்பது. சரி பாதியாக வெட்டி ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்ள முடியுமா? அண்ணன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலை ஆட்டிக் கொண்டே போறவன். தம்பி கொஞ்சம் புத்திசாலி.. இருந்தாலும் அதை தப்பாக உபயோகிக்கக் கூடியவன். அந்த தம்பி அண்ணனிடம் சொன்னான். இந்த சொத்தை நாங்களே பிரிக்கலாம். ஊர் பஞ்சாயத்து வைக்க வேண்டாம் என்று. சரி தம்பி நீயே பங்குபோடு என்றான் அண்ணன்.

அண்ணா நீங்கள்தான் வயசில் மூத்தவர். அதனால் இந்த மூன்று விஷயங்களிலும் உங்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அது தான் நியாயம் என்றான் தம்பி. முதலில் மரம் இதில் அடிப்பாகம் வலுவானது அதனால் மரத்தின் பாதிக்கு கீழ் உள்ள வேர் உட்பட அனைத்தும் உங்களுக்கு. மேலுள்ள வெறும் கிளையும் இலையும் எனக்கு. அடுத்ததாக மாடு அதின் தலைப்பகுதி உங்களுக்கு பின்பக்கம் எனக்கு. அடுத்து போர்வை. அதை பகல் முழுவதும் நீங்கள் வைத்திருங்கள் இரவு முழுவதும் நான் வைத்திருக்கிறேன் என்றான் தம்பி.

விவரம் தெரியாமல் அண்ணனும் சரி என்று ஒப்புக் கொண்டான்.

அப்புறம் என்னாச்சு தெரியுமா? அந்த மரத்துக்கு உரம் போட்டு அண்ணன் தண்ணீர் ஊற்றினான். தம்பி அதிலுள்ள பழங்களைப் பறித்தான்.

மாட்டுக்கு தீனி வைத்து புல்லு போட்டு தண்ணீர் வைக்க. தம்பி பால் கறந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்தான்.

அண்ணன் பகல் முழுவதும் சும்மா போர்வையை வைத்துக் கொள்ள இரவில் தம்பி போர்வையைப் போர்த்திக் கொண்டான். இப்படியே நடந்து கொண்டிருந்தது.

இதைப் பக்கத்து வீட்டுக்காரர் ஒரு நாள் கவனித்து நடப்பது நியாயம் இல்லை என அறிந்து கொண்டார்.

உடனே அண்ணன்காரனை இரகசியமாக அழைத்து சில போதனைகள் பண்ணினார்.

அதன் பின் அண்ணன் மரத்துக்கு உரம் போடுவதில் இருந்து தண்ணீர் ஊற்றுவதையும் நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான்.

கோடாரியை எடுத்து மரத்தை வெட்ட ஆரம்பித்தான் அண்ணன். தம்பி பதறிப்போய் ஏன் இப்படி பண்ணுறீர்கள் என்றான். என் பங்கு நான் எதுவேணும் என்றாலும் செய்வேன். உன் பக்கத்தையா நான் வெட்டுகிறேன் என்றான்.

மாட்டுக்குத் தீனி போட்டு தண்ணி வைப்பதையும் நிறுத்தினான். தம்பியால் பால் கறந்து தேநீர் குடிக்க முடியவில்லை தவித்துப் போய்விட்டான்.

அந்தப் போர்வையையும் பகல் முழுதும் வைத்திருந்த அண்ணன்காரன் அதைத் தண்ணீரில் நனைத்து இரவு தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்க்க முடியாது போனது.


அதன் பின்பு சமசரமாகப் பேசி நியாயமாக நடக்க ஆரம்பித்தான் தம்பி.

ஒற்றுமையாக வாழ்வதற்கு ஒரு ஒழுங்கு முறை வேணும் அல்லவா. இது இதிலிருந்து புரிகிறது இல்லையா?

(நன்றி: தென்கச்சி கோ.சுவாமிநாதன்)



# மனம் போல் வாழ்வு



நமது வாழ்க்கையின் போக்கை நிர்ணயிப்பது எது? எண்ணங்கள்; நமது எண்ணங்கள். வாழ்க்கையை நிர்ணயிப்பது சென்ற ஜென்மங்களின் விதி என்று சொல்லாது எண்ணங்கள் என்று ஒரு சமயவாதி சொல்வதா என்று யாரும் ஆச்சரியப்பட வேண்டாம். ஏன் என்றால் விதி என்பதே நமது முந்தைய ஜென்மத்தில் உருவான எண்ணங்களின் ஆற்றல்தான்.

நல்ல வலுவான எண்ணங்களை உருவாக்க உருவாக்க செயல் உருவாகின்றது. வாழ்க்கையை அந்தச் செயல்கள் உருவாக்குகின்றன. எனவே எண்ணங்களை ஒழுங்குபடுத்துவது மிக மிக அவசியம்.

ஓர் இடத்தில் வீடு கட்டுகிறோம் என்றால் அங்கு வீடு கட்ட வேண்டும் என்கிற எண்ணத்தை முதலில் உருவாக்குகிறோம். எப்படி எப்படி வீடு இருக்க வேண்டும் என்கிற கற்பனை - நினைப்பு - அதற்கேற்பவே வீடு உருவாகிறது.

ஹிட்லர் தன்னை உலகத்தின் பெருந்தலைவனாகப் பலமுறை கற்பனை செய்து கொண்டான். ஒரு கால கட்டத்தில் உலகம் அவன் ஆணைக்கு அடங்கியும் இருந்தது. எனவே நல்லெண்ணம் உடையவர்கள் அதனை வலிமைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவது அவசியம்.

பிரம்ம நிலை எய்தும் ஞானியும் தான் பிரம்மம் என்று கேள்விப்பட்டு - படித்து - சிந்தித்து - தான் பிரம்மம் என்று எண்ணி - தீர்மானித்து - இறுதியில் தான் தான் பிரம்மம் என்பதை உணர்ந்து பிரம்மம் ஆகிறான். 'அஹம் பிரம்மாஸ்மி' என்கிற வேத வாக்கியம் 'நானே பிரம்மம்' என்ற எண்ணத் தோற்றத்தின் வெளிப்பாடே.

''நீ எதுவாக உன்னை எண்ணுகிறாயோ அதுவாகவே ஆகிறாய்'' என்பது உபநிடதவாக்கியம் 'தத்துவமஸி என்பதும் இதன் வெளிப்பாடே. மரணத் தறுவாயில் தான் வளர்த்த மானைப் பற்றிய கவலையுடன் இறந்த முனிவர் அடுத்த பிறவியில் மானாகப் பிறந்தார் என்று கூட ஒரு கதை உண்டு.

சீதை அக்கினிப் பிரவேசம் செய்ய நேர்ந்தது. இராமாயணத்தில் ஒரு துயரமான சம்பவம். ஆனால் அது விளக்கும் ஓர் உண்மை அதிர்ச்சியானது.

நமது சொற்கள் எவ்வளவு வலிவான விளைவுகளைத் தருகின்றன என்பதற்கு அது ஒன்று சான்று.

'நெருப்பில் விழுவேன்' என்ற எண்ணம் அழுத்தமான எண்ணம் - காலம் கடந்து பலித்து விட்டது. எந்த லட்சுமணனைக் குறித்து நெருப்பில் விழுவேன் என்றாளோ, அதே லட்சுமணனை அழைத்து 'இளையவா இடுதி தீ' என்றனள். இன்னொருவர் ஒழுக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டு நெருப்பில் விழ நினைத்த எண்ணம் பலித்து அவள் ஒழுக்கத்தை நிலை நாட்ட நெருப்பில் விழ வேண்டியது ஆயிற்று. வார்த்தைகள் வலுவானவை. அவை செயல்படாது சாக விரும்புவதில்லை. எனவே எண்ணத்தின் - சொற்களின் வலிமையை உணர்வது அவசியம். வேதம் ஒலிகளால் வாழ்கிறது; எண்ணங்களால் வாழ்கிறது. உயர்ந்த எண்ணங்களைச் சிறந்த ஒலிகளால் வெளிப்படுத்துவதே வேதத்தின் ஜீவிதத்திற்கான காரணம். எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்' என்கிற தமிழ் மறையும் 'உள்ளத் தனையது உயர்வு' என்கிற திருக்குறட் தீர்ப்பும் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்கிற வள்ளுவ விண்ணப்பமும் நம் வாழ்வை மாற்றியமைக்கட்டும்.

*(நன்றி: சுகி.சிவம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு 02

## பகுதி - I

* 1-20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின்படி,
1) மூலதன மீட்பொதுக்கம் செய்யப்பட வேண்டும்.
2) பங்குவட்டத்தின் முக்கியத்துவம் குறைந்துள்ளது.
3) பங்குவட்டம் ஒரு வருமான ஒதுக்கமாக மாற்றப்பட்டுள்ளது.
4) எதுவும் கூறப்படவில்லை.
5) மேற்கூறிய எவையுமல்ல.

* 2-4 வரையான வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடை அளிக்குக.

வரையறுத்த அனில் கம்பனியானது பொது ஒதுக்கத்தைப் பாவித்து 10,000 சாதாரண பங்குகளை ரூபா 12 இற்கு உபகார வழங்கலாக மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து அத்தினத்தில் காணப்பட்ட பங்கு ஒன்றின் சந்தைவிலையாகிய ரூபா 30 ரூபாவில் 40,000 சாதாரண பங்குகளை உரிமை வழங்கலாகச் செய்தது.

02. மேற்படி கொடுக்கல் வாங்கல் காரணமாகக் காசு மீதியானது,
1) ரூபா 120,000 ஆல் அதிகரிக்கும். 5) மாற்றமடையாது.
2) ரூபா 1,200,000 ஆல் அதிகரிக்கும்.
3) ரூபா 350,000 ஆல் அதிகரிக்கும்.
4) ரூபா 250,000 ஆல் அதிகரிக்கும்.

03. மேற்படி கொடுக்கல்வாங்கல் காரணமாக பங்குவட்டம்,
1) ரூபா 800,000 ஆல் அதிகரிக்கும். 5) எழமாட்டாது.
2) ரூபா 400,000 ஆல் அதிகரிக்கும்.
3) ரூபா 350,000 ஆல் அதிகரிக்கும்.
4) ரூபா 250,000 ஆல் அதிகரிக்கும்.

04. மேற்படி கொடுக்கல்வாங்கல் காரணமாகக் கூறப்பட்ட மூலதனம்,
1) ரூபா 130,000 ஆல் அதிகரிக்கும். 5) மாற்றமடையாது.
2) ரூபா 1,320,000 ஆல் அதிகரிக்கும்.
3) ரூபா 340,000 ஆல் அதிகரிக்கும்.
4) ரூபா 250,000 ஆல் அதிகரிக்கும்.

05. நீண்டகாலத் திரவத்தன்மை சாதகம்,
1) பொறுப்புக்கள், சொத்துக்கள்.
2) சொத்துக்கள், பொறுப்புக்கள்.
3) சொத்துக்கள், பொறுப்புக்கள், கூறப்பட்ட மூலதனம்.
4) பொறுப்புக்கள், கூறப்பட்ட மூலதனம், சொத்துக்கள்.
5) கூறப்பட்ட மூலதனம், சொத்துக்கள்.

06. ஒரு கம்பனியின் நடப்பு விகிதம் 1.5 : 1 ஆக இருக்கும்போது, ரூபா 120,000 வங்கி மீதியாகவும் உள்ளது. ரூபா 100,000 தை கம்பனி இறுதி இலாபமாக முன்மொழிந்தது. இவ் இலாபத்தை வங்கி மீதியைப் பயன்படுத்திச் செலுத்துவதாயின் நடப்பு விகிதம்,
1) அதிகரிக்கும். 2) குறைவடையும்.
3) மாற்றமடையாது.
4) தரப்பட்ட தகவல்கள் போதாமையால் எதுவும் கூறமுடியாது.
5) மேற்கூறிய எதுவுமல்ல.

07. இவ்வருடத்திற்கான தேறிய இலாபம் ரூபா 264,000. கடன்கொடுத்தோர் அதிகரிப்பு ரூபா 20,000. கையிருப்புக் குறைவு ரூபா 12,000. கடன்பட்டோர் அதிகரிப்பு ரூபா 24,000. நேரில் முறையில் தொழிற்படும் செயற்பாட்டுத் தேறிய காசுப் பாய்ச்சல்,
1) ரூபா 204,000. 2) ரூபா 224,000.
3) ரூபா 248,000. 4) ரூபா 272,000.
5) ரூபா 280,000.

* 8ஆம், 9ஆம் வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.
- 200 அலகு ரூபா 8 படி ஆரம்ப இருப்பு 1-1-2009
- கொள்வனவு 4.1.2010 - 300 அலகு ரூபா 10 படி
- விநியோகம் 8.1.2010 - 200 அலகு
- சந்தை விலை 8.1.2010 - அலகு ரூபா 12 படி

08. 8.1.2010 இல் பொருட்கள் முதல் வந்தது முதல் வெளியே (FIFO) முறையில் விநியோகிக்கப்பட்டால் விநியோக விலை,
1) ரூபா 2,200 2) ரூபா 3,100 3) ரூபா 3,400
4) ரூபா 3,500 5) ரூபா 6,800

09. 8.1.2010 இல் பொருட்கள் கடைசியாக வந்தது முதல் வெளியே (LIFO) முறையில் விநியோகிக்கப்பட்டால் விநியோக விலை,
1) ரூபா 3,100 2) ரூபா 3,150 3) ரூபா 3,400
4) ரூபா 3,500 5) ரூபா 4,600

10. தொழிற்சாலை துப்புரவாக்கும் தூள் எண்ணெய்,
1) நேர்ச் செலவு. 2) நேரில் செலவு.
3) நேர் மூலப்பொருள். 4) நேரில் மூலப்பொருள்.
5) நேர்க் கிரயம்.

* 11ஆம், 12ஆம் வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.

ஆதவன் தொழிற்சாலைக்கு அனுமதிக்கப்பட்ட நியம நேரம் 8 மணிகள், எடுத்த நேரம் 6 மணிகள். மணித்தியால விகிதம் ரூபா 400.

11. கல்சித் திட்டத்தின்படி மொத்தக் கூலி,
1) ரூபா 3,600. 2) ரூபா 3,200. 3) ரூபா 2,800.
4) ரூபா 2,400. 5) ரூபா 4,000.

12. கல்சி வெயார் திட்டத்தின்படி மொத்தக்கூலி,
1) ரூபா 2,600 2) ரூபா 26,400
3) ரூபா 27,000 4) ரூபா 2,800 5) ரூபா 3,000

13. உறிஞ்சுதல் விகிதங்களில் யதார்த்தமான விஞ்ஞான முறையாக அமைவது,
1) நேர்ப் பொருட்கிரய வீத முறை. 2) நேர்க்கூலிக்கிரய வீத முறை.
3) முதற்கிரய வீத முறை.
4) இயந்திரமணித்தியால விகித முறை. 5) மேற்கூறிய எவையுமல்ல.


14. சேவைத் திணைக்களம்,
1) இயந்திரப் பகுதி. 2) பொருத்தும் பகுதி.
3) பராமரிப்புப் பகுதி. 4) முடிக்கும் பகுதி.
5) மைபூசும் பகுதி.

15. எல்லைப் பங்களிப்புச் சமனாக இருப்பது,
1) விற்பனை - நிலையான கிரயம் - இலாபம்.
2) இலாபம் - மாறும் கிரயம்.
3) நிலையான கிரயம் - நட்டம்.
4) விற்பனை - இலாபம். 5) நேர்க்கிரயம் - நிர்வாக மேந்தலை.

16. நிலையான கிரயம் ரூபா 40,000. பங்களிப்பு விற்பனை விகிதம் 40%. இலாப நட்டமற்ற புள்ளி,
1) ரூபா 40,000. 2) ரூபா 30,000.
3) ரூபா 50,000. 4) ரூபா 100,000.
5) ரூபா 55,000.

* 17ஆம், 18ஆம் வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.

இலாப வளையி




17. D குறிப்பது,
1) விற்பனை. 2) உற்பத்தி.
3) இலாப நட்டமற்ற புள்ளி.
4) எல்லைப் பங்களிப்பு.
5) எல்லைப் பாதுகாப்பு.

18. E,F குறிப்பது,
1) விற்பனை அலகு.
2) நிலையான கிரயம். 3) மொத்தக் கிரயம்.
4) விற்பனைப் பெறுமதி. 5) இலாபம் / நட்டம்.

19. முகாமைக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்கும் இடையிலான ஒற்றுமைகளில் ஒன்று,
1) புரிந்துகொள்வது இலகு.
2) ஒரே கணக்கீட்டுப் புத்தகம். 3) ஒரே கணக்காளர்.
4) தேவையான தகவல்களை வழங்குவது. 5) புரிந்துணர்வு.

20. கழிவு செய்யப்பட முறை,
1) திரும்பச் செலுத்தும் காலம்.
2) கணக்கீட்டு வருவாய் விகிதம்.
3) சராசரி திரும்பச் செலுத்தும் காலம்.
4) தேறிய இற்றைப் பெறுமதி. 5) மேற்கூறிய எவையுமல்ல.

* 21-30 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

21. இரகசிய ஒதுக்கம்.

..........................................................................................

22. கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தலின் முக்கியத்துவங்கள் 3 தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

23. சாதாரண பங்குதாரரின் உரிமைகள் இரண்டைக் குறிப்படுக.

..........................................................................................

..........................................................................................

24. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய நடைமுறைப் பொறுப்பை வரையறுக்குக.

..........................................................................................

..........................................................................................

25. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 09 இற்கமைய காசை வரையறுக்குக.

..........................................................................................

..........................................................................................

26. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10 இற்கமைய கணக்கீட்டு முன்மதிப்பீடுகள் மீள ஆராயப்படுவதற்கான நிலைமைகள் இரண்டு தருக.

..........................................................................................

..........................................................................................

27. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இற்கமைய கொண்டுசெல்லும் பெறுமதியை வரையறுக்குக.

..........................................................................................

..........................................................................................

28. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 3 இன்படி பொறுப்பு, சொத்தை வரையறுக்குக.

..........................................................................................

..........................................................................................

29. நிதிக் கணக்கீட்டிற்கும், கிரயக் கணக்கீட்டிற்குமான வேறுபாடுகள் மூன்று தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

30. வைத்திய நிறுவனத்தின் பின்வரும் ஒவ்வொரு கிரயத்திற்கும் உதாரணம் தருக.
1. நேர்ப்பொருள் ..........................................................
2. மேந்தலைகள் ..........................................................

(வளரும்)

ஆசிரியர்: திரு.D.Sam , DMI, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீடு 01 — பகுதி - II

*(நேற்றைய தொடர்ச்சி)*

03. அ. ஒரு கிலோகிராம் பொருளை ரூபா 4 படி வெளி வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யும் சிவன் கம்பனி கட்டளை அனுப்புவதற்கான மிக உகந்த சிக்கனமான தொகை குறித்து சிந்தித்து வருகிறது.
ஆண்டிற்கான கேள்வி ரூபா 24,000 கிலோகிராம் ஆகும்.
கட்டளைக் கிரயம் ஒரு கட்டளைக்கு ரூபா 120 ஆகும்.
பராமரிப்புக் கிரயம் அலகு விலையில் 25% ஆகும்.
**தேவைப்படுவது:**
சிக்கனக் கட்டளைத் தொகையைக் கணிக்குக.

ஆ. பின்வரும் தகவல்கள் மேலே குறிப்பிட்ட மூலப்பொருள் தொடர்பானவை.
உச்ச மாதாந்தப் பயன்பாடு 3,000 கிலோகிராம்.
இழிவு மாதாந்தப் பயன்பாடு 1,400 கிலோகிராம்.
முதன்மைக் காலங்கள் 2-4 வாரங்கள்.
**தேவைப்படுவது:**
மறுகட்டளை மட்டம்
உச்ச இருப்பு மட்டம்

இ. விஜி கம்பனியில் 2010 ஜனவரி மாதத்தின் தொடக்கத்தில் ரூபா 22 படி 40,000 கழுத்துப்பட்டிகள் உண்டு.
இம்மாதக் கொள்வனவுகள்:
08 ஜனவரி 16,000 கழுத்துப்பட்டிகள் ஒவ்வொன்றும் 24 ரூபாப்படி.
15 ஜனவரி 24,000 கழுத்துப்பட்டிகள் ஒவ்வொன்றும் 26 ரூபாப்படி.
28 ஜனவரி 32,000 கழுத்துப்பட்டிகள் ஒவ்வொன்றும் 30 ரூபாப்படி.
இம்மாத விநியோகம்:
16 ஜனவரி 64,000 கழுத்துப்பட்டிகள்
29 ஜனவரி 40,000 கழுத்துப்பட்டிகள்
**தேவைப்படுவது:**
எளிய சராசரி முறையில் களஞ்சியப் பேரேடு.

ஈ. வேலை இலக்கம் 56 இற்கான தகவல்கள் வருமாறு:
மணித்தியாலக் கூலி ரூபா 160
அனுமதித்த நேரம் 80 மணித்தியாலங்கள்.
எடுத்த நேரம் 66 மணித்தியாலங்கள்.
பின்வரும் தகவல்களின் அடிப்படையில் சம்பளத்தைக் கணிப்பிடுக.
1) கல்சித் திட்டம்.
2) ரோவான் திட்டம்.

04. அருள் லிமிட்டட்டின் முதலாம் வருட நிதிக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது.
2009 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கணக்கு.

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை | | 960,000 |
| கழிவு: விற்பனைக் கிரயம் | | |
| கொள்வனவுகள் | 800,000 | |
| இறுதி இருப்பு | (400,000) | (400,000) |
| மொத்தலாபம் | | 560,000 |
| கழிவு: ஏனைய செலவுகள் | | |
| விற்பனைச் செலவுகள் | | 120,000 |
| ஏனைய செலவுகள் | | 160,000 |
| வட்டி | | 16,800 |
| தேறியலாபம் | | 263,200 |
| வரி | | 119,200 |
| வரிக்குப்பின் தேறிய இலாபம் | | 144,000 |

2009 டிசம்பர் 31 இல் ஐந்தொகை

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | |
| பொறியும் உபகரணமும் | | 800,000 |
| கழிவு: பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | 320,000 |
| | | 160,000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| இருப்பு | 400,000 | |
| கடன்பட்டோர் | 240,000 | |
| முதலீடு | 96,000 | |
| காசு | 80,000 | |
| | 816,000 | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| கடன்கொடுத்தோர் | 200,000 | 616,000 |
| | | 776,000 |
| பின்வருமாறு நிதியிடப்படுகிறது | | |
| கூறப்பட்ட மூலதனம் | | |
| சாதாரண பங்குகள் (ரூபா 20) | | 200,000 |
| முன்னுரிமைப் பங்குகள் (ரூபா 10, ரூபா 5 பங்குலாபமுடையது) | | 80,000 |
| இலாபநட்டக் கணக்கு | | 144,000 |
| வங்கிக் கடன் | | 352,000 |
| | | 776,000 |

**தேவைப்படுவது:**
1) நேரில் முறையைப் ப்யன்படுத்தி 2009 டிசம்பர் 31ஆம் திகதியின் வருட முடிவிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்குக.
2) பின்வரும் விகிதங்களைக் கணிப்படுக.
   1. வட்டிக் காப்பு விகிதம்.
   2. நடப்பு விகிதம்.
   3. விரைவு விகிதம்.
   4. பங்கு ஒன்றின் உழைப்பு.
   5. கடன்பட்டோர் வசூல் காலம்.
   6. கடன்கொடுத்தோர் தீர்வுக் காலம்.

05. அ. சாந்தன் உற்பத்திக் கம்பனியின் 2008 ஜனவரி முதல் வாரத்திற்கான கையிருப்புக் கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு:

ஜனவரி 1 இல் கையிருப்பு 1,200 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 20.
ஜனவரி 4 இல் ஒவ்வொன்றும் ரூபா 24 வீதம் 1,000 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன.
ஜனவரி 5 இல் விநியோகம் 1,600 அலகுகள்
ஜனவரி 6 இல் ஒவ்வொன்றும் ரூபா 16 வீதம் 400 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன.
ஜனவரி 6 இல் 4 இல் கொள்வனவு செய்யப்பட்டதில் 200 அலகுகள் வழங்குநருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.
ஜனவரி 7 இல் விநியோகம் 600 அலகுகள்.
**தேவைப்படுவது:**
முதல் வந்தது முதல் செல்லல் (FIFO) என்ற முறையில் இருப்புப் பேரேட்டைத் தயாரிக்குக.

ஆ. வரையறுக்கப்பட்ட பிரதாப் கம்பனி மூன்று உற்பத்தித் திணைக்களங்களையும், சேவைத் திணைக்களம் ஒன்றையும் கொண்ட கம்பனியாகும்.
மேந்தலைகள் வருமாறு:
தொழிற்சாலை வாடகை ரூபா 200,000
இயந்திரப் பெறுமானத் தேய்வு ரூபா 64,000
ஒளியூட்டலும் வெப்பமும் ரூபா 32,000

| | திணைக்களம் உற்பத்தி 1 | உற்பத்தி 2 | உற்பத்தி 3 | சேவை |
|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் | ரூ.48,000 | ரூ.40,000 | ரூ.20,000 | ரூ.20,000 |
| நிலப் பரப்பு-சதுர மீற்றர் | 1,600 | 1,200 | 800 | 400 |
| கனவளவு-கள மீற்றர் | 800 | 200 | 200 | 400 |
| இயந்திரப் பெறுமதி | ரூ.400,000 | ரூ.200,000 | ரூ.200,000 | - |
| கூலி-மணித்தியாலம் | 9,600 | 17,600 | 19 200 | - |

சேவைத் திணைக்கள மேந்தலை சமவிகித அடிப்படையில் உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையில் பகிரப்படவேண்டும். ஒவ்வொரு திணைக்களத்திலும் சேர்ட், பெனியன் ஆகிய இரு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேந்தலைகளானவை நேர்க்கூலி மணி அடிப்படையில் உள்ளடக்கப்படுகிறது.
ஓரலகு கால் உறை, தலையணி தொடர்பான கூலி மணி விவரம்,

| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | உற்பத்தி 3 |
|---|---|---|---|
| காலணி | 6 மணி | 4 மணி | 2 மணி |
| தலையணி | 2 மணி | 2 மணி | 2 மணி |

**தேவைப்படுவது:**
1) மேந்தலைக் கிரயத்தை ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பங்கீடு செய்தல்.
2) சேவை திணைக்களத்தின் மொத்த மேந்தலைக் கிரயத்தை உற்பத்தித் திணைக்களங்களுக்கு இடையில் மறுபங்கீடு செய்தல்.
3) காலணி ஒன்றின் மூலக்கிரயம் ரூபா 2,400. தலையணி ஒன்றின் மூலக் கிரயம் ரூபா 400. எனின், ஒவ்வொன்றினதும் உற்பத்திக் கிரயத்தைக் கணிக்குக.

06. அ. தியாகராஜா கம்பனி தொடர்பான தகவல்கள் வருமாறு:
அலகு விற்பனை விலை ரூபா 320
அலகு நேர் மூலப்பொருள் ரூபா 80
அலகு நேர்க்கூலி ரூபா 120
அலகு மாறும் உற்பத்தி மேந்தலை ரூபா 40
நிலையான மேந்தலை ரூபா 60,000
விற்பனை அலகுகள் 8,000
**தேவைப்படுவது:**
1) அலகுப் பங்களிப்பைக் கணிக்குக.
2) பங்களிப்பு விற்பனை வீதத்தைக் கணிக்குக.
3) இலாப நட்டமற்ற புள்ளியை (அலகில்) கணிப்பிடுக.
4) பாதுகாப்பு எல்லையை (அலகில்) கணிப்பிடுக.
5) பாதுகாப்பு எல்லையை (பெறுமதியில்) கணிப்பிடுக.
6) இலாப வளையியை வரைக.

ஆ. ரஞ்சன் உற்பத்திக் கம்பனி ஒரு பொறியைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்து பின்வரும் தகவல்களைத் தீர்மானித்தது.
பொறி - (A)
பொறியின் கிரயம் ரூபா 32.0 மில்லியன்.
பொறியின் ஆயுள் 4 வருடங்கள்.
கழிவுப் பெறுமதி ரூபா 2.0 மில்லியன்.
கழிவுக் காரணி 10%
தேறிய காசுப்பாய்ச்சல்:
1 வருடம் ரூபா 8.0 மில்லியன்.
2 வருடம் ரூபா 16.0 மில்லியன்.
3 வருடம் ரூபா 12.0 மில்லியன்.
4 வருடம் ரூபா 6.0 மில்லியன்.
பொறி - (B)
தேறிய இற்றைப் பெறுமதி ரூபா 240,000.
உள்ளக வருவாய் 15%
பொறியின் ஆயுள் 4 வருடங்கள்.
இற்றைப் பெறுமதி அட்டவணை:

| வருடம் | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| 10% | 1.0000 | 0.9091 | 0.8264 | 0.7513 | 0.6830 |
| 15% | 1.0000 | 0.8696 | 0.7561 | 0.6575 | 0.5718 |

**வேண்டப்படுவது:**
1) பொறி (A) இன் தேறிய நிகழ்காலப் பெறுமதி.
2) பொறி (B) இன் உள்ளக வருவாய் வீதம்.
3) எந்தப் பொறியைக் கொள்வனவு செய்தல் மிகவும் விரும்பக்கூடியது?

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கல்விச் சுற்றுலா – மீள் பதிவுகள்

(இரண்டாவது பகுதி)

எம்மவர்களுக்கு அது ஒரு புதுமையான இயற்கைச் சூழல். காலிமுகத்திடலின் எதிரே இலங்கையின் மிக உயரமான கட்டடத்தொகுதியும் அதனோடு இணைந்த கில்டன், கலதாரி விடுதிகளும் ஏனைய கட்டடத் தொகுதியும் பழைய நாடாளுமன்ற கட்டடத்தொகுதியும் முளைத்து நின்று மின்குமிழ்களால் ஒளியூட்டப்பட்டிருந்த அந்தக் காட்சி எல்லோரது மனங்களையும் ஒரு



கணம் குளிரச் செய்தது. அதற்கிடையில் யாழ்ப்பாணத்தின் கற்பக தருக்கள் சிலவும் முளைத்து நின்றமையும் சிறப்பைத் தந்தது. மாலைப் பொழுதில் காலிமுகத்திடலின் அந்த இரசனையை அனுபவித்த நாங்கள் அதிலிருந்து விடுபடமுடியாமல் மெல்ல மெல்ல விடுபட்டே ஆக வேண்டும் எனும் நியதியில் விடுபட்டு இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தைச் சென்றடைந்தோம். மிகவும் அழகாகவும் அமைதியாகவும் இருந்து அருள் பாலித்து வரும்

## நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தைப் பார்வையிட்டோம்

அந்தோனியாரை அமைதியாக வணங்கி ஆராதனை செய்து அருள்மிகு பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயம் சென்றோம். இலங்கையின் ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றாகிய இக்கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கைதேர்ந்த சிற்பாசாரியர்களால் சேர்.பொன்.இராமநாதன் அவர்களது காலத்தில் கருங்கல்லினால் செதுக்கப்பட்டு கட்டப்பட்ட மிகவும் பிரமாண்டமான பழமைவாய்ந்த ஆலயம். ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் போது ஒரு கணம் எம்மை மெய் சிலிர்க்க வைக்கக் கூடியவாறு சிவலிங்கப் பெருமானின் அருள் பாலிப்பதை அவதானிக்க முடிந்தது. இரண்டாம் நாள் பயணம் முன்னேஸ்வரத்தில் ஆரம்பித்து பொன்னம்பல வாணேஸ்வரத்தில் முடிவடைகின்றது.

இரவு பம்பலப்பிட்டி இந்து பெண்கள் பாடசாலையில் பெண்களும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.ஈ.சரவணபவன் அவர்களது இல்லத்தில் ஆண்களும் தங்க வைக்கப்பட்டோம். அன்றைய நாள் எம்மால் மறக்க முடியாத நாளாக அமைகின்றது. தமது குடும்ப உறுப்பினர்களை வரவேற்று

அபராஜிதன்
(ஆசிரியர்,கச்சாய் அ.த.க. பாடசாலை)

உபசரிப்பது போன்று எங்களைத் தங்களது வீட்டிற்கு அழைத்துச் சகல வசதிகளையும் செய்த நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது துணைவியாரும் நன்றாக உபசரித்து உணவு, தேநீர் மற்றும் மாணவர்களுக்கான சிற்றுண்டிகள் வழங்கி எம்மைக் கௌரவித்தமை எம்மை மெய்சிலிர்க்க வைத்ததுடன், நாங்கள் அவரைச் சிரமப்படுத்தி விட்டோம் என்ற எண்ணத்தையும் எம்மிடத்தே தோற்றுவித்தது. அதே போன்று நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.சி.சிறிதரன் அவர்களும் எம்மிடம் வருகை தந்து கலந்துரையாடி உணவு வழங்கலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு எம்மை கௌரவப்படுத்தியமையை மறக்கலாகாது.

தொடர்ந்து 3ஆம் நாள் எமது பயணம் வெள்ளவத்தையில் இருந்து ஆரம்பமாகின்றது. காலையிலே நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஈ.சரவணபவன் அவர்களுடன் அருகிலுள்ள மாணிக்க விநாயகர் ஆலயத்திற்குச் சென்றோம். அவ் ஆலயத்தின் சிறப்புப் பற்றியும் கல்விச் சுற்றுலாவை தென்மராட்சியில் பல பாடசாலைகள் மேற்கொள்ள முன் ஆயத்தங்கள் செய்கின்ற போதிலும் உங்களது பாடசாலை முதன் முதலாக பயணித்திருப்பது பெருமைக்குரிய விடயம் எனவும் தன்னிடம் ஒரு திட்டம் ஒன்று இருப்பதாகவும் அதாவது யாழ். மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் கல்விச் சுற்றுலா மூலமாக இலங்கையின் பல பாகங்களைத் தரிசித்து பயன் பெறவேண்டும் எனவும் அதற்காக சுற்றுலா வழிகாட்டல் குழு ஒன்றை நிறுவி அவர்களது வழிகாட்டுதல்களுடன் கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றினால் நேர்த்தியாகவும் முழுமையாகவும் இருக்கும் என எம்முடம் கலந்துரையாடினார் தொடர்ந்து அவரது ஏற்பாட்டின் மூலம் இலங்கையின் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியைப் பார்வையிடச் சென்றோம். எமது பஸ்வண்டியில் புறப்பட்டு கட்டட நுழைவாயிலில் சென்று பின்னர் நாடாளுமன்ற வளாகத்திற்கான பஸ்வண்டியில் நாடாளுமன்றத்தை அடைந்தோம். தியவன்ன ஆற்றை மறித்து அதன் நடுவே யப்பான் நாட்டின் நிதி உதவியுடன் அழகாகக் கட்டப்பட்ட கட்டடத்தொகுதியே இலங்கை நாடாளுமன்றமாகும். ஜனநாயகத் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடுகின்ற இடமாக அதாவது இலங்கையின் ஆட்சிப் பீடத்தின் ஒரு மையமாக இது விளங்குகின்றது. நாங்கள் நாடாளுமன்றத்திற்குள் உடற் சோதனைகளின் பின் பிரவேசித்தோம். சபாநாயகரின் தலைமையின் கீழ் வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சபாநாயகருக்கு வலது புறத்தே ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இடது புறத்தே எதிர்க் கட்சி உறுப்பினர்களும் அமர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தனர். பார்வையாளர் மற்றும் ஊடகவியலாளர்களால் மண்டபங்கள் நிரம்பியிருந்தன. ஆனால் எதிர்க்கட்சி ஆசனங்கள் பல வெறுமையாகவே காணப்பட்டன. பிரதமர் மற்றும் பல அமைச்சர்களை நேரில் காணக்கூடிய வாய்ப்பாக அமைந்தது.

30 நிமிடங்கள் மாத்திரமே நாங்கள் அமர்ந்திருந்து விவாதத்தைப் பார்க்க அனுமதி உண்டு. அந்த 30 நிமிடங்களுக்குள்ளும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களது நடத்தைகளை அவதானிக்க முடியும். நாடாளுமன்ற விவாத அவதானிப்பைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் அவர்களது ஏற்பாட்டில் நாடாளுமன்ற கீழ் கட்டடத் தொகுதியில் தேநீர் விருந்துபசாரமொன்று எமக்கு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவரது அரசியல் பணி நீடிக்க வேண்டுமென வாழ்த்தி அவ்விடத்திலிருந்து வெளியேறினோம்.

தொடர்ந்து எமது பயணம் களனிப் பல்கலைக்கழகம் நோக்கிப் பயணிக்கின்றது. இலங்கையின் பல்கலைக்கழக கல்வி முறை ஒழுங்கு ஏனைய விடயங்களை அவதானிப்பதும் பெரும்பான்மை சிங்கள சகோதரர்களுடன் கலந்துரையாடுவதுமே இதன் முக்கிய கருப் பொருளாகும். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் திரு. தயான் அவர்களால் வரவேற்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு வளாகங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டோம். அதில் சிறப்பான அம்சம் என்னவெனில் அங்கு காணப்படும் நூலகத்தின் சிறப்பாகும். இரண்டு மாடிக்கட்டடங்களைக் கொண்ட நூலகத்தில் 8000 நூல்கள் ஆங்கில, சிங்கள மொழிமூலம் காணப்படுகின்றன. பொறியியல், வைத்தியபீடம் தவிர்ந்த ஏனைய துறைகள் யாவும் மேற்கொள்ளப்படுகின்றன. 8000 மாணவர்கள் கல்விகற்கின்றனர் மற்றும் பட்டப்பின் படிப்புக்கள் என்பனவும் நடைபெறுகின்றன. மதிய உணவு பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு மதிய உணவை முடித்துக் கொண்டு எமது பயணம் காலி நோக்கி ஆரம்பமாகின்றது. பயணப்பாதையில் கிக்கடுவ பீச் கண்களுக்கு விருந்தளித்தது. கடலோடு படகுகள் சங்கமிக்கின்ற மாலைக்காட்சி உள்ளத்தை உணர்வூட்டச் செய்தது. காலிக் கோட்டைக்குள் பிரவேசித்த போது அரண்மனை ஒன்றினுள் பிரவேசித்த அனுபவம் ஏற்படலாயிற்று. சுரங்கப்பாதைகளும் அகலமான அரண்களும் வேற்று நாட்டவரின் கட்டடக் கலையின் மகிமையை உணர்த்தி நின்றன. கோட்டையிலிருந்து பயணம் கதிர்காமக் கந்தன் நோக்கிச் செல்கின்றது. கதிர்காமத்தைச் சென்றடைய சூரியன் மறைந்து இருள் கவிந்து கொண்டது. நீண்ட தூரப் பயணம். பயணக் களைப்பின்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமே பயணக்குழுவிடம் காணப்பட்டது. எனினும் அன்றைய இரவு இந்துயாத் திரிகர்கள் தங்கும் விடுதியில் நிறைவடைந்தது. 3ஆம் நாள் பொழுது மாணிக்க விநாயகரில் ஆரம்பித்து கதிர்காமக் கந்தன் வாயிடத்தில் நிறைவடைந்தது. நான்காம் நாள் அதிகாலை எல்லோர் மனதிலும் புத் தெளிர்ச்சி. காரணம் மாணிக்க கங்கையில் நீராடி கதிர மலைக் கந்தனைக் கண்டேகப்போகின்றோம் என்பதே யாகும். காலையில் அனைவரும் மாணிக்க கங்கை யில் நீராடினோம். பயணக்குழுவில் சிலர் ஏற்கனவே செய்ய வேண்டிய நேர்த்திக் கடன்களை மொட்டை யடித்து நிறைவேற்றினர். கந்தனின் தேவஸ்தானத் திற்குள் நுழைகின்றோம். மதங்களால் தான் பிரச்சினைகள் தோன்றுகின்றன என்பதற்கு



சாட்சியாக கதிர்காமம் திகழ்கின்றது. கந்தப் பெருமானின் கீர்த்தியை பறைசாற்றிய கதிர்காமம் காவி உடைதரித்தோரால் நிரம்பி வழிகின்றது. எங்கும் புத்த பெருமானின் காட்சிப்படிமம். வெள்ளரசு மரம் வாயிலில் யானை முகங்கள் பதிக்கப்பட்டு மஞ்சள் நிறத்திலானதும் வெள்ளை நிறப்பூச்சுக்கள் பௌத்தமத வழிபாட்டுச் சாயல்கள், ஆலயச் சூழல் முழுவதும் சைவ சமயத்தின் அடையாளங் கள் மெல்ல மெல்ல அகற்றப்படுவதற்கு மேலாக பௌத்த மத சின்னங்கள்முளைக்கின்றன. தெய்வானை மண்டபத்திற்குள் முருகன், தெய்வானை அம்மன் கோயில் புனரமைப்பு செய்யப்படாமல் ஐயர் மார் மனம் வெதும்புவதை அவதானிக்க முடிந்தது. தெய்வானை அம்மன் ஆலயத்தைக்கூட புனரமைப்பு செய்ய அனுமதி தரவில்லை என அதன் முகாமையாளர் எம்மிடம் தெரிவித்தார்.



உதாரணத்திற்கு அக்கோயிலின் முன் பக்கத்திற்கு எமது சைவக்கோயிலின் அடையாளமாக வெள்ளை, சிவப்பு அகலமான கோடுகளால் நிறம் அண்மையில் தீட்டப்பட்டிருந்தது. நிலங்களுக்கு சிவப்பு நிறப்பூச்சு பூசப்பட்டிருந்தது. நான் முகாமையாளருடன் கதைத்துக் கொண்டி ருக்கும் போது தொலைபேசி அழைப்பு வருகின் றது முகாமையாளர் தொலைபேசியில் ஆங்கி லத்தில் கதைத்து விட்டு தலையில் கை வைத்தபடி என்னிடம் தெரிவித்தார், நிறப்பூச் சில் சிவப்பு நிறத்தை எடுத்து விடுமாறு அமைச்சர் கூறுகின்றார். காரணம் சைவக் கோயிலின் அடையாளம் இருந்து விடா மல் எல்லாவற்றையும் வெள்ளையாகப் பூசுமாறு தெரிவித்திருக்கிறார்கள் என்று. இந்தளவிற்கு கோயிலின் நிலை காணப்படுகின்றது. தொடர்ந்து கதிரமலைக்கு ஏறுவதற்கு உற்சாகமாகப் பய ணக்குழுவினர் செல்கின்றோம். *(பயணம் நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கின்னஸ் சாதனை; அது, விமல்வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டம்

**அன்று பிரதமர் பிரேமதாசவைப் பயன்படுத்தி ஜனாதிபதி ஜே.ஆர். இந்தியாவை மிரட்ட முயன்றமை போன்று, இன்று விமல் வீரவன்சவைப் பயன்படுத்தி ஐ.நா.சபையை மிரட்டும் வகையில் இன்றைய அரசு செயற்பட்டு வருவதாகக் கூறுமுனையும் வகையிலானது இக்கட்டுரை.**

**"லங்காதீப"சிங்கள நாளிதழில் வாராவாரம் வியாழக்கிழமைகளில் "உப்புல் யோசெப் பெர்னாண்டோ" எழுதிவரும் வியாழன் அலசல் பகுதியில் வெளியாகும் கட்டுரை வரிசையில் கடந்த 15ஆம் திகதியன்று வெளியான கட்டுரையின் தமிழ்வடிவம் இது.**

திரைப்படத் துறையில் ஹொலிவூட்டில், பொலிவூட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் கூட உச்சச் சண்டைக் காட்சிகள் படமாக்கப்படும்போது கதா நாயகனுக்குப் பதிலாக கதாநாயகன் நடிக்க வேண்டிய காட்சிகளில் 'டம்மி' ஒருத்தரைப் பயன்படுத்தியே படப்பிடிப்பை மேற்கொள்வது வழக்கத்தில் உள்ளது. ஏனெனில் அத்தகைய உச்சச் சண்டைக் காட்சிகளில் படத்தின் கதாநாயகன் பங்கெடுக்கும்போது தப்பித்தவறி கதாநாயகனுக்கு உடற்பாதிப்பேனும் ஏற்படுமானால் கதாநாயகனாலும் தொடர்ந்து படப்பிடிப்பில் கலந்துகொள்ள இயலாது போய்விடுவதுடன் குறிப்பிட்ட படத்தின் படப்பிடிப்பும் தடைப்பட நேரிடும். இதனால் ஒரு படத்தில் நடிக்கும் முன்னணிக் கதாநாயகனொருவர் அத்தகைய விஷப் பரீட்சையை மேற்கொள்ளத் துணிவதில்லை. ஆதலால் ஆபத்துமிக்க உச்சச் சண்டைக் காட்சிகளில் கதாநாயகனுக்குப் பதிலாக 'டம்மி'யாக ஒருத்தரை நடிக்கவைத்து அச்சண்டைக் காட்சியைப் படமாக்கும் உத்தி மிக நீண்ட காலமாகவே வழக்கத்தில் இருந்து வருகிறது.

மிக அண்மையில் கொழும்பிலுள்ள ஐக்கியநாடுகள் சபையின் இலங்கை அலுவலகக் கட்டடத்துக்கு முன்னால் அரசு நடத்திய "தாய்மண்ணைப் பாதுகாக்க இயலாவிட்டால் மரணத்தைத் தழுவுவோம்" என்ற தலைப்பிலான திரைப்படத்தின் படப்பிடிப்பில் அரசு டம்மியாகப் பயன்படுத்திய பிரமுகர் வேறுயாருமல்ல; விமல் வீரவன்சவே அவராவார். ஏனெனில் அந்தச் சம்பவத்தில் அரசு நேடியாகத் தொடர்புபட்டுச் செயற்பட்டிருந்தால் அரசும் தனது மரியாதையை இழக்க நேர்த்திருக்கும்; அத்தோடு இந்த நாடும் உலக அரங்கில் மதிப்பிழக்க நேர்ந்திருக்கும்.



ஐ.நா.செயலாளர் பான்-கீ மூன் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா? என்பதைக் கண்டறிந்து தமக்கு ஆலோசனை வழங்கவென நியமித்த நிபுணர் குழுவைக் கலைக்கும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர்துறக்கும் காட்சியில் நடிக்க விமல்வீரவன்ச பயன்படுத்தப்பட்ட அந்தப் படப்பிடிப்பின் திரைக்கதை வசனத்தின்படி குறிப்பிட்ட அந்த ஐ.நா செயலரின் நிபுணர் குழுவின் நியமனத்துக்கு எதிராகக் குரலெழுப்பும் ரஷ்யா, சீனா உட்பட ஒரு சில நாடுகளுக்கு மேலதிகமாக வேறுசில உலக நாடுகளும் அவற்றுடன் இணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி,



ஒருவேளை அத்தகைய தீவிர எதிர்ப்புக் காரணமாக ஐ.நா செயலரால் நியமிக்கப்பட்ட அவ் விசேட குழுவை ஐ.நா.செயலரே கலைத்துவிடும் ஒரு சூழ்நிலை உருவாகுமானால் அந்த வேளையில் அரசு வெளிப்படையாகவே முன்வந்து அதைத்தனது வெற்றியாகவே பறைசாற்ற அதற்கான பொருத்தமான வெற்றிக்கோஷம் கூட தயார்ப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திரைக்கதை வசனத்துக்கு அமைய படம் பிடிக்கப்பட்ட படக்காட்சி அமையவில்லை. விமல் வீரவன்சவின் சாகும்வரையான உண்ணாவிரதம் என்ற மிரட்டலுக்கு அஞ்சி ஐ.நா. செயலாளர் தாம் நியமித்த குழுவைக் கலைக்கவோ, தமது முடிவை மாற்றிக்கொள்ளவோ முன்வரவில்லை. இதற்குமாறாக, விமல் வீரவன்சவின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்த காரணத்துக்காக ஐ.நா. செயலர் தம்மீது பகைமைபாராட்டக் கூடுமென அஞ்சிய விமல்வீரவன்சவின் கோரிக்கைக்கு ஆதரவாகக் குரலெழுப்பிய நாடுகள் தமது அத்தகைய ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கிக் கொண்டன. கடைசியில் எதுவுமே செய்ய இயலாத நிலையில் ஜனாதிபதியை அந்த இடத்துக்கு அழைப்பித்து அவரது கையால் குளிர்பானம் வாங்கி அருந்தி விமல்வீரவன்சவும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுச் செல்ல நேர்ந்தது.

கடைசியில் அந்த உச்சக்கட்டக் காட்சி,-ஐ.நா.செயலரின் நடவடிக்கை காரணமாக விமல்வீரவன்ச உயிரிழக்க நேர்ந்ததென்ற-ஐ.நா.செயலாளர் ஒரு கொலையாளியாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டியிருந்த அக்காட்சி, ஒரு நகைச் சுவை நாடகக் காட்சிபோல அமைய நேர்ந்தது.

ஐ.நா.செயலர் பான்-கீ மூன் ஒரு கொலையாளி என அடையாளப் படுத்தப்படும் நிலை உருவாகிவந்த போதிலும் நூலிழையில் அந்நிலை அற்றுப்போக நேர்ந்தது.

ஏனெனில் தாம் உண்ணாவிரதம் மேற்கொள்வதன் மூலமாக உயிர்துறக்க நேரிட்டால் அதற்கு முழுப்பொறுப்பும் பான்-கீமூனைச் சேர்ந்ததே என விமல் வீரவன்ச இந்தநாட்டின் ஊடகங்களுக்கு மட்டுமல்லாது சர்வதேச ஊடகங்களுக்கும் தெரிவித்திருந்தார்.

ஒரு பலூன் ஆனாலும் ஒரு குறிப்பிட்டளவுக்கு மட்டுமே அதற்குள் காற்றை ஊதிப்பெருப்பிக்க இயலும். அளவுக்கு அதிகமாக ஒரு பலூனுக்குள் காற்றை நிரப்புவோமானால் அது துண்டு

**தமிழில்: ராஜா**

துண்டாக வெடித்துச் சிதறிவிடும். விமல் வீரவன்சவின் நிலையும் அதுபோன்றதொன்றே. நாட்டுப்பற்று என்ற பலூனை அளவுக்கு அதிகமாக ஊதிப்பெருப்பிக்கப்போய் கடைசியில் அவர் இத்தகைய நிலைக்கு உட்பட நேர்ந்துள்ளது.

உண்மையில் பான்-கீமூனின் நிபுணர் குழு நியமனத்துக்கு எதிராக ரஷ்யாவும் சீனாவும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியமை விமல்வீரவன்ச தனது உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் என்றல்ல. அவர் அது குறித்து தீர்மானிப்பதற்கு முன்னரே ஆகும். அந்த வேளையில் இலங்கை அரசு குறிப்பிட்ட அந்த நிபுணர் குழு நியமனத்துக்கு எதிராக அணிசேரா நாடுகளின் ஆதரவைத் திரட்டும் நடவடிக்கையில் இறங்கயிருக்கிறது. ரஷ்யா மற்றும் சீனாவின் அத்தகைய எதிர்ப்பு அறிப்பு இலங்கை அரசின் அம்முயற்சிக்குப் பெரும் உறுதுணையாக அமைந்தது. அணிசேரா நாடுகளிடம் ஆதரவுகோரி இலங்கை அரசு அனுப்பிவைத்த கடிதங்கள் அந்நாடுகள் மத்தியில் கைமாறிவந்த வேளையிலேயே விமல் வீரவன்ச தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். தமது உண்ணாவிரதப் போராட்டம் காரணமாகவே அவ்விதம் வெளிநாடுகள் இவ்விடயத்தில் ஒன்றிணைந்து ஐ.நா.செயலரின் முடிவுக்கு எதிர்ப்பு வெளியிடுக்கின்றன எனக்காட்டிப் பிரபல்யம் தேடிக்கொள்ளும் நோக்குடனேயே அரசின் டம்மியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க விமல்வீரவன்ச முன்வந்தார். அதேவேளை இலங்கை அரசோ அணிசேரா நாடுகளை ஐ.நா.செயலாளரின் நிபுணர்குழு நியமிக்கும் முடிவுக்கு எதிராக ஒன்றுதிரள உற்சாகப்படுத்தும் நோக்கிலேயே விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்ட நாடகத்துக்கு கதைவசனம் தயாரித்து அவரைக் களத்தில் இறக்கிவைத்தது.

"இது என்ன வேடிக்கை-ஐ.நா. செயலரின் இம்முடிவை நாம் எதிர்ப்தென்னமோ உண்மைதான்; ஆனாலும் இத்தகையதொரு கீழ்மட்டத்துக்கு இறங்கும் அளவுக்கு எம்மால் ஐ.நா.சபைக்கு எதிராக எதிர்ப்புக்காட்ட இயலாது".

மேற்கண்ட கருத்து இலங்கை அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து ஆயுத உதவிகளை வழங்கிய இலங்கை அரசின் நெருங்கிய நட்பு நாடொன்று விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்துத் தெரிவித்த கருத்து எனக் கூறப்படுகிறது.

உண்மையில் இடம்பெற்றது என்னவெனில், விமல் வீரவன்ச தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து, நாள்கள் கழியக் கழிய இலங்கைக்கு இவ்விடயத்தில் ஆதரவு வழங்க முன்வந்த அணிசேரா நாடுகள் ஒவ்வொன்றாகப் பின்வாங்க ஆரம்பித்தமை ஆகும். கடைசியில் ரஷ்யாவும், சீனாவும் கூடச் சத்தமில்லாமல் பின்வாங்கிக் கொண்டன.

"உண்மையில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இலங்கையின் மதிப்பைப் பாதிப்படையச் செய்துவிட்டது. இது உண்மையில் விமல்வீரவன்சவின் தனிப்பட்ட பிரபல்யத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான ஒரு சம்பவமே"

இவ்வாறு கருத்து வெளியிட்டவர், யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணைக்குழு முன்னிலையில் இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றப் பிரேரணையைத் தோற்கடிக்க உலகின் நாற்புறத்திலும் உள்ள நாடுகளின் ஆதரவைத் திரட்டி அப்பிரேரணையைத் தோற்கடிப்பதில் வெற்றி கண்ட முன்னாள் இலங்கையில் ஐ.நா.வுக்கான ஜெனிவா ஸ்தானிகர் தயான் ஜெயதிலகவே ஆவார்.

உலகின் பல நாடுகளுக்கு ஐ.நா.சபையுடன் பிரச்சினைகள் உள்ளன. ஆனால் அவ்விதம் ஐ.நா.சபையுடன் பிரச்சினைப்படும் எந்தவொரு நாடும் ஐ.நா.சபை அலுவலகத்தின் முன்னால் தனது அமைச்சரொருவரை இருத்திப் பகிஷ்கரிப்பையோ, உண்ணாவிரதப் போராட்டத்தையோ முன்னெடுத்ததில்லை.

ஐ.நா.சபையுடனான தமது



பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ.நா.செயலாளரின் உருவப் பொம்மைக்குத் தீயிட்டு எதிர்ப்பு வெளிப்படுத்தியதில்லை. ஐ.நா.செயலாளருக்கெதிராக அவதூறு பேசி எதிர்ப்புப் பதாகைளைத் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்ததில்லை. அத்தகைய நாடுகள் தமது எதிர்ப்பை நாகரிகமான விதத்தில், ராஜதந்திர ரீதியிலேயே வெளிப்படுத்துவது வழக்கம்.

இந்த யதார்த்தத்தை நன்கு தெரிந்துள்ள பிரமுகர்களும் இந்த அரசில் இல்லாமல் இல்லை.

அந்த வகையில் இந்த விடயத்தில் ஐ.நா.சபையுடன் புத்திசாலித்தனமாக ராஜதந்திர ரீதியில் தொடர்பு பேணி இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பத்திரிகையாளர் மாநாட்டின்போது வெளியிட்ட கருத்து விமல் வீரசன்சவின் உண்ணாவிரதப் போராட்ட நடவடிக்கையை மறைமுகமாகக் கண்டிப்பதாகவும் அமைந்தது.

விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர்



ஐ.நா.செயலாளரின் நிபுணர்குழு நியமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கடிதத்தில் ஒப்பமிட அணிசேரா நாடுகளில் பல பின்னடித்ததன் காரணமாக, தற்போது அக்கடிதத்தில் அடங்கியுள்ள தீவிர எதிர்ப்பு வாசகங்களை நீக்கி புதிய வடிவத்தில் அந்த எதிர்ப்புக் கடிதம் தயாரிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

சரி; அப்படியானால் விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் ஈட்டப்பட்ட பலாபலன்தான் என்ன?

உண்மையில் ஐ.நா.செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இலங்கை அரசு உலக நாடுகள் மத்தியில் ஆதரவைத் திரட்டக் கிட்டியிருந்த வலிமை; உலக நாடுகள் மத்தியில் இலங்கை குறித்து நிலவிய நல்லெண்ணம் நலிவுற நேர்ந்தமையே விமல் வீரவன்சவின் உண்ணாவிரத நடவடிக்கையால் கிட்டிய பலனாகும்.

இன்று தனது இத்தகைய போலி நாடகங்களால் உலக நாடுகள் மத்தியில் தனது மதிப்பும் மரியாதையும் கீழிறங்கி

(18ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.காவின் வாக்குவீத வீழ்ச்சியாலேயே மு.காவின் வாக்கு எண்ணிக்கை குறைவாம்!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

''ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வீதம் குறைவடைந்ததனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்கு வீதமும் குறைவடைந்துள்ளது.''

-இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

வட மாகண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 20 ஆண்டுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பூர்த்தியாகவுள்ள நிலையில் இந்த வெளியேற்றத்தை சர்வதேச சமூகத்திற்கு காட்டும் வகையில் எமது பாரிய செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவரான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் மரணித்து 10 ஆண்டுகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நிறைவடையவுள்ளமையை முன்னிட்டு குர்ஆன் ஆராய்ச்சி மாநாடு ஒன்றை நடத்தவுள்ளோம்.

அத்துடன் கட்சியை அடிமட்டத்தில் இருந்து வளர்க்கவுள்ளோம். அதற்காக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டம் என்ற அடிப்படையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சியை விஸ்தரிப்பு செய்வதற்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நியமிக்கவுள்ளோம்- இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

(ஒ-10)


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

மூத்த விநாயகர் வீதி, கடுகாட்டு லேன் சந்திக்கு அருகாமையில் 5 பரப்புக் காணியில் அமைந்த மூன்று அறை, குசினி மற்றும் தண்ணீர் வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0777200083, 0213007562



**தேவை**

குளிர்பான வாகனங்கள்
ஓடுவதற்கு சாரதி மற்றும்
உதவியாளர்கள் தேவை.
விரும்பியவர்கள் நேரில் வரவும்.

கொக்ககோலா விநியோகஸ்தர்
சிவா பிறதர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## கோலத்திறன் விழா

சங்கானை,ஜூலை 20

வலி.மேற்கு உள்ளூராட்சி வார நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம், பிரதேச சபையும், வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும், இணைந்து நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் கோலத்திறன் போட்டி அண்மையில் சபையின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை வர்த்தகர் த.சீவரத்தினம் கலந்துகொண்டார்.

(எ-2)

**நன்றி சொரியும் நல்வாழ்த்துக்கள்**



அரச சேவையைத்
திறம்பட ஆற்றி
ஓய்வுபெற்றுச்
செல்லும் முன்னாள்
யாழ்.அரச அதிபர்
உயர்திரு
கே.கணேஸ்
மக்கள் சேவையே
உன்னத சேவையாக
மதித்த உயர்
மனிதரே! நீடுழி
வாழ்க! வாழ்க!!..

நெடுந்தீவு-குறிகாட்டுவான் கடல் பிரயாண சேவையில் ஈடுபடும் குமுதினி மோட்டார் படகின் பழுதுகளை எடுத்துக்காட்டி மகஜர் நேரில் சமர்ப்பித்து தெரிவித்ததன் பிரகாரம் உடனடியாக 2 மில்லியன் ரூபா பணம் (20 லட்சம் ரூபா) ஒதுக்கியமைக்காக உத்தம சீலனை மனதார வாழ்த்துகின்றேன்.

சி.வ.சங்கரப்பிள்ளை
சமாதான நீதிவான், முன்னாள் தலைவர்,
நெடுந்தீவு பிரதேச சபை.


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்,

**இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் கணனிப் பயிற்சி நிலையம்**

இல 27 குமாரசுவாமி வீதி,கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.

சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

I.Basic Computer Application
(Introduction to Computer ,Ms Word,Ms Excel,Ms PowerPoint) Rs750.00 Only
II.Inter net & e-mail ( 10 Hrs) Rs 1000.00 Only

வன்னியில் இருந்து வருகை தந்த மாணவர்களுக்கு
பயிற்சிநெறிகள் முற்றிலும் இலவசம்

எமது பயிற்சி நிலையம் இது வரைகாலமும் இல 140 நாவலர் வீதியில் இயங்கி வந்தது. தற்பொழுது எமது நிலையம் இடம் மாற்றப்பட்டு இல 27 குமாரசாமி வீதி, கந்தர்மடம் எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது


**மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**



ஆசிரியர் சேவை-01.11.1976
அதிபர் சேவை-01.06.1991
கோப்பாய் கோட்டக் கல்விப்
பணிப்பாளர் சேவை- 07.11.2007

உயர்திரு.சின்னத்தம்பி
சித்திரவடிவேல்
B.A(Hons),Dip.in.Ed.(merit),S.L.P.S-I

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் 20.07.2010இல் தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நாளில் பல்லாண்டு காலம் வாழ்கவென இறைவனை வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/இருபாலை சீ.சீ.த.கலவன் பாடசாலை
கோப்பாய்.

**31 ஆம் நாள் நினைவலைகள்**

அமரர்
சின்னத்தம்பி
தர்மராஜா
(செல்வராசா)



மண்மகிழ :26.12.1943

கண்கலங்க :20.06.2010



நேசமுடன் எமைக்காத்த அன்பான குலவிளக்கே!
பாசமுடன், பண்புசேர் கல்வியொடு செல்வமீந்து
வாசமுடன் நல்வாழ்வு நாம்பெற்று மகிழ்வுறவே
ஓசையின்றி உமையுருக்கி உழைப்பாலே உயர்வு தந்தீர்
அன்பு மனையாளொடு மக்களும் மனம் கதற
மோசம் செய்காலனும்மை மாயமாய் கவர்ந்ததேனோ?

ஆறிடுமோ எம் துயரம் தேறிடுமோ எம்மனது
வேரிழந்த மரமானோம் வேதனைதான் வாட்டுதையா!
பாரினிலே நீங்களின்றி நிம்மதிதான் தோன்றிடுமோ?
தீயினிலே விழுந்துவிட்ட விட்டிலென துடிக்கின்றோம்
என்றுநீர் எம் குலத்தில் மீள்வருகை தருவீரென்று
உம்நினைவைச் சுமந்து நாம் தவமிருப்போம்

(சி/589341)

இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய வீதி,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

நீங்கா நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.


# யாழ்.மாவட்ட விநியோகஸ்தர்

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான
ஹேலீஸ் கொன்ஸ்யூமர் நிறுவனத்தினர் ஆகிய நாம்
GP பற்றரி வகைகள், FUJIFILM புகைப்படச்சுருள்கள்,
நட்ராஜ் போட்டோ அல்பவகைகள், கமராக்கள்
இணைந்த பிறபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு
யாழ்குடாநாட்டிற்கான விநியோகஸ்தராக
யாழ்ப்பாணம்
இல. 52, பலாலி வீதி
விஸ்ட்டா விஷன் கலர் லாப்
(VISTA VISION COLOUR LAB)
நிறுவனத்தினரை
நியமித்துள்ளோம் என்பதை அனைத்து
பாவனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

**Sole Agent**

HAYLEYS Consumer
Hayleys Consumer Products Ltd
25,Foster Lane, Colombo 10.
Tel : 2688956-9, 2688965-9

FUJIFILM | GP Batteries Powering a Greener Tomorrow | Natraj PHOTO ALBUM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் நடமாடும் சேவை அண்மையில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் டி.யூ.குணசேகரா மக்களின் குறைகளைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதையும் கிளிநொச்சி அரச அதிபர் உட்பட அதிகாரிகள் மக்களின் தேவைகளைக் கேட்டறிவதையும் முதலிரு படங்களிலும், நடமாடும் சேவையில் தமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதற்காக குழந்தையுடன் காத்திருக்கும் தாயொருவரையும் ஏனைய பொது மக்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.
(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

# மன்னார் மாவட்ட மக்களை என்றுமில்லாதவாறு கடும் வரட்சி வாட்டி வதைப்பதாக அங்கலாய்ப்பு

## குடிதண்ணீருக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவலம்

மன்னார், ஜூலை 20

மன்னாரில் கடும் வறட்சி நிலவுகின்றது. இதனால் குடி தண்ணீருக்காக மக்கள் நீண்ட தூரங்களுக்குச் செல்ல வேண்டி இருப்பதாகக் கூறுகின்றனர். வறட்சி காரணமாக கால் நடைகளும் நீருக்காக அலைந்து திரிகின்றன.

இதேவேளை கிராமங்களுக்கு குடி தண்ணீரை விநியோகித்து வந்த, பௌசர் வாகனங்களும் தற்போது தமது சேவையை நிறுத்தி உள்ளதால் கிராம மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மீளவும் பௌசர்கள் மூலம் தண்ணீரை விநியோகிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடும் வெயில் காரணமாக குளங்கள், கிணறுகள் வற்றியதால், வறட்சி நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

மழை எப்போது வரும், வறட்சி எப்போது நீங்கும் என்ற அங்கலாய்ப்பில் உள்ளனர் அந்தப் பிரதேச மக்கள். கடந்த காலங்களை ஒப்பிடும் போது, என்றுமில்லாத வகையில் இம்முறை வறட்சி நிலை ஏற்பட்டிருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

(1-6-80)

## கட்டாக்காலிக் கால் நடைகளால் பொது மக்களுக்கு இடையூறு

கிளிநொச்சி,ஜூலை 20

கிளிநொச்சி, தர்மபுரத்தில் கட்டாக் காலியாகத் திரியும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

போரினால் மக்கள் இடம் பெயர்ந்து சென்ற சமயம் கைவிட்டுச் சென்ற வளர்ப்பு கால்நடைகளே தற்போது பெருகிக் காணப்படுகின்றன.

இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகளால் வீதிகள் மற்றும் பொது இடங்களில் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-224)

## தர்மபுரம் சந்தை இயங்க ஆரம்பம்; ஆனால் கொள்வனவு செய்வோர் இல்லை

தர்மபுரம்,ஜூலை 20

கிளிநொச்சி, தர்மபுரம் மரக்கறி விற்பனை சந்தை இயங்க ஆரம்பித்துள்ளது.

யுத்தத்தினால் சேதப்பட்ட இந்தச் சந்தை தற்போது கொட்டகையின்கீழ் செயற்பட்டு வருகின்றது.

சந்தைக்குத் தினமும் மரக்கறிகள் போன்றவை எடுத்து வரப்படுகின்றன.

ஆனால் மரக்கறிகள் கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது.

(1-224)

## கிறவல் புளுதியில் தினமும் நனையும் பூநகரி - பரந்தன் வீதிப் பயணிகள்

பூநகரி, ஜூலை 20

பரந்தன் சந்தியிலிருந்து பூநகரி நோக்கிச் செல்லும் பயணிகள் தமது பிரயாணத்தின் போது பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பரந்தன் - பூநகரி வீதியானது கடந்த பத்து வருடங்களாக முற்றாகத் திருத்தப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. தினமும் ஏழிற்கு மேற்பட்ட பயணிகள் பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

எனினும் வீதியின் சீரின்மையால் மக்களும், பாடசாலை மாணவர்களும், அரச ஊழியர்களும் கிரவல் புளுதி படிந்த நிலையில் தமது பிரயாணத்தை மேற்கொள்வது பெரிதும் சிரமத்திற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

இதனால் மக்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமப்படும் நிலை காணப்படுகின்றது. (1-420)

## ஹற்றன் நஷனல் வங்கியின் கிளிநொச்சி கிளை திறக்கப்பட்டது

கிளிநொச்சி, ஜூலை 20

ஹற்றன் நஷனல் வங்கியின் 191 ஆவது கிளையாக கிளிநொச்சிக் கிளை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் கருணா நிலைய வளாகத்தில் இக்கிளை அமைந்துள்ளது. விருந்தினர்கள் மக்கள வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கிருஷாந்தி தம்பையா பிரதம விருந்தினராகக் கலந்து சம்பிரதாய' பூர்வமாக வங்கிக்கிளையைத் திறந்து வைத்ததோடு வங்கி நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் றொன் தம்பிராசா, கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இராஜகுரு, கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்கள உதவி ஆணையாளர் தயாபரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பஸ்,லொறி, உழவு இயந்திரம் ஆகியன குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டதுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு கணக்குகளும் அன்பளிப்பாக ஆரம்பித்து வழங்கப்பட்டன.

அத்துடன் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் அச்சு இயந்திரங்கள் (Duplo மிசின்) அன்பளிப்புச் செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இக்கிளையின் முகாமையாளராக சத்திய சீலன் தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். கிளிநொச்சியில் மக்களுக்கு கடன் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (1-405)

# கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியை மீள இயங்க வைக்க நடவடிக்கை

## சந்திரகுமார் எம்.பி.உறுதிமொழி

கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரியை மீளவும் அதேயிடத்தில் இயங்க வைப்பதற்கான முயற்சிகளை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் மேற்கொண்டுள்ளார்.




கிளிநொச்சியில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மக்களது தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அதன் பிரகாரம் ஏ -9 வீதியில் இயங்கி வந்த மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரியை கிளிநொச்சியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வரும் நிலையில் அங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் வகையிலும் பல்வேறு தொழிற்பயிற்சிகளை வழங்கும் பொருட்டு மீளவும் இய்க்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்துக் கல்லூரியை மீளவும் இயக்க வைக்க உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் உறுதிமொழி வழங்கினார். தொடர்ந்து சேதமடைந்த கட்டடங்களையும் அவர் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(1)



தொழிற் நுட்பக் கல்லூரியை இயக்குவது [illegible] நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் பொதுமக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதை முதலிரு படங்களிலும் சேதமடை[illegible] அவர் பார்வையிடுவதை மற்றைய படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கின்னஸ் சாதனை....

(15ஆம் பக்கத்தொடர்ச்சி....)

வருகின்றது என்பதனை இலங்கை அரசு இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. பதிலாக விமல் வீரவன்சவின் வாய்ச்சவடால் பேச்சுக்கு உலக நாடுகள் அஞ்சுவதாகவே இலங்கை அரசு இன்னமும் நம்புகிறது.

இதே போன்றதொரு நாடகப் பாணி நடவடிக்கையாகவே முன்னர் ஜனாதிபதி ஜே.ஆரும் தனது ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு எதிர்ப்பைக்காட்ட பிரதமர் பிரேமதாசவைப் பயன்படுத்தினார். ஆனால் பிரேமதாச தற்போதைய விமல் வீரவன்சவின் பாணியில் இந்தியாவுக்கு எதிர்ப்பைக் காட்டினாரில்லை. விமல் வீரவன்ச போன்று சந்திக்குச் சந்தி மக்களைத் திரட்டி எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினாரில்லை. சர்வதேச மாநாடுகளில் உரையாற்றக் கிட்டிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, ராஜதந்திர ரீதியில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை பிரேமதாச ஆணித்தரமாக வெளிப்படுத்தினார்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட விவாதங்களின்போது இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை பிரதமர் பிரேமதாச நாசூக்காக முன்வைத்தார். சர்வதேச ஊடகங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இந்தியா இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கி, ஆயுதங்களை வழங்கி இலங்கையில் பயங்கரவாதத்தைத் தூண்டி வருவதாக இந்தியா மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

பிரதமர் பிரேமதாச இந்திய அரசுமீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் உண்மையேயான போதிலும் அதற்காக இந்தியா இம்மியும் அசைந்து கொடுக்கவில்லை. பிரதமர் பிரேமதாசவின் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைக்காதது மட்டுமல்லாது, தனது குறிப்பிட்ட நடவடிக்கைகளையும் இந்தியா நிறுத்திக் கொள்வில்லை. அது மட்டு மல்லாது, ஒரு கட்டத்தில் இலங்கை வான் பரப்பினுள் அத்துமீறித் தனது விமானங்களை அனுப்பி வைத்து ஆகாய மார்க்கமாக வடபகுதி மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகித்து ஜே.ஆரின் அரசை மண்டியிட வைத்து தனது காலடிக்கு ஜே.ஆரின் அரசைக் கொண்டுவந்தது இந்திய அரசு. அந்த வேளையின் இந்தியாவின் அத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவிக்கவைக்க எந்தவொரு நாட்டின் ஆதரவையும் ஜே.ஆரினால் திரட்டிக் கொள்ள இயலாது போய்விட்டது. அமெரிக்காவைச் சீண்டி விடுவதற்காக பிரேமதாச மூலம் இந்தியா மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வார்த்தைகளால் தாக்கித் தொல்லை கொடுத்த ஜே.ஆருக்காக கடைசியில் அமெரிக்கா கூட ஆதரவாகக் குரல் கொடுக்கவில்லை. முடிவில் நாடும், தமது அரசும், தாமும் அரசியல் அரங்கில் போக்கிடமற்றுப் போக நேர்ந்துவிடுமோ என்ற அச்சம் காரணமாக ஜே.ஆர்.சாமர்த்தியமாக இந்தியாவின் கால்களிலே வீழ்ந்தார். கடைசியில் இந்தியா - இலங்கை ஒப்பந்தம் குறித்து அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் வரை பிரேமதாச அது குறித்து எதுவும் தெரியாத நிலையில் செயற்பட நேர்ந்தது.

ஜே.ஆர் இந்தியாவுக்கு எதிராக எதிர்ப்பை முன்னெடுக்கத் தம்மைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தியுள்ளார் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட பிரேமதாச, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் ஜே.ஆர் தாமாக நாட்டுமக்களது வெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ள இடமளித்து, அதற்குத் தூபம்போடும் வகையில் தாமும் பொதுமக்களைத் தூண்டி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பை உயர்வடைய வைத்தார்.

இன்று அதேபாணியில் விமல் வீரவன்சவைப் பயன்படுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.நா சபைக்கும், அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய சமூக நாடுகளுக்கும் எதிராகச் செயற்படும் நிலையில், இதன்முடிவு எங்குபோய் முடியுமோ என்பதனை அவர் உணர்ந்து கொண்டுதான் செயற்படுகிறாரா என்பது சந்தேகத்துக்கு உரியதொன்றே.

அரசு இதே போக்கில் நாடகம் நடத்துமானால், ஐ.நா.சபையிடம் இலங்கையை மண்டியிட வைக்க குறிப்பிட்ட நாடுகளால் இயலும். அத்தகையதொரு நிலையில் ரஷ்யாவாலும், சீனாவாலும் ஒப்புக்கு எதிர்ப்பு அறிக்கைகளை மட்டுமே வகுக்க இயலும். ஏனெனில் இலங்கையை அத்தகையதொரு பின்னடைவிலிருந்து காப்பாற்றுவதற்காக இவ்விரு நாடுகளும் அமெரிக்கா போன்ற வலுமிக்க நாடுகளுடன் முரண்பட்டுக் கொள்ளப் போவதில்லை.

அத்தகையதொரு நிலைமை ஏற்பட்டாலும்கூட அன்று ஜே.ஆரின் தலைமையிலான அரசு, இந்தியாவிடம் மண்டியிட்டது போன்று, ஐ.நா சபைமுன் மண்டியிட்டு பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இன்றைய அரசு ஆர்வம் காட்டாதிருந்தாலும் அதில் ஆச்சரியப்பட முடியாது.

'எமக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை தேவையில்லை. இந்த ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையைப் பெறுவதற்காக நாம் ஐரோப்பியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து ஏற்கப்போவதில்லை.

மேற்கண்ட விதத்தில் இறுமாப்புடன் பேசிவந்த இன்றைய அரசு, தற்போது ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளத்தான் தயார் எனக்கூறியுள்ளது. இந்த ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் நாம் முன்வைக்கும் நிபந்தனைகள் குறித்துப்பேச முன்வருமாறு முன்னர் ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்தபோதும் நாம் எமது நாட்டின் சுயாதிபத்தியத்தை அடகு வைத்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் எவ்வித பேச்சுக்களையும் மேற்கொள்ளப் போவதில்லை என இந்த அரசு வாயடித்து வந்துள்ளது.

இதேபோன்று எதிர்காலத்திம் இந்த அரசு ஐ.நா.சபை முன்பு அடிபணிந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. சரி; அத்தகையதொரு நிலையில் விமல்வீரவன்ச தரப்பினரின் கதி என்னவாகும். அத்தகையதொரு சந்தர்ப்பம் உருவாகும் வேளையிலேயே விமல் வீரவன்ச தரப்பினரின் உண்மையான தேசப்பற்றுக் குறித்துத் தெரிந்துகொள்ள முடியும்.

கியூபா நாட்டின் ஜனாதிபதி பிடல்கஸ்ரோ உண்மையானதொரு நாட்டுப்பற்றாளராக அடையாளப்படுத்தும் ஒருவராவார். அமெரிக்க அரசு அவரது முதல் எதிரி. அமெரிக்கா பிடல்கஸ்ரோவை ஒழித்துக்கட்டிவிட ஒன்றல்ல, இரண்டல்ல பல தடவைகள் முயற்சித்ததுண்டு. இத்தகையதொரு பின்னணியில் கியூபா நாட்டின் ஜனாதிபதி ஒரு சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்திய கருத்தை இங்கு குறிப்பிட்டுக் கூறியாக வேண்டும்.

"எமது நாட்டிலுள்ள அமெரிக்கத் தூரகத்தின் முன்னால் நாட்டு மக்களாலும் வேறு பலதரப்புக்களாலும் ஆயிரணக்கணக்கான எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் நடத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது தானும் அமெரிக்க நாட்டின் தேசியக் கொடியைத் தீயிட்டுக்கொழுத்தும் நடவடிக்கையை நான் ஒரு போதும் அனுமதித்ததில்லை".

★ ★ ★ ★

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையிடம்
29
★
05
★
1944



ஆண்டவனிடம்
20
★
07
★
2001

### அமரர் ஜோ.ச.சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை)

நாலிடத்தில் நல்லிதயம் கொண்டவரின் நட்புக் கிடைத்திடவும்
அவர்கள் எம்மை மதித்திடவும் வித்திட்டு விருட்சமாக வளர்த்திட்ட வித்தகரே
எம் வழிகாட்டியே வளர்ப்புத் தந்தையே!
எம் வளர்நிலை நோக்கிய பயணத்தில் எம்முடன் நீங்கள் உடனில்லாத
தவிப்பினையும் தாக்கத்தினையும் போக்கிட மாட்டீர்களா?

கயட்டை,
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

கண கிருஷ்ணராஜன்.

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2010

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 05.08.2010ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10000/=மும் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000/=மும் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 400/=உம் (வற் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலாக) செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று விண்ணப்பப் படிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 05.08.2010ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் யாவையும் இந்த அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் 05.08.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சேர்க்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 05.08.2010ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்தி பெற்றவர் கேள்வித் தொகையை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரை படத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு:

1. கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள், தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும், விளம்பரங்கள், விளம்பர பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.
2. கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தர கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. நல்லூர் உற்சவகால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
19.07.2010

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/569344)

## மரண அறிவித்தல்

### திருமதி அப்பையா இராசம்மா



உடுவில் மல்வத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா இராசம்மா 17.07.2010 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதி அப்பையாவின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, ஞானப்பிரகாசம், பிலோமினம்மா, சூசைநாதன் (சுவிஸ்), றீற்றம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்செல்வம், ரவிச்சந்திரன், காலஞ்சென்ற நடராசா, மற்றும் அருந்தவநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், அந்தோனிப்பிள்ளை, அன்ரன்லீனஸ், அகுஸ்டீன், யோன், யோசேப், ஜோர்ஜ், அனிற்ரா, அருள், ஜெயா, சீர், திரு, நந்தன், சுகந்தன், கேமா, திலீபன், பிறீமா, சசீமா, ஜீன்மேரி, சதீஸ்குமார், அபர்னா, அபீனா, ஆரண்யா, வினிஸ்டன், தனிஸ்டன், தாரணி, ஜெனிஸ்டன் ஆகியோரின் பேர்த்தியும், அருள், தீபன், அகற்சலா, காலஞ்சென்ற அகிலன் மற்றும் டர்சி, கொன்சி, டன்சன், டனி, ஆகாஸ், அலக்ஸ், அலோஜினி, பிரசன்னா, வினிஸ்ரா, மதுஷா, சுகன்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சூசைநாதன்(மகன் - சுவிஸ்)
மல்வம், உடுவில்.
0779917982


## கடை வாடகைக்குத் தேவை

யாழ்.நகருக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.
தொடர்பு:
071 1595220, 077 3055703
(101190)

## அம்மா ஸ்ருடியோ & நெற்கோம்

சகல விதமான கணனி தட்டச்சு சேவைகள் (தமிழ், ஆங்கிலம்) பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் செய்து தரப்படும். அத்துடன் சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் உத்தரவு பெற்ற மொழி பெயர்ப்பாளரினால் சிறந்த முறையில் மொழி பெயர்த்துக் கொடுக்கப்படும்.
No.28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 111530, 021 2221155, 021 5671055
(101179)

## வீடு விற்பனைக்கு

பலாலி றோட், கோண்டாவில் சந்தியில் 3½ பரப்பு காணி, வாகனத் தரிப்பிடம் உட்பட சகல வசதியுடன் கூடிய மேல் வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே.: 077 6039578
(101175)

## எழுதுவினைஞர் தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் உயர் கல்வி நிறுவனமொன்றுக்கு ஓரளவு ஆங்கில, கணனி அறிவுடைய பெண் எழுது வினைஞர்கள் தேவைப்படுகின்றனர். 20,21 ஆம் திகதிகளில் நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு : இல 01, பிறவுண்றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0777883084

## வீடுவளவு விற்பனைக்கு

வேரவல், இளவாலை வடக்கு, இளவாலை என்ற இடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் அதனுடன் 10 பரப்புக் காணியும், சிறுவிளான் என்ற இடத்தில் தனியான கிணற்றுடன் 42 பரப்புத் தோட்டக் காணியும் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு: தரகர் தேவை இல்லை.
தொடர்புகளுக்கு : 0213210902

## தவறிவிட்டது

கைதடி மேற்கு, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி இந்திரராசா லதாஜினி என்பவரது தேசிய அடையாள அட்டை (757671646V), கந்தசாமி லதாஜினி என்னும் பெயருடைய விசேட அடையாள அட்டையும் (091007332) கறுப்பு நிறக் கவருடன் கைதடிச் சந்திக்கும் யாழ்.நகருக்கும் இடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே: 077 4672302, 021 4902504


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டி: 4 சாதனைகள் படைப்பு; 2 சாதனைகள் சமன்



ரஜீம்ராஜ் | எம். நிசாந் | எஸ்.வாகீசன் | வி.கஜித்தா

வலி. வடக்கு ,ஜூலை 20

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் முதல் நாள் நிகழ்வில் நான்கு புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டதுடன் இரண்டு சாதனைகள் சமன் செய்யப்பட்டும் உள்ளன.

ஆண்களுக்கான களப்போட்டிகளில் இரண்டு புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டதுடன் இரண்டு சாதனைகள் சமப்படுத்தப்பட்டும் உள்ளன.

இதே போன்று பெண்களுக்கான போட்டிகளில் களப் போட்டியொன்றில் சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒரு சாதனை சமப்படுத்தப்பட்டும் உள்ளது.

* ஆண்களுக்கான சாதனைகளில் நீளம் பாய்தலில் சண்டிலிப்பாய்பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எ.ரஜீம்ராஜ் 7.00 மீற்றர் பாய்ந்து 2002 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வீரர் இ.ரஞ்சித்குமாரினால் ஏற்படுத்திய 6.71 மீற்றர் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

* முப்பாய்ச்சல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த என்.நிசாந் 13.60 மீற்றர் தூரம் பாய்ந்து 77 ஆம் ஆண்டு கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். இராஜசேகரம் 77 ஆம் ஆண்டு ஏற்படுத்திய 13.56 மீற்றர் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

* ஈட்டி எறிதல் போட்டியில் நல்லூர், பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.வாகீசன் 51.95 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்தி 2003 ஆம் ஆண்டு உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி. பகீரதன் 49.62 மீற்றர் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

* கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. மோகுநாத் 3.40 மீற்றர் பாய்ந்து 2002 ஆம் ஆண்டு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரஞ்சித்குமார் ஏற்படுத்திய சாதனையைச் சமப்படுத்தியுள்ளார்.

* பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.கஜிதா 1.61 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தி 2002 ஆம் ஆண்டு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சேந்தினி 1.55 மீற்றர் பாய்ந்து ஏற்படுத்திய சாதனையை முறியடித்துள்ளார்.

* முப்பாய்ச்சல் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கீர்த்திகா 10.24 மீற்றர் பாய்ந்து 2005 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.வாசுகி ஏற்படுத்திய சாதனையைச் சமன்செய்துள்ளார். (1-23-86)

# பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி தெல்லிப்பழை மாவட்டச்சம்பியனானது

வலி. வடக்கு ,ஜூலை 20

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகியவற்றுக்கு இடையே நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் அனைத்துப் போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் விவரங்கள் வருமாறு:

* தெல்லிப்பழை பிரதேச செயலகம் (92 புள்ளிகள் - முதலாம் இடம்)
* யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் (72 புள்ளிகள் - 2ஆம் இடம்)
* பருத்தித்துறை பிரதேச செயலகம், நல்லூர்ப் பிரதேச செயலகம் ( தலா 47 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடம்)
* உடுவில் பிரதேச செயலக அணி (44 புள்ளிகளைப் பெற்று - ஐந்தாம் இடம்)
* சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி ( 24 புள்ளிகளைப் பெற்று - ஆறாம் இடம்)
* சாவகச்சேரிப் பிரதேச செயலக அணி (21 புள்ளிகளைப் பெற்று- ஏழாம் இடம்)
* கோப்பாய் பிரதேச செயலக அணி ( 10 புள்ளிகளைப் பெற்று - எட்டாம் இடத்தையும்)
* சங்கானைப் பிரதேச செயலக அணி (07 புள்ளிகளைப் பெற்று -ஒன்பதாம் இடத்தையும்)
* ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் 5 புள்ளிகளைப் பெற்று- பத்தாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

(1-23-86)

# மாகாண தடகளப் போட்டிகளில் 16 பதக்கங்களைச் சுவீகரித்தது மகாஜன

யாழ்ப்பாணம்,ஜூலை20

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 16 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

அத்துடன் கல்லூரியின் மாணவி செ. கீர்த்திகா மாகாண மட்டச் சம்பியனானார்.

* சி.டிலக்சன்-13வயது - உயரம் பாய்தல்- 2ஆம் இடம்.
* ஞா. மதுசன்- 15 வயது- குண்டுபோடுதல் - 2ஆம் இடம்.
* ஞா. மதுசன்- 15 வயது- தட்டெறிதல் -முதலாம் இடம்.
* சு.சகானா -15 வயது- தட்டெறிதல்- முதலாம் இடம்.
* ஜெ.ஜனந்தன்- 17வயது-400 மீற்றர்- 2ஆம் இடம்.
* ஜெ.ஜனந்தன்- 17வயது-200 மீற்றர்- 3ஆம் இடம்.
* ஜெ.ஜனந்தன்- 17வயது- உயரம் பாய்தல் - முதலாம் இடம்.
* க.கஜனி- 19 வயது- குண்டு போடுதல்- முதலாம் இடம்.
* மு. கிருஸ்ணா - 19 வயது- உயரம் பாய்தல் - முதலாம் இடம்.
* ஆ.அஜித்தா- 19 வயது- முப்பாய்ச்சல்- 2ஆம் இடம்.
* தே.மோகுநாத்- 21வயது- கோலூன்றிப் பாய்தல்- 2ஆம் இடம்.
* சி. சாந்தகுமார்- 21 வயது - கோலூன்றிப் பாய்தல்- 3ஆம் இடம்.
* ந. நிசாந்- 21 வயது- முப்பாய்ச்சல்- முதலாம் இடம்.
* செ. கீர்த்திகா-21 வயது- தட்டெறிதல்- முதலாம் இடம்.
* செ. கீர்த்திகா-21 வயது- உயரம் பாய்தல் - முதலாம் இடம்.
* செ. கீர்த்திகா-21 வயது- முப்பாய்ச்சல் - முதலாம் இடம்.

# விண்டோஸை வீழ்த்தி மோகனதாஸ் சம்பியன்!

யாழ்ப்பாணம்,ஜூலை 20

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவுவிழாவையும் கைதடி மேற்கு குமரன் விளையாட்டுக்கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவையும் முன்னிட்டு தென்மராட்சி ரீதியாக நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

கைதடி மேற்கு சரஸ்வதி மைதானத் தில் நடத்தப்பட்ட 16 ஓவர்களைக் கொண்ட இச் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றில் மட்டுவில் மோகனதாஸ் விளை யாட்டுக் கழகமும் சாவகச்சேரி விண்டோஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 107 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புனிதன் 28 ஓட்டங்களையும், கரன்,மகிழன் ஆகியோர் தலா 17 ஓட் டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

விண்டோஸ் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் டிலான் 3 விக்கெட்டுக்களையும், கௌசீகன்,காண்டீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

108 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு களமிறங்கிய சாவகச்சேரி விண்டோஸ் விளையாட்டுக்கழகம் 13.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கௌசீகன் 23 ஓட்டங்களையும், சந்திரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் தீபன் 4 விக்கெட்டுக்களையும், மகிழன் 3 விக்கெட்டுக்களையும், சண், புனிதன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக் கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

இதனடிப்படையில் 34 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த புனிதனும், தொடர் ஆட்டநாயகனாக அதே கழகத்தைச் சேர்ந்த தீபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக எஸ். ஜெனோபன், கே.சச்சரூபன் ஆகியோர் கடமையாற்றினார்கள். (எ-288)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# வட மாகாணத் தடகளப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விவரங்கள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. மேலும் சில முடிவுகள் வருமாறு

*17 வயதுப்பிரிவு பெண்*

**கோலூன்றிப் பாய்தல்**

அ.பௌத்திரா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி),மோ. பிருந்தா (முல்லைத்தீவு துணுக்காய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை),சி.கிறிஸ்ரியா (பண்டத்தரிப்பு, ஜெசிந்தா றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை).

**குண்டு போடுதல்**

ஆர். தர்ஷிகா (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), நி. சாமந்தி( நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சி. கீர்த்திகா ( தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ந. வதனா(உரும்பிராய் இந்துக் கல்லூரி).

**தட்டெறிதல்**

செ. சுகன்யா -25.57 மீற்றர்( சுழிபுரம் விக்றோரியாக் கல்லூரி),ஆர். தர்சிகா (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), த.விதுசனா( வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), து.பானுஷா( வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**ஈட்டியெறிதல்**

சி. டென்சிகா-25.00 மீற்றர் (வட்டு. மத்திய கல்லூரி), கு.டார்சிகா ( யாழ்ப்பாணம் ஊரெழு ஸ்ரீகணேசா வித்தியாலயம்), ஆர். நயோமி( வவுனியா அல் அக்கல மகா வித்தியாலயம்), ரி. தீபனா ( மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**4 x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

**4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்,யாழ்ப்பாணம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம்.

(எ-86)



யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் வீரர்கள் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதையும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் முதலிரு படங்களிலும் போட்டிகளில் இடம்பெற்ற நடனக் காட்சியையும் மாணவர்கள் போட்டிகளில் ஈடுபடுவதையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month - தபால் மூலம் -

July.2010 to Dec..2010

தமிழ் மொழி மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா

~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா

~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா

~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா

~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010


# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல: ஜே/1572

## பதவி வெற்றிடம்

பதவி : கணக்காளர்

குறியீட்டு இல : 104/10

சம்பள அளவுத் திட்டம் :

| 10700 | 120 x10 | 130x10 | 13200 |
|---|---|---|---|
| 128400 | 1440x10 | 1560x10 | 158400 |

பதவி எண்ணிக்கை : 01

### கல்வித் தகைமைகள்

அ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் 03 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 12 ஆவது சம்பளத் திட்டத்திலான மேற்குறித்த பதவிகளில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)

I) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

II) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர் பிரிவில் சித்தி / க.பொ.த (உ/த) கணக்கியல் உள்ளடங்கியதாக மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

★ வயது:

விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தாங்கள் கடமைபுரியும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

- சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கும், கணனி பற்றிய அறிவு உள்ளோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கம் கோரும் பிணைப்பணத்தை ரொக்கமாகவும், ஆதனமாகவும் செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2010
- விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்,
ப.தெ.வ.அ.கூ. சங்கம்,
கே. கே.எஸ். வீதி, தாவடிச் சந்தி,
கோண்டாவில்.

விண்ணப்பக் கடித உறையின் மேல்பக்க இடது மூலையில் "கணக்காளர், குறியீட்டு இல.104/10" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(சி/569345)

# உடுவிலில் நாளை மத்தியஸ்தர் தின விழா

வலி.வடக்கு, ஜூலை 20

உடுவில் மத்தியஸ்தர் சபையின் ஏற்பாட்டில் மத்தியஸ்தர் தினவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உடுவில் மத்தியஸ்தர் சபை தவிசாளர் சு.தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளது

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிமன்ற நீதிபதியுமான ஜெ.கஜநிதிபாலனும்,

சிறப்பு விருந்தினராக உடுவில் பிதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனும் கௌரவ விருந்தினர்களாக இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி. சி.ஆனந்தி, சட்டத்தரணி நா. அரியபுத்திரன், உடுவில் பிரதேச செயலக தலைமைப்பீட கிராம அலுவலர் நா. நவரத்தினராசா, கிராம அலுவலர் மா. இராமலிங்கம் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் ம.சதானந்தன், சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத் தலைவர் சி.குமரவேல், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்.என். ஹேரத், சுன்னாகம் இலங்கை வங்கி சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார், மத்தியஸ்தர்சபை நிகழ்ச்சிதிட்ட உதவியாளர் ப.ஜனார்த்தனன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளா (20-86)


# கணனி காட்சியறை திறப்பு

இடம்: ILE SUPPLY CHAIN CENTER
91,பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(திரும்றைக் கலாமன்றத்துக்கு முன்பாக)

காலம்: இன்று (20.07.2010) செவ்வாய்க்கிழமை

நேரம் : பி.ப 4 மணி

Metropolitan நிறுவனத்தின் கணனி காட்சி அறை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப் படுகின்றது. அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(101189) நிர்வாகம்.


# NOTICE TO PUBLIC

## SHOP PREMISES BEARING ASSESSMENT NOS.38-40 STANLEY ROAD JAFFNA

Members of the public are hereby informed that the above mentioned property and premises bearing Assessment Nos.38-40 Stanley Road Jaffna absolutely belongs Sivagadadcham Millson of No.79 Chapel Street Jaffna subject to Life Interest thereon in favour of Suppiah Sivagadadcham and wife Indranee alias Sariojini also of the same place by virtue of the Deed of Donation No.993 dated 29th September 2009 attested by R.Viswanathan of Colombo Notary Public, and that the present owner nor the Life Interest holders thereof have not appointed any Attorney or Attorneys on their behalf to deal with the said property and premises and the public are hereby warned not to attempt to procure any rights or interests in any form whatsoever or to deal with the said premises or any part thereof in any manner over the said property and premises or any part thereof.

It is hereby further notified that the Special Power of Attorney No.2835 dated 20-04-2003 attested by A.Chinniah of Colombo Notary Public by which Karthigesu Vaithilingam Raveendran (Holder of N.I.C.No.590773140 V) of No.110 Brown Road Jaffna was appointed as the Attorney of the owners of the said property has already been cancelled and revoked and had ceased to be in force or virtue and that the said Raveendran or Karthigesu Vaithilingam Suveenthiran alias Suseenthiran has nothing to do with the said property and premises or any part thereof but they are in unlawful illegal and forcible occupation of the above mentioned Shop Premises and has no power or authority whatsoever to deal with the said property and premises or any part thereof in any manner whatsoever and that legal proceedings are being instituted in the District Court of Jaffna against.them to have them ejected from the said premises and to recover damages from them.

This notice is published on the instructions of the lawful owners aforesaid of the above premises.

This 18th day of July 2010.

VIJITHA MEEGAHAWATTA BA. LLB
*Attorney -at- Law & Notary Public, Justice of Peace (Whole island)*
*24A, Kadawata Road, Kalubovila, Dehiwala.*

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

## கேள்வி அறிவித்தல் -2010

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் கீழ்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1. நிர்மாண பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) பதிவுசெய்யப்பட்ட தகுதிவாய்ந்த பதிவுத் தரமுடைய ஒப்பந்தக்காரர் கீழ்குறிப்பிடப்படும் தொகைகளைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை 27.07.2010 ஆம் திகதி பி.ப.3மணிவரை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை, பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும், இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கும் 29.07.2010 ஆம் திகதி பி.ப. 3மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. கேள்விகள் 30.07.2010 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அவ்வேளையில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ.இல | வேலையின் பெயர் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி (12%)+ NBT(3%)(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | இயக்கச்சி உப அலுவலகக் கட்டடம் மீள்நிர்மாணம் | C9 | 5000.00 | 750.00 | 112.50 |
| 02. | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை புதிய பொது நூலகக் கட்டடம் மீள்நிர்மாணம். | C9 | 7500.00 | 750.00 | 112.00 |
| 03. | தர்மக்கேணி சனசமூக நிலையக் கட்டடம் அமைத்தல். | C9 | 5000.00 | 750.00 | 112.00 |
| 04. | கச்சார்வெளி வீதி புனரமைப்பு. | C9 | 10000.00 | 750.00 | 112.00 |
| 05. | மலசல கூடம் அமைத்தல் பளை. | C9 | 7500.00 | 750.00 | 112.00 |

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.
19.07.2010

சிதம்பரப்பிள்ளை சிவப்பிரகாசம்
விசேட ஆணையாளர்/செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

(சி/569347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாம், தென்னாபிரிக்காவைப்போல ஈழத் தமிழினமும் விரைவில் வெல்லும்!

## பழ.நெடுமாறன் நம்பிக்கை



பெங்களூர், ஜூலை 20

வியட்நாம், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் வெற்றி பெற்றதைப்போல ஈழத் தமிழினமும் விரைவில் வெற்றி பெறும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதியைக் கைப்பற்றுவதற்காகவே இலங்கையில் சர்வதேசத் துறைமுகத்தை சீனா கட்டி வருகிறது. இதை இந்தியா உணர்ந்து, சீனாவின் அந்நடவடிக்கையைத் தடுக்க வேண்டும் - என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

கர்நாடகத் தமிழர் இயக்கம் சார்பில் 'ஒருங்கிணைந்த தமிழ்த் தேசிய இன விடுதலை எழுச்சி மாநாடு' பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் பேசியபோதே நெடுமாறன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் பேசியவை வருமாறு -

உலகத் தமிழர்களின் வரலாற்றில் இது மிகவும் சோதனைக்காலம். தமிழன் என்ற அடையாளமே தெரியாமல் தமிழர்களை அழிக்கும் பணியில் இந்தியா உள்ளிட்ட சில உலக நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. அந்த நாடுகள் சேர்ந்து இலங்கைப் போரில் அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்ய உதவின. இதை உலக நாடுகள் வேடிக்கை பார்த்தன.

எந்த ஓர் இனத்தையும் வல்லரசு நாடுகள் ஒடுக்கின என வரலாறு கிடையாது. பிரெஞ்சு மற்றும் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான போரில் வியட்நாமும், வெள்ளையர்களுக்கு எதிரான போரில் தென்னாபிரிக்காவும் வெற்றிபெற்றதைப் போல ஈழத் தமிழினமும் வெற்றிபெறும்.

இலங்கையில் நடந்து முடிந்த போர், உலகத் தமிழர் விடுதலைக்கான முதல் கட்ட போராட்டமாகும். இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்த கதி மலேசிய நாட்டுக்கோ, தமிழ்நாட்டுக்கோ, பிற மாநிலத் தமிழர்களுக்கோ கூட நேரலாம்.

இனிமேலும் எந்த ஒரு நாட்டின் உதவிக்காகவும் காத்திருக்காமல், ஏமாறாமல் உலகிலுள்ள 10 கோடித் தமிழர்களும் ஒன்று சேர்ந்து உலகத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை நடத்தி வெற்றிகாண வேண்டிய தருணம் வந்துவிட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவியதன் மூலமாக இந்தியா தனது தலையில் தானே மண்ணை வாரிப் போட்டதுபோல் ஆகிவிட்டது.

அந்தப் போரில் இலங்கைக்கு பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் உதவின. இந்நாடுகளுக்கு இலங்கை மீது ஏன் அவ்வளவு அக்கறை என்று பார்த்தால் தங்களது இராணுவ மையங்கள், விமான நிலையம் போன்றவற்றை அமைக்க இலங்கையை அந்நாடுகள் பயன்படுத்திக்கொள்கின்றன.

குறிப்பாக சீனா, இந்தியப் பெருங்கடலை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும் இந்தியாவுக்கு எதிராக இலங்கையைத் தூண்டிவிடவும் இலங்கையுடன் நட்புறவை ஏற்படுத்தி வருகின்றது. பல்வேறு நாட்டுக் கப்பல்கள் கிழக்கு நாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால் இலங்கை, இந்தியாவுக்கு இடைப்பட்ட இந்தியப் பெருங்கடல் வழியாகத்தான் செல்ல வேண்டும்.

இந்தக் கடற்பகுதியை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே இலங்கையில் ரூபா 5 ஆயிரம் கோடியில் சர்வதேச துறைமுகத்தை சீனா கட்டி வருகிறது. மேலும் இந்தியாவிலேயே மும்பையிலுள்ள பெரிய விமான நிலையத்தை விடவும் மிகப்பெரிய விமான நிலையத்தை திருகோணமலையில் கட்டுவதற்கு சீனா நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மஹிந்த ராஜபக்ஷ ஒப்புதல் அளித்துவிட்டார்.

இனி சீனா அமைக்கும் குறிப்பிட்ட துறைமுகம், விமான நிலையம் போன்றவற்றால் இந்தியாவுக்குப் பேராபத்துக் காத்திருக்கிறது. இதை டில்லி உணரவில்லை. சீனாவின் இச் சதித் திட்டத்தை இனியாவது இந்தியா உணர வேண்டும். சீனாவின் திட்டங்களைத் தடுக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

## இந்தியச் செய்திகள்

# இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதல் 50 பேர் மரணம்;100 பேர் படுகாயம்

## மேற்கு வங்கத்தில் பயங்கரம்



கொல்கத்தா, ஜூலை 20

மேற்கு வங்கத்தில் இரண்டு ரயில்கள் நேற்று அதிகாலையில் நேருக்கு நேர் மோதிக் கொண்ட கோர விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர். மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சைந்தியா என்ற ரயில் நிலையத்தில் இந்தப் பயங்கர விபத்து நேர்ந்தது. நேற்று அதிகாலை 1.54 மணியளவில் ரயில் நிலையத்தின் 4ஆவது பிளாட்பாரத்தில் புறப்படத் தயாராக பாகல்பூர் - ராஞ்சி வனாஞ்சல் எக்ஸ்பிரஸ் நின்றுகொண்டிருந்தது.

அப்போது அதே தண்டவாளத்தில் வேகமாக வந்த நியூ கூச்பிகார் - சியால்தா உத்தரபங்கா எக்ஸ்பிரஸ் ரயில் வேகமாக மோதியது.

இந்தக் கோர விபத்தில் 50 பேர் வரை உயிரிழந்துள்ளனர். ஆனால் உயிர்ப்பலி அதிகரிக்கும் எனத் தெரிகிறது. மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் விரைவாக நடந்து வருகின்றன.

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்; மத்திய அரசு உறுதியான நடவடிக்கை

## அமைச்சர் வாசன் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 20

தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவத்திற்கு மத்திய - மாநில அரசுகள் இணைந்து முற்றுப்புள்ளிவைக்கும் - என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

ராஜஸ்தான் இளைஞர் அமைப்பின் சார்பில் 47 ஆவது புத்தக வங்கி நிகழ்ச்சி சென்னை தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் வாசன் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறக்கூடா என்று மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. தமிழக அரசும் மத்திய அரசும் வரும் நாட்களில் இணைந்து செயற்பட்டு, இதுபோன்ற சம்பவங்களுக்கு உறுதியோடு முற்றுப் புள்ளி வைக்கும்.

மத்திய அரசு இதற்கான நடவடிக்கைகளை உறுதியோடு மேற்கொண்டு, இது போன்ற நிலை மீனவர்களுக்கு ஏற்படாத வகையில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும். இதுகுறித்து தமிழக காங்கிரஸ் இயக்கமும் தெளிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.



சர்வதேச அளவில் 8 முதல் 12 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான யோகாசன போட்டியில் வெற்றிபெற்ற கோவை மாணவன் நிரஞ்சன்.

# சிறப்புத் தூதர் என்று பேசி ஈழத் தமிழர் பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சி

## கருணாநிதி மீது வைகோ குற்றச்சாட்டு



நெல்லை, ஜூலை 20

இலங்கைக்குச் சிறப்புத் தூதரை அனுப்ப வேண்டும் என்று கூறி இலங்கைத் தமிழர் பிரச்சினையை முதல்வர் கருணாநிதி மீண்டும் திசை திருப்பப் பார்க்கிறார் - என்று ஈழத்தமிழர் ஆதரவுப் பீரங்கி வைகோ கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் சிறப்புத் தூதரை அங்கு அனுப்பவேண்டும் எனக் கருணாநிதி கூறுவது மக்களைத் திசை திருப்பும் பேச்சாகும்.

ஏற்கனவே இந்தியப் பிரதிநிதிகளாகச் சென்ற எம்.கே.நாராயணன், சிவசங்கர மேனன் போன்றவர்கள், தமிழர்களை அழிக்கத்தான் சென்று திரும்பினர்.

தமிழகத்தில் எழுத்துரிமை, பேச்சுரிமை, பிரசார உரிமைகளைப் பாதிக்கும் வகையில் பாதுகாப்புச் சட்டம் ஏவப்படுகிறது. சீமான் பேசியதில் எந்தத் தவறும் இல்லை.

இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்த ஐ.நா. செயலரின் ஆலோசனைக் குழுவுக்கு இலங்கை கடும் கண்டனம் தெரிவித்தது. இதற்கு மாநில அரசோ, மத்திய அரசோ எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# வரும் சட்டசபைத் தேர்தலுக்குப் பின் அ.தி.மு.க. என்ற கட்சியே இருக்காது

## மத்திய அமைச்சர் மு.க.அழகிரி பேச்சு

ஆண்டிப்பட்டி, ஜூலை 20

சட்டசபைத் தேர்தலுக்குப்பிறகு அ.தி.மு.க. என்ற கட்சியே இருக்காது - என்று மத்திய அமைச்சர் மு.க.அழகிரி பேசினார்.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தொகுதி கடமலைக்குண்டுவில் தி.மு.க. சார்பில் நடந்த இலவச மருத்துவ முகாமில் தி.மு.க. தென்மண்டல அமைப்புச் செயலாளரான அமைச்சர் மு.க.அழகிரி கலந்து கொண்டு பேசுகையில் மேலும் கூறியவை வருமாறு -

திருச்செந்தூர் தொகுதி இடைத்தேர்தலின் போதே அடுத்த சட்டசபைத் தேர்தல் முடிவில் அ.தி.மு.க. இருக்காது என்று நான் கூறினேன். அதனை இப்போதும் வலியுறுத்தி கூறுகிறேன். வரும் சட்டசபைத் தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க. என்ற கட்சி இருக்காது.

இங்கு பேசியவர்கள் பலர் ஜெயலலிதா இந்தத் தொகுதியில் எம்.எல்.ஏ. ஆன பிறகு ஒரு முறை கூட இங்கு வரவில்லை என்றார்கள்.

இன்றைய தினம் முதல்-அமைச்சர் கலைஞர் 87 வயதிலும், அதிகாலை 4 மணிக்கு எழுந்து நாளிதழ்களை பார்க்கிறார். அதில் வரும் குறைகளை சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் பேசுகிறார். தொடர்ந்து கட்சித் தொண்டர்களுக்கு கடிதம் எழுதும் அவர் கோட்டைக்கு சென்று மக்கள் பணியாற்றுகிறார். பின்னர் இல்லம் வரும் அவர் அங்கு உணவருந்தி விட்டு மீண்டும் கட்சிப்பணி, அரசியல் பணி என்று சுணக்கமின்றிப் பணியாற்றுகிறார் - என்றார். நான் முதல்வரைச் சந்தித்த போது விரைவில் தேர்தலை வைத்து விடலாமே என்றேன். ஆனால் கலைஞரோ தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த ஒரு ஆண்டு காலத்தில் மேலும் பல நல்ல திட்டங்களை வழங்க வேண்டும் என்று கூறினார். - இப்படி அவர் கூறினார்.

# தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப முயன்ற 7 அகதிகள் இலங்கைப் படையால் கைது!

இராமேஸ்வரம், ஜூலை 20

இராமேஸ்வரத்தில் இருந்து கள்ளத் தோணி மூலம் இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயன்ற 7 அகதிகளை இலங்கைக் கடற்படை பிடித்துச் சென்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றிய விவரம் வருமாறு -

இராமேஸ்வரத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் இருந்து 7 பேர் இலங்கைக்குத் தப்பிச் சென்றனர். கள்ளத்தோணி மூலம் அவர்கள் தலைமன்னாருக்குக் கடலில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த வழியாக வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களது படகைச் சுற்றி வளைத்தனர். 7 அகதிகளையும் கைது செய்து, படகையும் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்களை இலங்கைக்குக் கொண்டு சென்றனர்.

இந்தத் தகவலை இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர் என தமிழகக் கடலோரக் காவல்படைப் பொலிஸாரும், கியூப் பிரிவுப் பொலிஸாரும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கபூர்வமற்ற பேச்சுகளுக்காக இந்தியா செல்வதில் அர்த்தமில்லை

## பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பேட்டி

இஸ்லாமாபாத், ஜூலை 20

ஆக்கபூர்வமான முடிவுகளைத் தராத, அர்த்தமற்ற பேச்சுகளை நடத்துவதற்காக இந்தியா செல்ல நான் விரும்பவில்லை என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. முதலில் உயர் அதிகாரிகள், வெளியுறவுச் செயலாளர்கள் ஆகியோர் மட்டத்தில் பேச்சுகள் நடைபெற்றன.

அவற்றின் தொடர்ச்சியாக, கடந்த 15 ஆம் திகதி இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுகள் நடைபெற்றன. இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற அந்த பேச்சுகள் தோல்வியடைந்தன.

காஷ்மீரில் நிலவும் நிலைமைகள் குறித்து பேச்சுகளின்போது பேசப்படவேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியது. மேலும், பேச்சுகளின்போது இந்தியத் தலைவர்களுடன் அடிக்கடி தொலைபேசியில் பேசிக்கொண்டு இருந்தார் என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மீது பாகிஸ்தான் அமைச்சர் முறைப்பாடு தெரிவித்தார். இதனால், இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுகளில் கடும் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

எனினும், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி, ''இந்தியாவுடன் பேச்சுகளைத் தொடர விரும்புகிறோம்'' என சனிக்கிழமை தெரிவித்தார். இந்தச் சூழ்நிலையில், ''ஆக்கபூர்வமான பேச்சுகள் இடம்பெறாதபட்சத்தில் இந்தியாவுக்குச் செல்ல எனக்கு விருப்பம் இல்லை'' என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் அமைச்சர், சையீ தாவர்ஷியுடன், இஸ்லாமாபாத்தில் குரேஷி கூட்டாகப் பேட்டியளித்தார்.

அப்போது, அவர் கூறியவை வருமாறு:-

''ஓய்வு எடுப்பதற்கான பயணமாக இந்தியாவுக்குச் செல்ல நான் விரும்பவில்லை. அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான, பலன்களைத் தரும் பேச்சுகள் நடத்துவதற்காக செல்லவே விரும்புகிறேன். அதற்கு சரியான சூழ்நிலையை உருவாக்கவேண்டும். மேலும், பேச்சுகளுக்கு முழு அளவில் இந்தியா தயாராக வேண்டும்.

''பேச்சுகளில் தீவிரவாதம் குறித்து இந்திய தரப்பினர், பிரச்சினையை எழுப்பினால் அதற்கு முன்னுரிமை அளிக்கலாம். ஏனெனில், எங்களுடைய கவலையாகவும் தீவிரவாதம் இருக்கிறது. ஆனால், மும்பைத் தாக்குதல் பிரச்சினையை மட்டும் பேசுவது ஏன்? அதேவேளை, அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு, ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருக்கும் காஷ்மீர் குறித்தும் பாகிஸ்தான் கவலை அடைந்துள்ளது.

''தீவிரவாதம் குறித்து இந்திய மக்களுக்குப் பதிலளிக்கவேண்டிய கட்டாயம் இந்திய தரப்புக்கு இருக்குமானால், எங்களுடைய மக்களுக்கும் நாங்கள் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் எமக்கு உண்டு. எங்களுடைய நாடும் ஒரு ஜனநாயக நாடு தான். கூட்டுப் பேச்சுகளில் அடையாளம் காணப்பட்ட எட்டு வகையான பிரச்சினைகளைத் தவிர வேறு எதையும் கிருஷ்ணாவிடம் நான் எழுப்பவில்லை.

''பேச்சு நடந்துகொண்டு இருக்கும் போது டில்லிக்கு கிருஷ்ணா தொலைபேசியில் தொடர்புகொண்டார் என்று ஒருபோதும் நான் கூறவில்லை. அவருடைய குழுவில் (இந்தியத் தரப்பினர்) இருந்தவர்களுக்கு, பேச்சுகளில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து தொலைபேசி வாயிலாக டில்லியிலிருந்து அறிவுரைகள் வந்துகொண்டே இருந்தன என்று தான் நான் தெரிவித்தேன்.

''பேச்சுகள் நடைபெறும் சமயத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை குறித்து நானும் கிருஷ்ணாவும் ஒப்புக்கொண்டால், உடனடியாக அந்த அறையிலிருந்து இந்தியக் குழுவைச் சேர்ந்த ஒருவர் வெளியேறி டில்லியுடன் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டுவிட்டுத் திரும்புவார். இவ்வாறு டில்லிக்கு தகவலைத் தெரிவித்து, அங்கிருந்து அளிக்கப்படும் அறிவுரையை கேட்டே இந்தியக் குழுவினர் பேச்சுகளைத் தொடர்ந்தனர்.

''பாகிஸ்தானுக்கு எவ்வித அரசியல் அதிகாரமும் இன்றி எஸ்.எம்.கிருஷ்ணா வந்தார் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவிலான அதிகாரம் மட்டுமே அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது என்று தான் நான் தெரிவித்தேன்.

இந்தியா தெரிவிக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் பரிசீலிக்க பாகிஸ்தான் தயாராக இருக்கும்போது, பாகிஸ்தான் தெரிவிக்கும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள இந்தியா தயாராகாதது ஏன்?''

இவ்வாறு குரேஷி கேட்டார்.

உலக அரங்கில்



பாகிஸ்தான், இஸ்லாமாபாத்திற்கு வருகை தந்துள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானியைச் சந்தித்த போது.....

# 4 பாகிஸ்தானியர்களுக்கு ஷார்ஜாவில் சிறைவாசம்

துபாய், ஜூலை 20

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வசிக்கும் 4 பாகிஸ்தானியர்கள், தங்களுடன் வேலை செய்த ஒருவரின் பணத்தை திருடியதுடன் அவருடன் முறைகேடாக உறவு கொண்டனர் என முறைப்பாடு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 4 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. விசாரணை முடிவில் நீதிமன்றம் அவர்களுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. தண்டனைக் காலம் முடிந்ததும் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படவேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாள குண்டு வெடிப்பில் 10 பேர் படுகாயம்

காத்மாண்டு, ஜூலை 20

நேபாளத்தில் காய்கறிச் சந்தையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 10 பேர் படுகாயமடைந்தனர்.

பாரா மாவட்டம் கலையா பகுதியில் மக்கள் நெருக்கம் மிகுந்த காய்கறிச் சந்தையில் சனிக்கிழமை இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களில் இருவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. மற்றவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

# தற்கொலைக் குண்டுத் தாக்குதல்: ஈராக்கில் 43 பேர் பலி; 40 பேர் காயம்!

பாக்தாத், ஜூலை 20

ஈராக்கில் இரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 46 பேர் உயிரிழந்தனர். 46 பேர் காயமடைந்தனர்.

இவ்விரு தாக்குதல்களும் அல்-குவைதா எதிர்ப்புப் படையினரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கு பக்தாத் பகுதியிலுள்ள அலுவலகத்தில் அல்-குவைதா எதிர்ப்புப் படையினர் சம்பளம் பெறுவதற்காக நின்றுகொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த தற்கொலைப் படை வீரர் தாக்குதல் நடத்தினார். இதில் 43 பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

அதேபோல, சிரியாவின் எல்லையை ஒட்டிய அல்-காய்ம் என்ற இடத்தில் அல்-குவைதா எதிர்ப்புப் படையினரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். இவ்விரு தாக்குதல்களும் ஈராக்கில் கடந்த இரு மாதங்களில் நடந்த தாக்குதல்களில் மோசமானவை என கருதப்படு கிறது. இத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.

# ஆப்கானிஸ்தான் சிறையில் குண்டுத் தாக்குதல்: இருவர் மரணம்; 11 கைதிகள் தப்பியோட்டம்!

காபூல், ஜூலை 20

மேற்கு ஆப்கானிஸ்தானிலுள்ள சிறையில் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் காவலாளியும், கைதியும் பலியாயினர். மூன்று கைதிகள் காயமடைந்தனர். தாக்குதலையடுத்து தப்பியோடிய 19 கைதிகளில் எட்டு கைதிகள் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர்.

இத்தாக்குதலில் 11 கைதிகள் சிறையிலிருந்து தப்பிவிட்டனர் என பாரா மாகாணத் துணை ஆளுநர் யூனஸ் ரசோலி தெரிவித்தார். அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

86 கைதிகள் மட்டும் இருக்கவேண்டிய சிறையில் 347 கைதிகள் இருந்தனர். நாட்டிலுள்ள பல சிறைகளில் நிலைமை மோசமாக உள்ளது என்றும், நிதி பற்றாக் குறையின் காரணமாக இவ்வாறு உள்ளது என்றும் யூனஸ் ரசோலி தெரிவித்தார்.

கிழக்கு காபூலில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் மூன்று பேர் பலியாயினர். புதன் கிழமை காபூலில் 60 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச மாநாடு நடைபெறவுள்ள தருணத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானிலிருந்து 2014 இற்குள் அந்நியப் படைகள் வெளியேறும்

லண்டன், ஜூலை 20

ஆப்கானிஸ்தானிலிருந்து 2014ஆம் ஆண்டுக்குள் அந்நியப் படைகள் வெளியேறும் என்று பிரிட்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் பயங்கரவாதிகளை ஒழித்து, அங்கு ஸ்திரத்தன்மையுள்ள அரசை கொண்டு வருவதற்காக அமெரிக்கா தலைமையிலான சர்வதேச படைகள் குவிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதிகளை ஒழிக்கும் பணியில் அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், 2014 ஆம் ஆண்டுக்குள் நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் என்று லண்டனிலிருந்து வெளியாகும் இன்டிபென்டன்ட் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆவணமொன்றை ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி ஸ்டெபான் டி மிஸ்டுரா ஆப்கானிஸ்தான் உயர் அதிகாரிகளிடம் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

2014ஆம் ஆண்டுக்குள் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை முற்றிலுமாக ஒழித்துவிட்டு நேட்டோ படைகள் வெளியேறுவதற்கு முழு ஒத்துழைப்பை ஆப்கானிஸ்தான் அளிக்கும் என்றும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸி. தேர்தலில் யாருக்கு வெற்றி? ஒக்டோபஸ் கணித்துத் தெரிவிப்பு

கான்பெரா, ஜூலை 20

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில், எந்த அணி வெற்றி பெறும் என்பதை ஒரு ஒக்டோபஸ் கணித்து புகழ்பெற்றது. இப்போது ஆஸ்திரேலியா தேர்தலிலும் யார் வெற்றிபெறுவார்கள் என்பதை ஒரு ஒக்டோபஸ் கணித்துக் கூறியுள்ளது.

உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்தபோது; லீக் ஆட்டத்திலும், காலிறுதி ஆட்டத்திலும், அரையிறுதியிலும் , இறுதிப்போட்டியிலும் எந்த அணி வெற்றிபெறும் என்பதை மிகச் சரியாக போல் எனப்படும் ஒரு ஒக்டோபஸ் கணித்துக் கூறியது. அதன் கணிப்பின்படியே எல்லா முடிவுகளும் வெளியாகின.

இந்தப் போட்டிக்குப் பின்னர் அதற்கு ஓய்வு கொடுக்கப்படும் என்றும் அது இனிமேல் எந்த நிகழ்ச்சியையும் கணித்துக் கூறாது என்றும் அதன் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவில் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்தத் தேர்தலில் அந்நாட்டின் முதல் பெண் பிரதமரான ஜூலியா கில்லார்ட் ஆளும் தொழிற்கட்சிச் சார்பில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து லிபரல் கட்சிச் சார்பில் அந்த கட்சியின் தலைவர் டோனி அப்போட் போட்டியிடுகிறார்.

இந்தத் தேர்தலில் யார் வெற்றி பெறப் போகிறார் என்பதை அறிந்துகொள்ள மக்கள் ஆவலுடன் இருக்கிறார்கள். இதனால் இந்த முறையும் முடிவை முன்கூட்டியே தெரிந்துகொள்ள ஒரு ஆக்டோபஸின் உதவி நாடப்பட்டது.

சிட்னி நகரிலுள்ள கடல் அறிவியல் நிலையத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் கசாண்ட்ரா என்ற ஒக்டோபஸிடம் ஜோசியம் கேட்கப்பட்டது. ஜூலியாவின் உருவப்படத்துடன் கூடிய அட்டையும், டோனி அப்போட்டின் படம் கொண்ட அட் டையும் ஒரு தண்ணீர் தொட்டியில் வைக்கப்பட்டு, அதில் ஒக்டோபஸ் விடப்பட்டது.

இந்த 2 படங்களில் ஜூலியாவின் உருவப்படத்தை அந்த ஒக்டோபஸ் தேர்வு செய்தது. இதன் மூலம் ஜூலியாதான் வெற்றிபெறுவார் என்று கணிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலரிமாளிகை, கட்டுநாயக்க, இரத்மலானை போன்று

# வடக்கிலும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு சுமந்திரன் எம்.பி. கடிதம்

கொழும்பு, ஜூலை 20

கட்டுநாயக்க, இரத்மலானை, கொலன்னாவ ஆகிய இடங்களிலும் அலரிமாளிகை அமைந்துள்ள இடத்திலும் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கியது போன்று வடக்கிலுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமத்திரன் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் அக்கறை காட்டினாலும், மக்களின் நலனையும் கவ்னத்தில் எடுக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பை விட நாட்டின் பாது காப்பு பெரிய விடயமாகக் கருதவேண்டிய தில்லை.

இராணுவத்துக்குத் தேவையாகவுள்ள பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களை விடுவிக்குமாறு கண்டிப்பான உத்தரவை விடுப்பதாக ஜனாதிபதி கூட்டமைப்பினருடன் நடந்த பேச்சில் குறிப்பிட்டிருந்தார். மூன்று தசாப்தங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக பாதுகாக்கப்படும் வலி.வடக்கு மற்றும் ஏனைய பிரதேச மக்கள் மீளக்குடியமர வசதி செய்யப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் திருமுறிகண்டி, சாந்தபுரம், கேப்பாப்புலவு ஆகிய பிரதேச மக்கள் சொந்த இடம் திரும்பியும் மீளக் குடியமர ஏற்பாடு செய்யப்படவில்லை. அவர்கள் வீடுகளை அமைப்பதற்கான கூரைத்தகடுகள் வந்து சேரவில்லை. என்பதால் மீளக்குடியமர அனுமதிக்கவில்லை என்று தாங்கள் தெரிவித்ததாக அறிகிறோம்.

கூரைத்தகட்டுடன் கப்பல் வருவதாக தெரிவித்து மாதங்கள் பல கடந்துவிட்டதென மக்கள் கூறுகின்றனர்.

மக்களின் மீளக்குடியமர்வு விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக நாம் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் இந்திரபுரம், திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் உள்ள நிலங்கள் இராணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்படுவதாக அறிகின்றோம். இந்நிலையில், உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள காணி உரிமையாளர் களுக்கு வேறு இடங்களில் காணி வழங்கப் போவதாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடக அமைச்சர் கூறியுள்ளமை எம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேங்களில் உள்ள பாதுகாப்பு வலயங்களை மூடி மக்களை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-1)

## உணவு அருந்தியவேளையில் புரைக்கேறிய நிலையில் மாணவி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வீட்டில் உணவு அருந்திய வேளை புரைக்கேறியதால் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்தவரும் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை மாணவியுமான ஜோசப் யுலைன்டா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றுமுன்தினம் இரவு புரைக்கேறி மூச்சுத்திணறிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிர்பிரிந்தது.

இவர் பாடசாலையில் மாணவத் தலைவியாக இருந்தவர் என்றும் பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-23)

## பாராட்டு விழா

சுழிபுரம், ஜூலை 20

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற சி.சிவகணேசசுந்தரனுக்கு, சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் பாடசாலை ஆசிரிய குழுவினரால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட வலிகாமம் உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரன் அதிபருக்கு நினைவுச்சின்னத்தை அணிவித்து கௌரவித்தார். (ஒ)

# தவறணையில் குடித்த கள்ளு எமனானது: ஒருவர் பலி; எட்டுப்பேர் மோசமாகப் பாதிப்பு!

## சாவகச்சேரி, நுணாவில் கிழக்கில் அனர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு கற்குழியில் உள்ள தவறணையில் விற்பனை செய்யப்பட்ட கள்ளு நஞ்சானதில் அதனை அருந்திய ஒருவர் மரணமானதுடன் மேலும் 8 பேர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட எட்டுப் பேரின் நிலை மோசமான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்படும் போதே இடைவழியில் நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னப்பு செல்வராசா (வயது - 50) என்பவர் மரணமடைந்துள்ளார்.

இதில் சிவன்கோயில் பகுதி சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களான எம்.கந்தையா (வயது - 56), மா.சிவகுமார் (வயது - 40), எம்.கிருஷ்ணகுமார் (வயது - 37), நுணாவில் கிழக்கைச் சேர்ந்த வி.சுப்பிரமணியன் (வயது - 58) அதே இடத்தைச் சேர்ந்த யு. வெள்ளச்சாமி (வயது - 32), கல்வயலை சேர்ந்த எஸ்.ஜேசுதாஸன் (வயது - 55) ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சாவகச்சேரி பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16-78-207)

# வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்க ஒன்றியம் உதயம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடபிராந்தியத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் ஒன்றுசேர்ந்து 'வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியம்' என்ற அமைப்பை நேற்று அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்களே இணைந்து இந்த ஒன்றியத்தை அமைத்துள்ளனர்.

இன்றைய காலகட்டத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு உரிமையாளர்களின் நலனையும் ஒற்றுமையையும் மற்றும் மக்களுக்கான சிறந்த சேவையைப் பேணும் முகமாகவும் இந்த ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து மாவட்டச் சங்கங்களையும் சார்ந்த 15 பேர் இந்த ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஒன்றியத்தின் தலைவராக பொ. கெங்காதரன் (யாழ்.மாவட்டம்), செயலாளராக ஆர்.அன்ரன் பிறேமகாந்தன் (மன்னார்), பொருளாளராக எ.ராஜேஸ்வரன் (வவுனியா) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒன்றியத்தின் போசகராக வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரத்தினம் செயற்படுவார். (ஒ-1)

# யாழ். முனீஸ்வரன் வீதி நடைபாதைக் கடைகள் அடுத்த ஜனவரி முதல் வேறு இடத்தில்!

## அதுவரையிலும் அங்கு இயங்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். நகரில் முனீஸ்வரன் வீதியில் இயங்கும் சகல நடைபாதைக் கடைகளும் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரையே அந்த இடத்தில் இயங்கும். அதன்பின்னர் வேறு இடம் ஒன்றுக்கு மாற்றப்படும்.

யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவுக்கும் நடைபாதை வியாபாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நகரின் முக்கிய வீதியாக விளங்கும் முனீஸ்வரன் வீதியை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் உள்ளதை உணர்ந்து வேறு ஓர் இடத்தைத் தெரிவு செய்யுமாறு மேயர் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நடைபாதை வியாபாரிகள் மேயரின் ஆலோசனையின்படி தற்போதைய இடத்திலேயே 31.12.2010 வரை நடைபாதைக் கடைகளை இயக்குவது என முடிவு செய்தனர். (ஒ-1)

# ஐ.நா.-இலங்கை முறுகலால் விதவைப் பெண்களும் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 20

யுத்தத்தின் போது கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு உதவியளிப்பது குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்புடன் பேச்சு நடைபெறுகிறது. இருந்தும் அண்மையில் ஏற்பட்ட முறுகல் நிலையினால் பேச்சுகள் தொடரமுடியாத நிலையில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது ஏற்பட்ட மோதல்களில் கணவரைப் பறிகொடுத்த சுமார் 8ஆயிரம் இளம் விதவைகள் உதவி கோரி புனர்வாழ்வு அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் புலிகளின் முக்கியஸ்தர்களான யோகி, கே.வி.பாலகுமரன் ஆகியோரின் மனைவியரும் அடங்குவர் என்றும் அமைச்சர் சொன்னார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசசார்பற்ற நிறுவனங்களும் அரச அமைப்புகளும் அவ்வப்போது விதவைப் பெண்கள் தொடர்பாக நடத்தும் கணக்கெடுப்புகளில் முன்னுக்குப் பின் முரணான புள்ளி விவரங்களை வெளியிடுகின்றன. - என்று கூறினார். (ஒ-சி)

# துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் பலி

கொழும்பு, ஜூலை 20

இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிப் பிரதேசத்தில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

குறித்த நபரின் வீட்டுக்குள் நுழைந்த ஆயுததாரிகள் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர்.

சம்பவத்தில் 51 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

# காரைதீவு செம்மொழி விழாவுக்கு கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லாதது ஏன்?

## தகுதி அற்றவரே முதன்மை விருந்தினர் என்கிறார் பியசேன எம்.பி.

கொழும்பு, ஜூலை 20

காரைதீவில் நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாணத் தமிழ்ச் செம்மொழி விழாவில் கலந்துகொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எவ்விதத்திலும் அருகதையற்றவரே முதன்மை விருந்தினராக விழாவில் கலந்துகொண்டுள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.பியசேன 'உதயனு'க்கு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற செம்மொழி விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமைக்குரிய காரணம் என்ன என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வேண்டத்தகாதவர்கள் என்ற மாயையை மக்கள் மத்தியில் தோற்றுவிப்பதற்காகவே திட்டமிட்டு இவ்விழா நடத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்மவர்களை அவமதிக்கும் நோக்குடன் சில அரசியல் கட்சி உறுப்பினர்களின் மறைமுக சதியினால் இவ்விழா நடந்தேறியுள்ளது.

அரசியல் கட்சி உறுப்பினர்களை இவ் விழாவுக்கு அழைப்பதில்லையென ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டது என்று ஒரு கதையை விழா ஏற்பாட்டாளர்கள் தற்போது கசிய விட்டிருக்கிறார்கள். இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படவில்லை என அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டவர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்பதுடன் அவர் இந்த விழாவில் விருந்தினராகக் கலந்துகொள்வதற்கு எவ்விதத்திலும் அருகதையற்றவர் என்பதைக் கூற விரும்புகிறேன்''- இப்படி பியசேன எம்.பி. தெரிவித்தார். (ஒ-சி)

# பொன்சேகாவுக்கு ஆதரவாக நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 20

முன்னாள் இராணுவத் தளபதியும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகாவின் விடுதலையைக் கோரி அவருடைய கட்சி நாளை புதன் கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளது. கம்பெல் பார்க்கில் மாலை 3.00 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்சேகாவின் விடயத்தில் படையினர் நீதிமன்ற உத்தரவை மீறிச் செயற்படுகின்றனர் என்று தேசிய சுதந்திர முன்னணி எம்.பி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணித்தியாலத்திற்கு ஒருவர் வீதப்படி கொழும்பில் டெங்குநோய்த் தொற்று

கொழும்பு, ஜூலை 20

கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நாளாந்தம் இருபது பேர்வரை டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப் படுகின்றனர் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்குக்காய்ச்சலின் நிலைமை குறித்து வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களில் தனிப்பட்ட மற்றும் ஆயுள்வேத சிகிச்சை பெறும் நோயாளர்கள் பதிவுகளில் உள்ளடக்கப்படவே இல்லை. கொழும்பில் ஒரு மணித்தியாலத்தில் ஒரு டெங்கு நோயாளி அடையாளம் காணப்படுகிறார்.

15 பேர் வரை இந்த வருடம் கொழும்பில் மாத்திரம் டெங்குக்குப் பலியாகினர். 1,255 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 148 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. 20,647 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளார்கள்.

நேற்று கொழும்பில் 10,200 வீடுகளை பரிசீலித்தோம். 1,563 வீடுகளின் வளவில் டெங்குகளைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் காண முடிந்தது.

டெங்கினால் பாதிக்கப்பட்டிருப்போரின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் இந்நோயைக் குணப்படுத்த ஒத்துழைப்பு வழங்கத் தவறுகின்றார்கள் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (சி)

## பிரிட்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கும் முதல் 10 மொழிகளில் தமிழ் மொழியும் உள்ளடங்குகிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றுக்கு சராசரியாக 8 ஆயிரம் அவசர அழைப்புகளும், 12 ஆயிரம் அவசரம் சாராத அழைப்புகளும் தமிழ் மொழி பேசுபவர்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த வரிசையில் உள்ள ஏனைய மொழிகளாக போலந்து, ரோமான், பஞ்சாப், போர்த்துக்கல், ஸ்பெனிஸ், துருக்கிய மொழி, சோமாலி, பிரெஞ்சு மற்றும் பெங்காளி என்பனவும் உள்ளடக்கப்படுகின்றன.

இதேவேளை பிரிட்டனில் ஆங்கிலம் தவிர தமிழ் மொழியிலும் அவசர அழைப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் பொலிஸார் அறிவித்து அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்தநிலையில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து பிரிட்டனுக்குச் சென்ற தமிழர்களின் காரணமாகவே தமிழ்மொழி அங்கு முதல் 10 இடங்களுக்குள் வந்துள்ளது எனக் கூறப்படுகிறது. (அ-சி)

## முஸ்லிம்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றிய அவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்குப் பிரிப்பு அல்லது மீள் இணைப்பு தொடர்பாக முஸ்லிம் கட்சிகளிடையே வெவ்வேறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. ஆனால், முஸ்லிம்களுக்குத் தனியான சுயாட்சி வழங்கப்பட்டால் வடக்கு - கிழக்கு இணைந்திருப்பது பற்றியோ அல்லது பிரிந்திருப்பது பற்றியோ எமக்குப் பிரச்சினை இல்லை.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் நுஆ ஆகிய நான்கு முஸ்லிம் கட்சிகளிடையே இது விடயத்தில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டது.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக இந்த நான்கு கட்சிகளிடமும் வேறுபட்ட கருத்துகள் காணப்பட்ட போதிலும், முஸ்லிம்களுக்கு தனியான சுயாட்சி வழங்கினால் வடக்கு - கிழக்கு இணைந்திருப்பது தொடர்பிலோ அல்லது பிரிந்திருப்பது தொடர்பிலோ தமக்குப் பிரச்சினையில்லை என்று இந்த நான்கு முஸ்லிம் கட்சிகளும் இணங்கின.

இந்த இணக்கப்பாடு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது - என்றார் (அ-சி)

**யாழ்.நகரில் பிரண்ட்ஸ் இசைக்குழுவினர்**

கொழும்பு அக்னி புகழ் நவகம்புற கனேஸ், அப்சராஸ் புகழ் தம்பிராஸ், S.மோகனரூபன், S.K.நாதன், T.மேரி இவர்களுடன் யாழ்.முன்னணிக் கலைஞர்களும் இணைந்து. வசந்தம் TV, நேத்ரா TV புகழ்

இசை வாரிதி யாழ்.ஜேம்ஸ் அன்பரசியின்

**பிரண்ட்ஸ் இசைக்குழுவினர்,**

நடனத்துடன் இசை வழங்குகின்றார்கள்

உங்கள் விழாக்கள் சிறப்புற அழைத்து மகிழுங்கள்.

தொ.பே.0776366038.

இல, 11, சென் மேரிஸ், முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை.

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி மறுசீரமைப்புக் குழுவினால் கடந்த இரண்டு மாதகாலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாகத் தயாரிக்கப்பட்ட யோசனை அறிக்கை கட்சியின் செயற்குழுவிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இது நாட்டின் ஜனநாயகத்தை வலுவடைதாக்கும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. அத்துடன் நாட்டிற்கு பலம் வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்றும் அவசியம். ஐ.தே.கவுக்குள் ஜனநாயகம் நிலவுகின்றமை நாட்டின் பாரிய வெற்றி. இதன் மூலம் கட்சியில் நிலவிய பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என நம்புகிறேன்.

கட்சியின் தலைமைத்துவத்தை தேர்தல் மூலம் தெரிவுசெய்ய வேண்டி ஏற்படின் மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோருக்கும் அதற்கான சந்தர்ப்பந்தை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் ஒன்றை ஓரிரு வாரத்தில் தயாரிப்பதற்கு கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

குறிப்பாக கட்சியின் தலைவர் அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்றை நியமித்துள்ளார். - என்றார் சௌவிரத்ன. (அ-சி)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல் களப்பிலிருந்த கண்டல் தாவரங்களை அழிக்க நேரிட்டது எனவும் இதனால் அங்கு மேற்கொள்ளப்படும் இறால் வளர்ப்புப் பாதிப்படைந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

நந்திக்கடல் களப்பின் உற்பத்தி அளவை மேலும் உயர்த்தும் வகையில் அடுத்த இரண்டாண்டுக் காலப் பகுதியில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கண்டல் தாவரங்களை முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டு வருவதே இதன் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் நந்திக் கடல் களப்பில் மீன்பிடி நடவடிக்கையை மேற்கொள்ளும் மீனவர்கள் நன்மையடைவார்களெனக் கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் மேலும் கூறினார்.

அத்துடன் யாழ். குடாநாட்டிலுள்ள கடற்கரைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையிலுள்ள சுண்ணாம்புக் கற்பாறைகளைக் காண்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்கின்றனர் எனக் கூறிய அவர், அங்கு உரிய முகாமைத்துவத் திட்டத்தின்கீழ் கடற்கரைப் பூங்காவொன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (அ-சி)

**Royal College**
**Chemistry - Physics**

Poobalasingam Book Depot

Hospital Road, Jaffna. 021 222 6693

Vembady Junction, Jaffna. 021 222 1637

## சர்வகட்சிகுழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறியவை வருமாறு:-

தற்போது எம்மால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்றை நான் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கின்றேன்.

இதற்கான அனுமதியை நான் எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஏற்கனவே பெற்றுள்ளேன். வரவு - செலவுத் திட்ட விவாத நாள்களில் இதை சமர்ப்பிக்க நான் திட்டமிட்டிருந்தேன். அப்போது பொருத்தமாக இருக்காததால் இப்போது சமர்ப்பிக்கின்றேன்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவால் இதை சமர்ப்பிக்க முடியாது. அவரது நிலைமை அப்படி. நான் இதைச் சமர்ப்பிப்பதையிட்டு அவர் நிச்சயம் மகிழ்ச்சியடைவார்.

இப்போது ஊடகங்களுக்கு இதை வெளியிட்டிருப்பது தொடர்பாகவும் அவர் மகிழ்ச்சியடைவார். - என்றார். (அ-சி)

## குடும்பநல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

தர்சிகாவின் மரணம் தொடர்பாக இடம்பெற்ற பிரேத பரிசோதனை அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் மரணத்துடன் சம்பந்தப்பட்ட டாக்டர் பிணையில் விடுவிக்கப்பட்டமையும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அடக்கம் செய்யப்பட்ட தர்சிகாவின் சடலத்தை தோண்டி எடுத்து கொழும்புக்கு கொண்டு சென்று சட்ட வைத்திய நிபுணரின் பிரேத பரிசோதனை அறிக்கை பெறவேண்டும். அவர் பாலியல் வல்லுறுவுக்கு உட்படுத்தப் பட்டாரா என்பதையும் சோதனை செய்ய வேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலத்தை கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான செலவை வழங்கத் தயாராக இருக்கிறோம் என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிவான் இது தொடர்பான தீர்ப்பை இன்று வழங்குவதாகத் தெரிவித்தார். (ஒ-1)

## ஜனாதிபதி முடக்கி வைத்திருந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டி ரேணுகா ஹோட்டலில் வைத்து சர்வகட்சிக் குழுவின் அறிக்கையை ஆர்.யோகராஜனும் நிசாம் காரியப்பரும் ஊடகங்களுக்கு வழங்கினர்.

அப்போது இதுதொடர்பாக அவர்கள் கூறியவை வருமாறு:-

இந்நாட்டுப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றைக் காணும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திஸ்ஸவிதாரணவின் தலைமையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 கட்சிகள் அங்கம் வகித்தன.

### 128 தடவைகள் கூடிப்பேசி உருவாக்கப்பட்ட தீர்வு இது

இந்தக் குழு 128 தடவைகள் கூடிப்பேசி அரசியல் தீர்வு தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வந்தது. இந்தக் குழுவின் சிபார்சுகள் அனைத்தும் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவிடம் இறுதியாக ஒப்படைக்கப்பட்டன. அவர் அவற்றை அடிப்படையாகக்கொண்டு அறிக்கை ஒன்றைத் தயாரித்து ஜனாதிபதியிடம் ஒப்படைத்தார்.

அரசியல் தீர்வு வழங்குவதில் தாம் உறுதியாக இருப்பதாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு செயற்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் ஜனாதிபதி காட்டிக் கொண்டார். அவர் வெளிநாடுகளுக்குச் சென்றபோதும், வெளிநாட்டுத் தலைவர்கள் இங்கு வரும்போதும், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவைக் காண்பித்து அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்குத் தான் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன் என்று கூறிவந்தார்.

ஆனால், இந்தக் குழுவின் அரசியல் தீர்வு யோசனை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டு 13 மாதங்கள் ஆகிவிட்டன. அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து ஜனாதிபதி இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அந்த அறிக்கையின் பிரதிகளை எவருக்கும் வழங்கவுமில்லை.

### அரசமைப்பு திருத்தம் தொடர்பாக பேசப்படுவதால் பொருத்தமான நேரம் இது என்று தெரிவிப்பு

இது இவ்வாறு கிடப்பில் உள்ளபோது இப்போது ஜனாதிபதி முறைமையை நீடிப்பது தொடர்பாகப் பேசப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையை இந்நாட்டுக்குத் தெரியப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நாம் நினைத்து இதை ஊடகங்களுக்கு வெளியிடுகிறோம்.

ஜனாதிபதிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக பேச்சுகள் தொடங்கப்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இதை வெளியிடுவதன் மூலம் இதுவும் அப்பேச்சுகளில் உள்ளடக்கப்படும் என்று நாம் நம்புகிறோம்.

### இந்நாட்டு மக்களும் சர்வதேசமும் பரிசீலனை செய்வது பொருத்தம்

அதுமட்டுமல்லாது, இதை நாட்டு மக்களும், சர்வதேசமும் பரிசீலனை செய்து நிரந்தர அரசியல் தீர்வும் நிலையான சமாதானமும் ஏற்பட இந்த அறிக்கை வழிவகுக்கும் என்றும் நாம் நம்புகிறோம்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர்களான நாங்கள் இருவரும் கையொப்பமிட்டு இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறோம். இது சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கை என்பதையும் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த அறிக்கையும் இதுவே என்பதையும் நாம் உறுதிப்படுத்துகிறோம்.

இதுதொடர்பாக எழும் சவால்களுக்கு நாம் முகம் கொடுக்கத் தயார். இந்த அறிக்கை தொடர்பான முழுப் பொறுப்பையும் நாம் ஏற்கின்றோம். எம்மிடம் இதுதொடர்பாக கேள்விகளை எழுப்ப முடியும்- என்று அவர்கள் கூறினர். (அ-சி)

**Mr. Concrete**

For all your concrete needs!

SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk

Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333

உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்

- Concrete Blocks
- Concrete Hollow Blocks
- Columns
- Lintels
- Paving Stones

இலவச விநியோகம்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org